மறக்குமோ... நெஞ்சம்?

ஆர். மணிமாலா

1

"அயிகிரி நந்திநி நந்தித மேதிநி
விஸ்வ விநோதிநி நந்ததுதே
கிரிவர விந்த்ய ஸிரோதி ந்வாஸிநி
விஷ்ணு விலாஸிநி ஜிஷ்ணுநுதே!"

அந்த பிரம்மாண்ட பங்களாவிலிருந்து டேப்பின் வழியிாக கசிந்து லட்சுமியின் காதில் இனிமையாக மோதியது. சில நிமிடங்கள் அந்த தேவகானத்தை கண்மூடி ரசித்தாள்.

மிகப் பெரிய பங்களா அது! விலையுயர்ந்த கிரானைட் கற்களால் வெளிப்புற சுவர் முழுக்க அலங்கரிக்கப்பட்டு தக தகத்தது. அழகான தோட்டம்! அளவாய் வெட்டப்பட்ட குரோட்டன்ஸ் பந்துகள். நட்ட நடுவில் சிமெண்ட் பெண் சிமெண்ட்குடத்திலிருந்து தண்ணீர் விட்டுக் கொண்டி ருந்தாள். போர்டிகோவில் நாலைந்து கார்கள்... ஸ்டீயரிங் தொட காத்திருந்தன.

கிட்டத்தட்ட முப்பது நாப்பதடி தொலைவில் நின்றபடி, ஒருவித பிரமிப்போடு அந்த பங்களாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி.

"வாம்மா... வந்து நேரமாச்சா?" புண்ணியகோடி தோட்டவீடு எனப்படும் ஒரு போர்ஷனிலிருந்து வெளிப்பட்டார்.

நாலைந்து போர்ஷன்கள். அந்த பங்களாவில் பணிபுரியும் ஆட்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது.

அவர் நெற்றியில் பட்டையாய் விபூதி! அப்போதுதான் குளித்துவிட்டு வந்திருப்பார்போல்...உடம்பெங்கும் கொப்புளங்களாய் நீர்த்தி வலைகள். வேட்டியும், தோளில் துண்டும், கண்களில் கனிவுமாய் லட்சுமியை வரவேற்றார் அந்த கார் டிரைவர்.

"இப்பத்தாண்ணா... ரொம் நாழியாயிடலை!"

"சித்த பொறுத்து போலாம். அம்மா இன்னும் எந்திரிச்சி இருக்கமாட்டாங்க. எட்டு மணிக்குத்தான் எந்திரிப்பாங்க..."

ஆச்சர்யமாய் நிமிர்ந்தாள் லட்சுமி.

"அப்படீன்னா..."

"அந்த பாட்டு சத்தத்தைக் கேக்கறியா? அது அவங்களோட பொண்ணு விஜியோட டேஸ்ட்! காலைல எந்திரிச்சதும், குளிச்சு முடிச்சு பூஜை பண்ணலைன்னாலும் இந்த பாட்டை தினசரி போடடுக் கேக்கணும் அதுக்கு!"

லட்சுமி மகிழ்ந்து போனாள்.

'இத்தனை சின்ன வயதில் எத்தனை பக்தி? அதுவும் இந்த காலத்தில்' குழந்தை கடவுள் கிருபையால் நன்னா இருக்கட்டும்! மனதார வாழ்த்தினாள்.

"அண்ணா! அவங்கள்ட் என்னை பத்தி சொல்லி வச்சேளா?"

"ம்... சொல்லிட்டேன்மா! உன்னை பத்தி நான் சொன்ன வரைக்கும் திருப்திதான். ஆனா ஐயர் வீட்டம்மான்னதும் கொஞ்சம யோசிக்க அப்படியான்னாங்க. எதுக்கும் நேர்ல பார்த்து பேசினப்புறம் முடிவு பண்றேன்னாங்...!"

"பண்ணட்டும்... பண்ணட்டும். எதையும் பேசித்தானே முடிவு பண்ணுவாங்க. ஆமாண்ணே இந்த அம்மா எப்படி?"

"எந்த குறையும் சொல்ல முடியாது. பணம் இருக்கேங்கிற திமிர், ஆணவம் எதுவும் அந்தாம்மாக்கிட்டே பார்க்க முடியாது. ஆனா அதையெல்லாம் சேர்த்து வச்சு பெரிய ஐயாகிட்டேயும்,

சின்னய்யாக்கிட்டேயும், சின்னம்மாக்கிட்டேயும் குவிஞ்சு கிடக்கு!"

லேசாய் உதறியது அவளுக்கு.

இதற்கு முன் வேலை பார்த்த செட்டியார் வீட்டில் அதட்டி ஒரு வார்த்தை பேசியதில்லை.

"பயப்படாதே தங்கச்சி... இருந்தாலும் கொஞ்சம் பார்த்து நடந்துக்க. சின்ன பொண்ணு விஜி அவங்கம்மாவ கொண்டு பிறந்திருக்கு. அதுங்க ரெண்டு வேற வயித்துல பிறந்ததாலோ என்னமோ... அதுக்கு நேர்மார்?"

"என்ன சொல்றீங்க? அவங்க ரெண்டு பேரும்?"

"ஆமாம்மா! ஐயாவோட மொத சம்சாரத்து குழந்தைகள். அவங்க இறந்துட்டாங்களாம். இவங்க ரெண்டாவது சம்சாரம்!"

ஏனோ, லட்சுமியின் வயிற்றை சுருக்கிட்டு இழுத்தது. தன் குழந்தைகளை சுமந்த வயிற்றை அழுத்திப் பிடித்து பெருமூச்செறிந்தாள்.

"என் கண்ணுங்களா எங்கே இருக்கீங்க?"

ஆனாலும் லட்சுமிம்மா... ரெண்டு வாரம் பயமில்லாம நடமாடலாம் ஏன்னா, அந்த மூணு பேருமே இப்ப ஊர்ல இல்லை!"

2

திறந்த வாயை மூட மறந்தாள் லட்சுமி. அந்த பங்களாவினுள் கால் வைக்கவே கூசியது. தன் பாதம் பட்டு அந்த ரத்தின கம்பளம் அழுக்காகி விடுமோங்கற பயம்.

அழகிய வட்ட வடிவ ஸோபா! சுகுணாவை மெத்தென்று உள் வாங்கியிருந்தது.

சிரித்த முகம். நேர்த்தியாக போடப்பட்ட சிம்ப்ளான மேக்கப். சிறிய கொண்டை. காதோர வெள்ளை ரோஜா. முன் நெற்றியில் சுருள் சுருளாய் கேசம். மை விடமலேயே

கருப்படித்த நீள் விழிகள். இள ரோஸ் நிற லிப்ஸ்டிக். கைகளில் இரண்டு வளையல், இடது கையில் தங்கத்திலிலான வாட்ச். கழுத்தில் தாலி சரடுடன் ஒரு செயின். காதில், மூக்கில் வைரம், அவ்வளவுதான். கருநீல பிரிண்டட் சில்க் அவள் சிவந்த நிறத்தை பளிச்சிட்டுக் காட்டியது.

'அடேயப்பா! என்ன ஒரு அழகு? என்ன வயதிருக்கும்? இவளே ஒரு இளவயதுப் பெண்ணாய் இருக்க, இவளுக்கு ஒரு வயது வந்தப் பெண் இருக்கிறாளா?' லட்சுமி அவளைப் பிரமித்துப் போனாள்.

கையில் ஏதோ ஃபைலை பிரித்து வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.

"மேடம்...இவங்கதான்லட்சுமி!வரச்சொல்லிஇருந்தீங்களே...!" புண்ணியகோடி பவ்யமாய் அறிமுகப்படுத்தினார்.

சுகுணா லட்சுமியை கண்களால் ஆராய்ந்தாள்.

'ஒரு காலத்தில் நல்ல நிறமாய் இருந்திருப்பாள். வறுமையோ, வயோதிகமோ, அதை மட்டுப்படுத்தி விட்டிருந்தது. கண்களில் கனிவு. உருவத்தில் பணிவு. மிக எளிமையான தோற்றத்தை தந்த வாயல் புடவை. கொல்லென்று நரைத்து விட்ட தலை. நாலணா சைஸில் பளிச்சென்று, குங்குமம். எல்லாவற்றையும் மீறி முகத்தில் படிந்துவிட்ட ஒருவித சோகம்!' பார்த்த முதல் பார்வையிலேயே லட்சுமி மேல் இரக்கத்தை ஏறபடுதுதிவிட்டது.

மெலிதாய் அவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"வாங்க...! அ...புண்ணியகோடி...விஜி லைப்ரரி போகணும்னு சொன்னா... நீங்க போய் காரை ரெடி பண்ணுங்க!"

புண்ணியகோடிபோய்விடசுகுணாஅவளிடம்திரும்பினாள்.

"இதுக்கு முன்னாடி, எங்கே வேலை செஞ்சிட்டிருந்தீங்க?"

"திருவான்மியூர்ல...!"

"அப்படியா? ம். நீங்க பிராமின்னு கேள்விப்பட்டேன். எங்க வீட்ல எல்லோரும் அசைவம் சாப்பிடுவோம் நீங்க எப்படி...?"

"அதுவும் நல்லா சமைப்பேங்க. நான் ஒரு செட்டியார் வீட்லதான் பதினஞ்சு வருஷமா வேலை செஞ்சேன். நான் அசைவம் சாப்பிட்றதில்லை தவிர, சமைப்பேங்க திடீர்ன காரைக்குடிக்கு போய் அவங்க செட்டிலாய்ட்டாங்க. புண்ணிய கோடி அண்ணனுக்கு அந்த வீட்டு கார் டிரைவர் தம்பி. அந்த ரீதியிலதான் உங்க வீட்டுக்கு... வேலை கேட்டு வந்திருக்கேன்."

"நல்லது... எவ்வளவு சம்பளம் எதிர்ப்பார்க்கறீங்க?"

"ரெண்டு வேளை சாப்பாடு, இருக்க இடம் இது போதுங்க...!"

"பொழைக்கத் தெரியாத மனுஷியா இருக்கீங்களே! கவலைப்படாதீங்க.. இங்க உங்களுக்கு எல்லாமே திருப்தியா கிடைக்கும். அப்புறம்... நீங்க மட்டும்தானா?"

"அ... ஆமாம்!"

"கணவர்,குழந்தைங்க...?"

அவள் கேட்டு முடிக்கவில்லை. குபுக்கென்று பொங்கியது கண்ணீர்,

"இருக்காங்க, ஆனா எங்கே இருக்காங்கன்னு தெரியாதுங்க!"

"அந்த கேள்வியை கேட்டிருக்க கூடாதோ... பாவம்!"

"சரிங்.. இன்னைக்கு வேணாம். நாளை புதன். நாளைலேர்ந்து வேலைக்கு வந்துடுங்க. தோட்ட வீட்லே நாலஞ்சு அறைகள் இருக்கு. அதில் ஒண்ணுல நீங்க தங்கிக்கலாம்!"

"ரொ... ரொம்ப நன்றிங்க!" உணர்ச்சிப் பெருக்குடன் கையெடுத்து கும்பிட்டாள் லட்சுமி!

"குட்மார்னிங் மம்மி!" மாடிப்படிலியிருந்து தபதபவென்று கன்னுக்குட்டியாய் ஓடிவந்து சுகுணாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் 'இச்' பதித்தாள் விஜி

"குட்மார்னிங் டியர்! சாப்பிட்டியா?"

"ஆச்சு மம்மி! பிடிக்கவேயில்லை. ஹோட்டல்லேர்ந்து வரவழைச்சியா? சுத்தப்போர், நாக்கே செத்து போச்சு மம்மி!

நல்லதா.. ஒரு காபி கூட குடிக்க முடியலே. நீ ஏன் சமைக்க மாட்டேங்கற? உனக்கு சமைக்கத் தெரியாதா?"

"தெரியாதுடா! உங்க பாட்டி எனக்கு அதையெல்லாம் சொல்லியேத்தரலே.."

"போ... மம்மி! திஸ் இஸ் பேட்! நான் அப்படி இருக்கப் போவதில்லை.நான்சமைக்க,துவைக்க,துடைக்கஎல்லாத்தையும் கத்துக்கப் போறேன். பிற்காலத்துல என் பிள்ளைங்க இப்படி சாப்பாட்டு பிரச்சனையால அவதிப்படக்கூடாது பாரு!" விஜி சீரியஸாய் முகத்தை வைத்துக் கொண்டுச் சொல்ல, பக்கென்ற சிரித்துவிட்டாள் சுகுணா.

"போக்கிரி! இந்த வயசில என்ன பேச்சு உனக்கு? இந்த சமையல், கிமையல் எல்லாம்... அந்த நினைப்பே உனக்கு வேண்டாம், ஒழுங்கா படிச்சு, கம்ப்யூட்டர் க்ளாஸ் எல்லாம் முடிச்சிட்டு,மம்மியப்போல ஆபீஸ் நிர்வாகத்தைப்பார்த்துக்க!"

"நோ... மம்மி! நீ ஒரு மிஷினா மாறினதுப் போதாதா? நான் மாறமாட்டேம்ப்பா! முழுக்க முழுக்க ஒரு குடும்பப் பொறுப்புள்ள டொமஸ்டிக் கேர்ளாகத்தான் இருப்பேன்.. அட.. இது யாரு மம்மி?" வைத்த விழி மாறாமல் ஆச்சர்யமாய் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமியை அப்போதுதான் பார்த்தாள் விஜி.

"இனி..நீஹோட்டல்சாப்பாடுசாப்பிட்டுலொடலொடன்னு புலம்ப வேணாம். இவ... புதுசா வந்திருக்கிற குக்! நாளைலேர்ந்து வேலைக்கு வர்றா!"

"ரியல்லி?" என்றபடியே லட்சுமியின் அருகில் வந்தாள். சில கணங்கள் அவளையே உற்றுப் பார்த்தவன் பளீரென சிரித்தாள்.

"ஐ... லைக் யூ"

"அ... எ... என்ன?"

"உன்னைப் பிடிச்சிருக்குன்னு சொன்னேன். நாளைக்கு காலைல ஆறு மணிக்கு சூப்பரா ஒரு காபி போட்டுத் தர்றியா?

இதோ பார்!" வாயை திறந்து நாக்கை நீட்டிக் காண்பித்தாள். "எப்படி வெளுத்துப் போயிருக்கு ஒரு மாசமா இதே வேதனைதான்" என்றவள் மறுபடி, "உன்னை எனக்க ரொம் பிடிச்சிருக்கு?" என்று கூறிவிட்டு காரை நோக்கி நடந்தாள்.

லட்சுமி அதிகாலையில் எழுந்து குளித்து பூஜையை முடித்துவிட்டு ஐந்தரை மணிக்கெல்லாம் வேலையைத் துவங்கி விட்டாள்.

முதல் வேலையாய் காபி தயாரிக்கத் தொடங்கினாள். காபியை விஜியின் அறைக்குப் கொண்டு சென்றாள். அப்போதுதான் எழுந்து உடலை முறுக்கி கொட்டாவி விட்ட விஜிக்கு பதினாறு தொட்ட மிக இளம் வயது. அசப்பில் அம்மாவைக் கொண்டிருந்தாள். லட்சுமியைப் பார்த்ததும் மடமடவென்று பிரஷ் செய்து முகம் கழுவி விட்டு காபியை வாங்கி ஒரு சிப் குடித்தாள். கண்கள் விரிய.. ஆள்காட்டி விரலையும், கட்டை விரலையும் சேர்த்து சூப்பர்!" என்றாள்.

"தாங்க்ஸ், ஆமா உன் பேரென்ன? சொல்லவே இல்லையே...!"

"லட்சுமி!"

"ம்.. நான் உனனை எப்படிக் கூப்பிடட்டும்?"

"ஏய்னு ஒரு குரல் குடுத்தாக்கூட போதும்!"

"சேச்சே... மாடு மேய்க்கற மாதிரி இருக்கு. ஆயான்னு கூப்பிடவா? ம்ஹூம் அப்படியொன்னும் பாட்டிங்க மாதிரி வயசாயிடலை உனக்கு. ம்... லட்சுமிம்மா... லட்சுமிம்மான்னு கூப்பிடவா? இது நல்லாருக்குல்லே?"

நெருக்குருகிப் போனாள் லட்சுமி!

"ஒரு சமையல்காரியை மதிக்க, மரியாதை கொடுக்க இந்த பணக்கார பெண்ணுக்கு மனமிருக்கிறதே!" நெஞ்சு நிறைந்து போனது.

"நீஎன்னைஎப்படிக்கூப்பிட்டாலும்எனக்குசந்தோஷம்தான் கண்ணு!"

"ஆமா... லட்சுமிம்மா.. நீ இவ்ளோ காலையில குளிச்சிட்டியா? இதுக்கு முன்னாடி இருந்த ரெங்க நாயகி சரியான பன்னி! வாய் சுத்தமும் கிடையாது. கைசுத்தமும் கிடையாது. முக்கியா அவளை வேலையை விட்டு நிறுத்தினதே அதுக்காகத்தான். டாடிக்கு பொய் பேசறவங்கள, நம்பிக்கை துரோகம் பண்றவங்களை கண்டாலே பிடிக்காது. நீயாவது இந்த வீட்ல நிரந்தரமாயிரு லட்சுமிம்மா!"

"நிச்சயம் கண்ணு! அப்புறம் உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும்னு சொன்னியானால் தினத்துக்கும் ஒரு வகையாய் சமைப்பேன்!"

"இதுதான், அதுதான் என்றில்லை. டேஸ்ட்டாக எதை சமைத்தாலும் சாப்பிடுவேன். ஆனால் உன்னால் அப்பாவை திருப்திபடுத்த முடிந்தாலும், அண்ணனையும் அக்காவையும் மட்டும் திருப்திபடுத்தவே முடியாது!"

"ஏன்?" என்றாள் பயமாய்.

"அவங்களுக்கு வெஜிடேரியன் பிடிக்காது. சில்லி சிக்கன் செய்தால்... ஏன் பட்டர்நான் செய்யவில்லை? என்று அண்ணன் கத்துவான். மட்டன் ஃபிரை செய்தால் எனக்கு மட்டன் பப்ஸ்தான் வேணும் என்பாள் அக்கா. டாடிக்கு தினமும் வஞ்சிரம் மீன் வறுவல் வேண்டும்!"

"எனக்கு சைனீஸ் வகைகளே கூட விதவிதமாய் சமைக்கத் தெரியும். அதனால் இதெல்லாம் ஒரு பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை கண்ணு!"

"பாரேன்... நேரம் போறதே தெரியாமல் உன்னிடம் பேசிக் கொண்டிருக்கிறேன். நான் குளிக்கப் போகிறேன்" ஏதோ ஒரு இந்திப் பாடலை ஹம்மிங் செய்தபடி பாத்ரூமிற்குள் சென்று விட்டாள்.

சமையலில் மும்முரமாய் இருந்த லட்சுமிக்கு ஒருபுறம் பயமாய் இருந்தது.

'இதென்ன யாரைப் பார்த்தாலும் இப்படி பயமுறுத்துறாங்களே...! இந்த வீட்ல அந்த மூணு பேரும் அவ்வளவு கெடுபிடியானவங்களா?'

அதைப் பற்றியே சிந்திதப்படி சமையலை முடித்தவள் மணி எட்டானதும் காபியை எடுத்துக் கொண்டு சுகுணாவின் அறையினுள் போனாள்.

சுகுணா குளித்து முடித்து அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

காபி ட்ரேயை அவள் முன் பவ்யமாய் நீட்டினாள்.

எடுத்து உறிஞ்சியவள், லட்சுமியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

"குட்! காபி நல்லாருக்கு! அப்பறம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல மறந்திட்டேனே! இந்த வீட்ல எனக்கு மட்டும் எட்டு மணிக்கு காபி குடுத்தாப் போதும்! மீது அத்தனைப் பேருக்கும் ஆறு மணிக்கெல்லாம் குடுத்துடணும். பெரியவளுக்கு ஏழு மணிக்கு! பெரிய ஐயா இன்னும்பத்து நாள்ல ஃபாரின்லேர்ந்து வந்துடுவாரு. பிள்ளைங்களும் வந்துடுவாங்க, அப்ப என்கிட்ட என்ன மெனுன்னு கேட்டுட்ட பிறகே சமையல் பண்ணு!"

"சரிங்கம்மா?"

"தோட்ட வீடு உனக்கு வசதியாய் இருக்கா?"

"என் ஒருத்திக்கு அது பெரிய மாளிகை!"

சுகுணா மெல்ல சிரித்தபடி டம்ளரை ட்ரேயில் வைத்தாள்.

"வாவ், வெரி டேஸ்டி. நிஜமாகவே இந்த வெஜிடேபின் புலாவ் பிரமாதம் லட்சுமிம்மா! இன்னும் கொஞ்சம் போடு!" விஜி ருசித்து, ரசித்து சாப்பிடுவது கண்டு லட்சுமிக்கு மட்டுமல்ல, சுகுணாவுக்கும் கூட சந்தோஷமாக இருந்தது.

சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே ஃபோன் அலறியது

"ஹலோ ஓவர்சீஸ் கால் ஃப்ரம் அமெரிக்கா!"

"குடுங்க!" பரப்பரப்பானாள் சுகுணா.

"ஹலோ...!"

"..."

"ஐ,ம் வெரி வெல்! நீங்க எப்படி இருக்கீங்க?"

"....."

"அப்படியா அங்கே வெதர் எப்படியிருக்கு? பனி உங்களுக்கு ஆகாதே!"

"....."

"இன்டியாவுக்கு எப்ப வர்றீங்க?"

"..."

நிஜமாவா? விளையாடலியே? இன்னும் அஞ்சு நாள்ல வந்துடுவீங்களா? தாங்க் காட்! பிஸினஸ் நல்ல படியா முடிஞ் சதா?"

"..."

"விஜயா? சாப்பிட்டுக்கிட்டிருக்கா! பெரியவ... ஃபிரன்ட்ஸோட நார்த் இன்டியன் டூர் போனவ இன்னும் வரல. வந்துடுவா... இன்னும் அரண்டு மூணு நாள்ல.. ப்ரேம் எப்படியிருக்கான்?"

"....."

"ஓக்கே வச்சிடட்டுமா? அ... ஐயே... என்னங்க இது ஃபோன்ல போய்?" முகம் வெட்கத்தில் சிவந்துப் போனது சுகுணாவுக்கு!

லட்சுமி தன்னையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டதும், லேசாய் வெட்கத்தோடு, கோபமும் எழ, "விஜியோட தட்டைப் பார்த்து பரிமாறுங்க!" என்றாள் காரமாய்.

தடக்கென்று பார்வையை விலக்கிக் கொண்ட லட்சுமிக்க என்னவோப் போல் ஆனது.

"என்ன மம்மி டாடியா? என்று கேட்டாள் விஜி.

"ஆமாம்.. இன்னும் அஞ்சு நாள்ல டாடி வீட்ல இருப்பார்!"

"ஐய்! ஜாலி!" என்றவள், "பாவம் லட்சுமிம்மாவுக்குதான் கஷ்டம். திண்டாடப் போறாங்க" என்றாள்.

விஜி விளையாட்டிற்குச் சொன்னாளோ, வினையமாய்ச் சொன்னாளே... ஆனால், அது லட்சுமிக்கு சனி பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

லட்சுமி சமையல் அறையிக்குள் புகுந்து கொண்டாள்.

'எத்தனை அன்யோன்யமான தம்பதிகள்? அவர் ஃபோனில் என்ன சொல்லியிருப்பார்? இந்தம்மா இவ்வளவு வெட்கப்பட்டாங்களே! இந்த உலகத்தில் எல்லா கணவன்மார்களும் மனைவிமேல் அன்பையும், காதலையும் பொழிகிறார்கள். என் கணவர் மட்டும் ஏன் என்மேல் நெருப்பள்ளிப் போட்டார்?' லட்சுமியின் இதயம் வேதனையில் வெம்பியது.

'ஆமாம்.. இந்த வீட்டில் யாரோட போட்டோவும் இல்லையே! கீழே ஹாலில் சுவர்களில் ஏதோ புரியாத புதிராய் சில ஓவியங்கள் தவிர வேறெதுவும் இல்லை. ஏன்? அவர்களெல்லாம் எப்படி இருப்பார்கள்? ஆர்வம் மேலிட அவர்களை காணும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி காத்திருந்தாள்.

3

"ஹாய் மம்மி...!" செல்லமாய் கொஞ்சியப்படி சுகுணாவின் கழுத்தில் கைகளைப் போட்டு' கன்னத்தை ஈரப்படுத்திய அந்த இளம் பெண்ணின் குரலுக்கு தடக்கென்று திரும்பிப் பார்த்தாள் லட்சுமி.

சுகுணா பதிலுக்கு அவள் கன்னத்தில் முத்தம் பதித்து பாசமாய் தலையைத் தடவினாள்.

"என்னடா? டூர் எப்படியிருந்தது, நல்லா என்ஜாய் பண்ணினாயா?"

"அதுக்கென்ன? ரொம்ப ஜாலியா இருந்திச்சு. பத்துநாள் போனதே தெரியலை. வாட் அபவுட் டாடி? இன்னும் வரலையா?

"இன்னும் ரெண்டு மூணு நாள்ல வந்துடுவார். நாளைக்கே காலேஜ்க்கு போய்டுவியா?"

"ம்ஹூம்... முழுசா ரெண்டு நாள் லீவு போட்டுட்டு நிம்மதியாத் தூங்கப் போறேன். நீ ஆபீஸ்க்கு போகலியா மம்மி?"

"இல்லடா.. லேசா தலை வலிக்கிற மாதிரி இருக்கு. ஃபோன் பண்ணி மார்னிங் வரமுடியாதுன்னுட்டேன். மூணு மணிக்கு போர்ட் மீட்டிங் இருக்கு. கான்ஸல் பண்ண முடியாது. ஸோ, ஆப்டர்நூன் போயிடுவேன்!"

"உனக்கேன் மம்மி தலைவலி? பேசாம கம்பெனிய டாடி தலையில கட்டிட்டு நீ ஹாயா இருக்க வேண்டியதுதானே? அதை விட்டுவிட்டு... இதெல்லாம் பெரிய டார்ச்சர் மம்மி."

"டாடி எவ்வளவு சுமைகளைத்தான் சுமப்பார்? இப்ப என்ன? நீயும் ஆபீஸ்க்கு வா! பாதி பொறுப்புகளை ஏத்துக்கடா!"

"ஐய்யய்யோ...! எனக்கும் இந்த பிஸினெஸ்க்கும் ஒத்துவராது. என் ட்ராக்கே வேற! உங்க பேச்சைக் கேட்டு நான் நடந்தா.. நாளைய கலையுலகம் ஒரு அருமையான, அழகான, திறமையான டைரக்டரை சந்திக்காமலேயே இழந்துவிடும்!" அவன் ஆக்ஷனோடு சொல்ல, சுகுணா அவள் கன்னத்தைச் செல்லமாய்த் தட்டினாள்.

"அக்காவும், தங்கச்சியும் இந்த விஷயத்திலே மட்டும் ஒரே மாதிரியா இருக்கீங்களே...!"

"ஆமா விஜி எங்கேம்மா? நானும் வந்ததிலேர்ந்து பார்க்கறேன். அவளுக்கு ஸ்டடி ஹாலிடேதானே? கண்லேயே படலேயே?

"ப்ரண்ட்டு வீட்டுக்கு போறேன்னுட்டு போனா!"

"ஓக்கே மம்மி! சூடா ஒரு கப் காபி கிடைக்குமா?"

"இதோ.. ரெண்டு நிமிஷத்திலே.. லட்சுமீ... ஒரு காபி எடுத்துட்டு வா!"

"யார் மம்மி லட்சுமி?"

"புதுசா வந்திருக்கிற குக்!"

அதுவரை அந்த இளம் பெண்ணின் முதுகை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த லட்சுமி.. அவள் முகத்தை காணும் ஆவலில் அவசர அவசரமாக காபி தயாரிக்கப் போனாள்.

அவள் தயாரித்து முடிப்பதற்குள், இந்த இளம் அரேபியக் குதிரையைப் பற்றி ஒரு சிறுகுறிப்பு!

அவள் மைத்ரேயி! ஐந்தரை அடி நடமாடும் பூங்கொத்து. இவள் குடும்பத்தில் யாருக்குமில்லா தாகம் அவளுக்கிருந்தது. அது கலைத்தாகம். பி.எஸ்சி படித்துக் கொண்டிருக்கும்போதே.. ஏதோ நினைத்தவளாய் இரண்டாம் வருடத்தோடு குட்பை சொல்லிவிட்டு தரமணி பிலிம் இன்ஸ்ட்டிடியூட்டில் டைரக்ஷன் கோர்ஸ் சேர்ந்து படிக்கிறாள். படிப்பது டைரக்ஷன் மட்டுமல்லாது அடிஷனாய் காதல் பாடத்தையும் படிக்கிறாள். அவளுக்கு கோச்சிங் மதன். இருபத்தெட்டு வயது அழகன். பொழுதுபோக்கிற்காக ஒளிப்பதிவு கற்றுக் கொள்ளும் சக மாணவன். அவனுக்கு சினிமாவில் நுழைந்து எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற எண்ணமெல்லாம் ஏதுமில்லை. அப்பா சோமசுந்தரம் மலைபோல் சம்பாதித்து குவித்து வைத்திருக்கும் பணத்தை எப்படி எப்படியோ செலவழித்து பார்த்தும் 'குறைவேனா பார்!' என்று பிடிவாதம் பிடித்து நிற்கிறது.

தினசரி கம்பெனியில் அவன் இருக்கும் சிலமணிநேரங்கள் போக, மைத்ரேயின் துப்பட்டாவை பிடித்து அலைவதற்கே சரியாகி விடுகிறது. அவர்களுள் காதல் ஜனித்த விஷயமே அலாதியானது. அது கொஞ்சம் காஸ்ட்லியான லவ்!

அந்த இன்ஸ்ட்டிடியூட்டில் அவளின் பல நெருங்கிய நண்பர்களில் மதனும் ஒருவன். மதனை லப் பண்ணுகிறோமா என்ன? என்று பல நாட்களாய் இவள் தனக்குத்தானே கேள்விக் கேட்டுக் கொண்டிருந்த கால கட்டத்தில், 'ஐ லவ் மைத்ரேயி' என்று தங் டாலரில் பொறித்து அவள் சந்தேகத்தை ஊர்ஜிதம்

செய்து வைத்தான் மதன். இந்த காதல் விவகாரம் இன்னும் இரு வீட்டாருக்கு தெரியாது. பரஸ்பரம் பணக்கார, டாம்பீர வர்க்கம் என்பதால், எந்த எதிர்ப்பலையும் எழும்பாது என்கிற தைரியத்தில் கொஞ்சம் கட்டுக்கு மீறியே காதல் வானில் சிறகடித்தார்கள். விரைவில் அதாவது அப்பா ரகுராமன் ஃபாரின்லேர்ந்து வந்ததும் தன் காதல் விஷயத்தை 'அப்பா.. அம்மா.. என் செல்ல அப்பா இல்லை... என் கண்ணு அப்பா இல்லே.. அதே பாருப்பா நிலா எவ்ளோ அழகாயில்லை? டாடி .. டூ யூ நோ மதன்? அவரைப் பத்தி நீங்க அவசியம் தெரிஞ் சுக்கணும்ப்பா!' என்று கொஞ்சவும், கெஞ்சவும் தயாராய் இருந்தாள்.

"காபி எடுத்துக்க மைத்ரேயி!" சுகுணா சொன்னதும், அந்தப் பெயரைக் கேட்டதும் லட்சுமியின் உடம்பு ஒரு தூக்கி போட, அவசர அவசரமாய் மைத்ரேயின் அருகே குனியவும், காபி எடுக்க இடது கையை உயர்த்தவும்...

"ச்சலீர்.." என்ற சப்தத்துடன் அந்த மேல்நாட்டு பீங்கான் கோப்பை தரையில் உடைந்து சிதறியது. காபி தரையில் கோலம் போட, ட்ரே சில கணங்கள் நடனமாடி அடங்கியது.

"யூ.. ஸ்டுப்பிட்...!" கோபத்தில் வெடித்த மைத்ரேயிக்கு அந்த முதல் சந்திப்பிலேயே லட்சுமியை பிடிக்காமல் போனது.

இன்னும் அவள் ஏதோ திட்டிக் கொண்டிருந்தது எதுவுமே லட்சுமியின் காதில் விழவில்லை. அவள் கண்களிரண்டும் அந்த மைத்ரேயின் முகத்தில் எதையோத் தேடியது.

"இந்தப் பெண்.. இந்தப் பெண்.. ஒருவேளை இவள்தானோ?"

4

மேகங்கள் சூல் கொண்டிருந்தது. சுகுணா கவலையாய் வானத்தை அண்ணாந்து பார்த்தாள். ஓரிரண்டு தூறல் விழுந்தது.

"சே... போயும், போயும் இன்னிக்குத்தானா மழை பெய்யணும்? மைத்ரேயி... ஏர்போர்ட்டுக்கு ஃபோன்

போட்டு கேளும்மா! சரியா எத்தனை மணிக்கு ஃப்ளைட் வருதுன்னு?"

கம்பெனிகளிலிருந்து உயர் அதிகாரிகள் பலரும் ரகுராமனை வரவேற்க இவர்களுடன் ஏர்போர்ட் செல்ல தயாராய் வந்திருந்தனர். அந்த பங்களா அன்றைய விடியலிலிருந்தே பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

ரகுராமனும், பிரேமும் அன்று ஸ்டேட்ஸிலிருந்து திரும்புகின்றனர். அதற்கான ஏற்பாடுகளை ஃபோன் மூலமாகவே அனைவரையும் விரட்டி வேலையை வாங்கிக் கொண்டிருந்தாள் சுகுணா!

லட்சுமி கிச்சனை விட்டு வெளியே வரவேயில்லை. மைத்ரேயி அவளைக் கண்டாலே எரிந்து விழுந்தாள். அவள் சமைத்த எதையுமே அவள் குறை சொல்லாமல் சாப்பிட்டதில்லை. லட்சுமியை ஓட ஓட விரட்டுவதில் ஒரு குரூர திருப்தி! உடலும் மனமும் ஒரேயடியாய் சோர்ந்து போனாலும் ஏனோ, மைத்ரேயி மேல் லட்சுமிக்கு கடுகளவுக்கூட கோபம் ஏற்படவே இல்லை. அவளுடைய கெடுபிடியை ரசித்தாள். அவளுக்காகவே மட்டன் வகைகளை பார்த்த பார்த்து சமைத்தாள். ஆனால் விஜிக்கு மட்டும் அவளைப் பார்க்க பாவமாய் இருந்தது. சுகுணா, இதெல்லாம் பைசா பெறாத விஷயங்கள் என்று அலட்சியப்படுத்தினாள்.

மைத்ரேயி சுகுணாவிடம் வந்து உட்கார்ந்தாள்.

"வானம் மேக மூட்டமா இருக்கறதனால இன்னைக்கு ஃப்ளைட் டூ அவர்ஸ் லேட்டாகுமாம் மம்மி!"

"ப்ச்... நேரமே சரியில்ல...!"

"டாடிக்கு எண்ணமெல்லாம் நம்ம மேலேயே இருக்கும். இந்த மழை இன்னைக்கு வரலேன்னு யார் அழுதா?"

"ஹால்ல ஆபீஸர்ல எல்லாம் ரொம்ப நேரமா வெய்ட் பண்றாங்களே! கூப்பிட்டு சொல்லவா? லேட்டாகம். நீங்கள்லாம் புறப்பட்டு உங்க வேலையை முடிச்சிட்டு அப்படியே ஏர்போர் போயிடுங்கன்னு!"

"சரி... அதுக்கு முன்னால அவங்க எல்லாருக்கும் டீயும், பிஸ்கெட்டும் கொடுக்கச் சொல்லு!"

"சரி...!" என்றவள் நடந்து சென்று கொண்டிருந்த லட்சுமியை கைதட்டி அழைத்தாள்.

"ஏய்.. இங்கே வா!"

"என்னம்மா?"

"நான் உனக்கு அம்மாவ? நான்சென்ஸ்! மேடம்னு சொல்லுனு எத்தனை முறை சொல்வேன்? இடியட்! போ... போய் மசமசன்ன நிக்காம, வந்திருக்கிற அத்தனை பேருக்கும் டீயும், பிஸ்கெடடும் கொடு... போ!" விரட்டு விரட்டென்று விரட்ட லட்சுமி அரண்டுதான் போனாள்.

"ச... சரிம்மா...!" என்றவள் மைத்ரேயின் முறைப்புக்கு பயந்து "சரிங்க...!" என்றாள்.

"ம்ம்.. போ!" பெரிதாய் மன்னித்து விட்டாள்.

ஒரு வழியாய் ரகுராமனும் பிரேமும் வீடு வந்து சேர்ந்தபோது மாலை ஆறு ஆகி விட்டது. அந்த பெரிய பங்களா... உறவினர்கள், நண்பர்கள், அலுவலக அதிகாரிகள் என காச் மூச்சென்றிருந்தது. லட்சமியால் கிச்சனை விட்டு இப்படி, அப்படி என்று அசைய முடியவில்லை. வருகிறவர்களுக்கும், போகிறவர்களுக்கும் சமைத்து கொட்டி தலையைச் சுற்றியது.

மொட்டை மாடியில்தான் விருந்து. காக்டெயில் பார்ட்டி எல்லாம்! பரிமாற நாலைந்து சிப்பந்திகள் அழைத்து வரப்பட்டிருந்தனர். ஆகவே அதுநேரம் வரை அந்த வீட்டு பெரிய ஐயாவையும், சின்ன ஐயாவையும் லட்சுமியாமல் பார்க்க முடியவில்லை.

எல்லாம் முடிந்து அவரவர் தம் இல்லம் திரும்ப பிரேம்... களைப்பு மிகுதியில் தன்னறைக்குள்ளும், ரகுராமன் மாடியறையிலும் தஞ்சம் புகுந்திட்டனர். சிப்பந்திகள் அனைவரும் களேபரமாய் இருந்த வீட்டை பெருக்கி துடைத்தனர்.

மணி இரவு 10

எல்லா வேலையும் முடித்து தோட்ட வீட்டை நோக்கி நடத்தவளை அழைத்தாள் சுகுணா.

"லட்சுமி...!"

"என்னம்மா?"

"புறப்பட்டுட்டியா?"

"ஏம்மா? வேற ஏதாவது வேணுமா?"

"ஆமாம்! ஐயாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்ல. டாக்டர்கிட்டேல்லாம் போகமாட்டார். அப்படியொரு பிடிவாதம். உடம்புக்கு எந்த தொந்தரவுன்னாலும் கொஞ்சம் மிளகு கஷாயம் மட்டுமே போட்டுத்தரச் சொல்லி சாப்பிடுவார்!"

"அதுக்கென்னம்மா? இதோ பத்து நிமிஷத்துல போட்டுத் தந்துடறேன்!"

"சரி... அப்படியே அதை மாடிக்கு கொண்டு வந்து தந்துடு என்ன?"

"சரிங்கம்மா..."

இன்றைய அலைச்சலில் சுகுணா வெகுவாய் களைத்துப் போயிருந்தாள். கொட்டாவி விட்டபடி மாடியேறிப் போனவளை பாவமாய் பார்த்தாள் இந்தப் பாவப்பட்ட ஜென்மம்.

'பாவம் எத்தனைப் பொறுப்புக்களை சுமக்கிறாள்? வீடு, புருஷன், குழந்தைகள்னு, போதாதற்கு அலுவலக நிர்வாகமும்சேர்த்து எத்தனை பொறுப்புக்கள்? இதற்கெல்லாம் தைரியமும், திறமையும் வேண்டும். இல்லாவிட்டால் பொம்மனாட்டிகள் அடுப்பங்கரையோடு சேர்ந்து அமுங்கிவிட வேண்டியதுதான்... என்னைப் போல்! என்று விரக்தியால் சிரித்தவாறு கஷாயம் தயாரிக்க ஆரம்பித்தாள்.

'இத்தனை பெரிய பணக்காரர் இங்கிலீஷ் மருந்து சாப்பிடாமல் கஷாயம் சாப்பிடுகிறார் என்றால்.. ஆச்சரியமாயில்ல இருக்கு? அதுவும் பட்டணத்தில், பகட்டாய் வாழ்பவர். அப்படிப்பட்டவரை பற்றியா பயம் காட்டுகிறார்கள்? கோபக்காரர், அப்படி இப்படியென்று? அவர்கூட இப்படித்தான். குளிர் காய்ச்சலில் தூக்கிப்போட்டு உதறினாலும்டாக்டர்கிட்டே போகமாட்டார்.இப்படித்தானே கஷாயம் போட்டுத்தரச் சொல்லிக் கேட்டுக் குடிப்பார்?' நிமிடத்தில் நினைவுச் சாரல் பழைய இருப்பிடம் நோக்கிப் பாய தொண்டையடைத்துக் கொண்டு கண்கள் கலங்கியது.

'என்னையா... என்னையா அப்படி சொன்னேள்? என் குழந்தைகள் ரெண்டும் எப்படி இருக்கிறாங்களோ?' எங்கே இருக்கிறாங்களோ?' விளிம்பு மீறி வழிந்த கண்ணீரை முந்தானையால் துடைத்துக் கொண்டு, கஷாயத்தை கிளாஸில் நிரப்பி மாடிக்கு கொண்டு சென்றாள்.

இந்த வீட்டில் வேலைக்குச் சேர்ந்து மாடிக்குச் செல்வது இதுவே முதல் முறை! கீழே இருப்பதை விட மேலே இன்னும் அலங்காரம் வீட்டை சொர்க்கமாக்கிக் காட்டியது. லட்சுமி அந்த அறையை நெருங்கவும் சுகுணா வெளியே வரவும் சரியாக இருந்தது.

"அட! இவ்வளவு சீக்கிரம் எடுத்துட்டு வந்துட்டியா? நைட்ல குளிக்காம எனக்கு தூக்கமே வராது. நான் குளிச்சிட்டு வர்றேன்! ஐயா... பால்கனியில இருக்கார். இதை நீயே அவர்கிட்டே கொண்டுபோய்க்குடு!" என்றபடி நகர்ந்து விட்டாள்.

பயமும், பதட்டமுமாய் உள்ளே சென்றவள், விஸ்தாரமான அந்த அறையைக் கண்டு மலைத்தாள். இருபதுக்கு இருபதடி நீள அகலம் கொண்ட அறையின் நடுவே கொசுவலை போர்த்தியிருக்க வாட்டர் பெட் தவழ்ந்து கொண்டிருந்தது. குறைந்த வெளிச்சம் கொண்ட அலங்கார விளக்குகள் நட்சத்திர ஓட்டலறையை நினைவுபடுத்தின. இந்த அறைக்கு தனியாக டி.வி. டெக். ஒரு அலமாரிமுழுக்க வீடியோ காஸட்டுகள்.

கட்டிலுக்குச் சற்றுத்தள்ளி ஒரு கண்ணாடி பீப்பாய்! அதன்மேல் பல தினசரிகள். மேகஸின்கள். ஒரு ஓரம் பேஜர். அதன் பக்கத்திலேயே ஜோடியாய் செல்லுலார் போன். எல்லாவற்றையும் பார்த்து பிரமித்துப் போன லட்சுமியை ஒரு குரல் அதட்டியது.

"யாரது?" கம்பீரமான அதட்டல்.

ஒரு நொடியில் சர்வமும் ஆடிப்போனது.

"அ... ஐயா... கஷாயம்!"

"ஓ... சர்வன்ட்டா? இதோ, இங்கே டீப்பாய் மேலே வச்சிட்டுப் போ!"

பதட்டமாய் நடந்து டீப்பாய் மேல் கிளாஸை வைத்துவிட்டு தற்செயலாய் அவரைப் பார்க்க...

பாதிவரை செத்துப் போயிருந்த சிகரெட்டின் தலையை ஆஷ்ட்ரேயில் புதைத்து அவரும் இவளை நிமிர்ந்து பார்க்க...

இருவரும் ஒருசேர அதிர்ந்துப் போயினர்.

"நீ...யா?"

"நீங்களா?"நடுக்கமும்சந்தோஷமுமாய்குரல்தொண்டையில் சிக்கிக் கொள்ள பளக்கென கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"நீங்க.. இங்கே... சுகுணாம்மாவுக்கு.. நீங்க.. ஐயோ.. ஆண்டவனே?" கணநேரத்தில் எல்லாம் புரிந்துப் போக... முந்தானையால் வாயைப் பொத்தி அழுதாள்.

"நீ..நீ எங்கே இங்கே? இன்னும்.. இன்னுமா நீ உயிரோட இருக்கே?" ரகுராமனின் கண்கள் சிவந்து வார்த்தைகள் நெருப்பாய் வெளிவந்தன.

5

ஒருகளித்துப் படுத்திருந்த லட்சுமியின் கண்ணீர் தலையணையை ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

'யாரைப் பார்க்க இத்தனை வருஷம் உயிரை கையில் பிடித்து வைத்திருந்தேனோ, அவர் இன்று இன்னொரு பெண்ணின் கணவர்! இதை பார்க்கவா தவமிருந்தேன்?'

'தாலி கட்டிய கணவனை இன்னொருத்திக்கு சொந்தமாக பார்க்க எந்த மனைவிக்குத்தான் இதயத்தில் பலமிருக்கும்?'

அந்த கணத்தில் அவள் துடித்த துடிப்பு, பதினெட்டு வருடத்திற்கு முன் ஏற்பட்ட துடிப்பை விட அதிகம்.

'மொத்தமாகதலைமுழுகிட்டேளா? உங்களுக்குஜலதோஷம் வந்தால், எனக்கு காய்ச்சல் வருமே! இந்த லட்சுமியையா? ஒரேயடியாய் கறிவேப்பிலைப் போல் இலையோரத்தில் போட்டு விட்டீர்கள் ஐயா! எப்படியா மனசு வந்தது? இன்னொருத்தியோடு வாழ்க்கையை பங்கு போட்டுக் கொள்கிற அளவுக்கா என்மீது வெறுப்பு? உண்மை என்னன்னு தெரியுமா? அவசரப்படுமுடிவெடுத்திட்டீங்களே? அதைவிட உங்களை நான் சந்திக்காமலேயே போய் சேர்ந்திருக்கலாமே! எல்லாம்... எல்லாத்தையும் மொத்தமாய் இழந்துவிட்டு நிற்கிறேனே! என்னைப் பார்த்து உங்கள் மனம் இளகாதா? இன்னுமா உயிரோடு இருக்கேன்னு? கேக்கக்கூடாதகேள்விய கேட்டுட்டீங்களே! போகமாட்டேன்... உண்மைய உங்களுக்கு நிரூபிக்காமல் நான் சாகமாட்டேன். எப்படியாவது, எந்த வகையிலாவது... என்னை நிரூபிச்சே தீருவேன்!' லட்சுமி கண்களை துடைத்துக் கொண்டாள்.

ரகுராமனின் வார்த்தைகள் இன்னும் இதயத்தை குத்தி கிழித்துக் கொண்டுதானிருந்தது.

"எப்படி... நீ என் வீட்லே நுழைஞ்சே? கட்டின புருஷனுக்கு துரோகம் பண்ணியே.. பார்த்தியா உன் நிலையை? சமையல் காரியா கடைநிலைக்கு வந்துட்டே?"

"தயவு பண்ணி திருப்பித் திருப்பி அதையே சொல்லாதேள்! நான் தப்பு பண்ணாதவ! செய்யாத தப்புக்க இத்தனை வருஷம் தண்டனையை அனுபவிச்சிட்டேன. நான் சொல்றத கொஞ்சம்...."

"ச்சட்... கேவலம் ஒரு வேலைக்காரி சொல்றதையெல்லாம் கேட்டுக்கிட்டு இருக்க.. நான் என்ன வாட்ச்மேனா? இதோ பார்.. மரியாதையா இங்கேர்ந்து போயிடு. எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு உன் குரல்வளைய நெரிச்சி கொன்னுடுவேன். என்னை கொலைகாரனாக்காதே! நடந்த விசயம் எதுவும்.. நீ யார் என்னங்கற விஷயம் உள்பட சுகுணாவுக்கோ, என் பிள்ளைகளுங்கோ... தெரியக்கூடாது. அந்த அசிங்கத்தை கிற வேண்டாம். இப்பேர்ப்பபட்ட சாக்கடை கூட ஆறு வருஷம் குடித்தனம் பண்ணினேன்னு யாருக்கும் தெரியக்கூடாது. கேவலமான, கசப்பான அநத நாட்களை நான் மறந்துட்டேன். யாருக்காவது தெரிய வந்துச்சோ... நான் நானாக இருக்கமாட்டேன். விடியறபோது நீ இங்கே இருக்கக்கூடாது. புரிஞ்சுதா? சுகுணா வர்ற சத்தம் கேக்குது. வெளியே போ!" உறுமினார்.

கண்களைதுடைத்துக்கொண்டேவெளியேவந்தலட்சுமியை ஆச்சர்யமாய் பார்த்தபடி உள்ளே வந்தாள் சுகுணா!

"என்ன டியர்? வழக்கம்போல் எல்லார்கிட்டேயும் பேசாறப்பல.. இவளையும் கோபமா திட்டிட்டீங்களா? அழுதுகிட்டேபோறா?"

"யார் இவளை இங்கே வேலைக்கு சேர்த்தது? அவளைப் பார்த்தாலே பிடிக்கல!"

"அது சரி... அவளை என்ன வீட்டுக்காரியாகவா சேர்த்தேன்? வேலைக்காரியாகத்தானே?" என்றவள் அவர் முறைப்புக்கும் தன் தவறான வார்த்தை பிரயோகத்திற்கும் தன்னையே கடிந்து தலையில் தட்டிக் கொண்டாள்.

"ஸாரி டியர்!" என்றாள் அவர் மார்பில் சாய்ந்து.

"அவளை அனுப்பிடு சுகி! வேற யாரையாவது வேலைக்குச் சேர்ததுக்கலாம்!"

"ஏம்ப்பா? அவரொம்பநல்லாசமைக்கிறா! இதுக்குமுன்னாடி உள்ளவங்களைவிட இவளோட சமையல் ரொம்ப நல்லாருக்கு. கை சுத்தம், பேச்சு சுத்தம்னு எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு.

அவ பிராமின! அதனால நான் வெஜ் அயிட்டங்கள் சமைச்ச பிறகும் குளிச்சி சுத்தமாயிருக்கா! அவளை விஜிக்கு ரொம்பவே பிடிச்சி போச்சு. பாவங்க! அவளுக்கு யாருமில்லே. இதுக்கு முன்னாலே ரொம்ப வருஷமா ஒரு செட்டியார்வீட்டிலதான் வேலை செஞ்சிட்டிருந்தா. அவங்க குடும்பத்தோட காரைக்குடியில போய் செட்டிலாய்ட்டாங்க. அங்கே டிரைவரா வேலை பார்த்திட்டிருந்த புண்ணியக்கோடியோட தம்பிதான் இங்கே அறிமுகப்படுத்தினாரு. இந்த காரத்துல இப்படி ஒரு அனுசரணையான, நாம இஷ்டப்பட்டு கொடுக்கிற சம்பளத்துக்கு வேலை செய்ற வேலைக்காரி கிடைக்கிறது ரொம்ப கஷ்டம். அவளைப் பார்க்கவே பரிதாபமா இருக்கு டியர்! ப்ளீஸ்... எனக்காக! அவளை விரட்டினா... மறுபடி வேற ஆள் கிடைக்கிற வரைக்கும் ஹோட்டல் சாப்பாடுதான். எனக்கு காபிக்கூட போடத் தெரியாது!"

"அப்ப.. புதுசா ஒரு ஆளை ஏற்பாடு பண்ணினா... இவளை விரட்டிடுவே இல்லையா? நான் ஃபைவ்ஸ்டார் ஹோட்டலேர்ந்தே ஒரு ஆளை ஏற்பாடு பண்றேன்!"

"ஏன் டியர் லட்சுமி மேல உங்களுக்கு இவ்வளவு கோபம்? மரியாதையா நடந்துக்கத் தெரியலியா? நான் அவளுக்கு சொல்லி புரிய வைகிறேன். பாருங்கப்பா... பதினஞ்சு நாள் கழிச்சு இப்பத்தான் பார்க்கறோம். நமக்குள்ளே பேச எவ்வளவோ இருக்கு! ஒரு சாதாரண சமையல்காரிக்காக இவ்வளவு நேரத்தையும் வீணடிக்கணுமா? கமான் டியர்?" காதல் மிகுதியோடு அவர் மார்பில் முத்தமிட்டாள் சுகுணா!

"ஸாரிடா...!" என்றபடி அவளை அப்படியே தன்னோடு இறுக்கி அணைத்துக் கொண்டாலும் ஏனோ அவர் மனம் அங்கு இல்லை.

"என்ன லட்சுமி? ஐயாக்கிட்டே என்ன சொன்னே?"

"நா... நானா? நான்.. ஒ...ஒண்ணுமே சொல்லலியே!" திடுக்கிட்டுப் போனாள்.

"பின்னே எதுக்கு உம்மேல அவருக்கு அவ்வளவு கோபம்? இதப்பார்.. உனக்கு என்னத் தேவையோ... அதை என்கிட்டே

கேளு! தவிர, அவர் கிட்டே பணிவா நடந்துக்க! ஒரு சின்ன பொய் சொன்னாக்கூட அவர் மன்னிக்கமாட்டார்!"

'எனக்குத் தெரியாதா?'

"என்னப் புரிஞ்சுதா?"

"ச.. சரிங்கம்மா?"

"ஐயா மாடியிலதான் இருக்கார். காபிய எடுத்துப் போய் குடுத்துட்டு, என்ன பேசியிருந்தாலும், என்னை மன்னிச்சிடுங்கன்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு வா... என்ன?"

முகம் மலர்ந்தது லட்சுமிக்கு!

பத்து வயசு குறைந்தவள் போல், துள்ளி ஓடாத குறையாக, அவரிடம் பேசப் போகிறோம் என்கிற நினைப்பே சந்தோஷத்தைத் தர... காபி எடுத்துக் கொண்டு போனாள்.

சுருகிப் போன முகத்தோடு அவளைப் பார்த்த ரகுராமன், "மறுபடி எங்கே வந்தே?" என்றார்.

"இங்கே பாருங்கோ! அம்பாள் மேல சத்தியமா... இந்த தாலி மேல ஆணையா... நான் தப்பு செய்யலேண்ணா!"

"துரோகம்பண்ணினதோ எனக்கு! சத்தியம்பண்றதோ...நான் கட்டின தாலிக்கு. சண்டாளி... உன் கண்ணீரையும் நடிப்பையும் கண்டு இன்னும் கூடவா ஏமாறுவேன்னு நினைக்கிறே? இந்த ரெண்டு கண்ணால பார்த்தேனே... ச்சீ! இதோப்பார்! நான் மனசு மாறுவேன்னு மட்டும் கனவுக்கூட காணாதே! இந்த வீட்ல ஒரு நாயோட நாயாதான் உன்னை ட்ரீட் பண்ணப் போறேன். இதுக்கூட என் சுகியோட வார்த்தைக்கு கட்டுப்பட்டுத்தான்! புரியுதா?' 'என் சுகி!' வலித்தது லட்சுமிக்கு. "நா.. நான் உங்க மனைவிண்ணா! அக்னி சாட்சியா.. ஆயிரம் பேர் வாழ்த்த.. உங்க கரத்தைப் பற்றியவள் நான்..."

"மனசாட்சிய கொன்னு போட்டவளுக்கு அக்னிசாட்சிய பத்திபேச அருகதை கிடையாது. இந்த வீட்ல நீ இருக்கணும்னா.. நீ யாருங்கறதை யார்கிட்டேயும் சொல்லக்கூடாது. என் வரையில் நீ செத்தவ! அப்படித்தான் எல்லாக்கிட்டேயும் சொல்லியிருக்கேன்!"

விரக்தியாய் சிரித்தாள்.

"என் சிதைக்கே தீ வெச்சுட்டேளா? அன்னைக்கு அந்த ராமன் சீதைய தீக்குளிக்க வச்சான். நீங்க எனக்கு உயிரோட தீ வச்சுட்டேள்! சந்தோஷம்... ரொம்ப சந்தோஷம்!"

"அந்த சீதையப் பத்தி உன் வாய் பேசக்கூடாது. அது பத்தினிங்க உச்சரிக்கிறப் பேரு!"

"நானும் சீதைதான். இதை நிச்சயம் ஒரு நாள் நிரூபிப்பேன்!"

வாய்விட்டு பலமாகச் சிரித்தவர்...

"எனக்கே காது குத்தறியா? போனால் போகட்டும். நீ இங்கு வேலை செய்ய வேண்டாம். உனக்கு ஒரு பெரிய தொகை தர்றேன்! ஒப்புக்க... நீ ஒரு அவிசாரின்னு ஒத்துக்கிட்டு திரும்பிப் பார்க்கமா போய்க்கிடடே இரு!"

"சிவ.. சிவா! திரும்ப திரும்ப அந்த வார்த்தையை சொல்லி இதயத்தை குத்திகிழிக்காதீங்கோ! சட்டபடி நான் உயிரோட இருக்க நீங்க ரெண்டாவது கல்யாணம் செய்ததே செல்லாது! அதுக்காக நான் மல்லுக்கட்டி நிக்கமாட்டேன். நானாக அந்த வார்தையை வெளியேச் சொல்லவும் மாட்டேன். உங்க பேச்சை மீறவும் மாட்டேன். ஆனா, நீங்களே ஒருநாள், "இவ தான் என் மனைவி, நான் தொட்டு தாலி கட்டின புண்ணியவதி... எந்த தப்பும் செய்யாத சீதாதேவின்னு உங்க வாயாலேயே நான் சொல்ல வைக்கிறேன். அதுவரைக்கும் நான் உயிரோட இருக்கணுமில்லையா? உங்களையும், என் குழந்தைகளையும் பக்கத்திலேர்ந்து பார்க்கறப்ப்... எனக்கு பலம் கூடும்! அது போதும் எனக்கு. உங்க பணமும், சுகமும் எனக்கு வேண்டாம்!"

"அத மட்டும் நம்பறேன்!"

"எதை?"

"பிரேமுக்கும், மைத்ரேயிக்கும் அப்பா நான்தான்னு. ஏன்னா, என்னையே உரிச்சு வச்சி பிறந்திருக்காங்களே... அதனால..!"

வெற்றுப் பார்வையை வீசினாள் லட்சுமி.

"என் குழந்தைகளை வச்சே... உன்னை நான் இந்த வீட்டை விட்டு விரட்றேனா... இல்லையா பார்?!"

லட்சுமி பதிலேதும் சொல்லாமல் கீழே இறங்கி வந்தாள்.

"நிஜமாவே ரொம்ப நல்லாருக்கு! அமெரிக்காவுல உப்புமில்லாம.. உறைப்புமில்லாத சாப்பிட்டு நாக்கே செத்துப் போச்சு! வீட்டு சாப்பாட்டை சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு. குருமா ரொம்ப டேஸ்ட்டி! லட்சுமி கைக்கு என்ன போட்டால் ஈடாகும்?" என்றபடி ப்ரேம் சமையலை வெகுவாய் பாராட்டினான்.

லட்சுமிக்கு கூடை கூடையாய் பூவை தலையில் கொட்டுவது போலிருந்தது. மகிழ்ச்சியில் நெஞ்சுகூடு விம்மியது. 'ப்ரேம்' என்று தன் மகனை அணைத்து உச்சந்தலையில் முத்தமிட வேண்டும் போலிருந்தது. மகிழ்ச்சியில் கண்கள் பனித்தன.

'எப்படி வளர்ந்து விட்டான் என் பிள்ளை? அப்பாவைப் போலவே உயரம், சிவப்பு, கூர்மையான மூக்கு, தலைக்கு கொள்ளாத முடி, அதை அடிக்கடி அழுத்தி விட்டுக் கொண்ட மேனரிஸம்.

எப்போதும் என் முந்தானைப் பிடித்துகொண்டு சாப்பிடவும், படுக்கவும் நானில்லாமல் இருக்கமாட்டாயே கண்ணா! நான் அம்மா பிள்ளை என்று செல்லம் கொஞ்சுவாயே ராஜா... என்னைத் தெரியலையா உனக்கு? காலங்களும், வேதனைகளும் என் உடம்பில் வயோதிகத்தை கூடு தலாகத் தந்து என் கோலத்தையே மாற்றி விட்டாலும், என் ரத்தத்தைப் பாலாக்கி தந்தேனே ப்ரேம்! உன்னால் அம்மாவைக் கண்டுகொள்ள முடியலியா கண்ணா? எதுவுமே நினைவில் இல்லையா உனக்கு? பதினெட்டு வருஷம் இடையில் புகுந்து என் அன்புச் செல்வங்களின் கண்களையெல்லாம் மறிச்சிடுச்சே...!

ஏதோ கொஞ்சமேனும் புண்ணியம் செய்திருக்கிறேன். நான் பெத்த செல்வங்களுக்கும் உயிரோடுக் கலந்த என் கணவருக்கும் என் கையால் சமைத்துப் போடும் பாக்கியமாவது கிடைத்ததே... ஈஸ்வரா... உனக்கு கோடி நன்றியப்பா!"

முட்டையக்கூடகையால்தொடாதகுழந்தைங்கஇன்னைக்கு கோழித் தொடையை கடித்து இழுத்துக் கொண்டிருப்பதைப் பார்க்க லேசாய் வருத்தம் எழுந்தது.

'எப்படி மாறிவிட்டார்கள்? எல்லாம் வளர்ப்பு முறை! சுகுணா அசைவமல்லவா? அதற்காக.. அவரும் கூட மாறிடணுமா? புது மனைவியாச்சே! அதுவும் அழகான இளம் மனைவி! அவள் சொல்வதுதானே வேதவாக்கு!

"ஏய்... செவிட்டு முண்டமே.. எவ்வளவு நேரம் கூப்பிடறது?"

மைத்ரேயின் குரல் அவளை இடிக்க, தன்னிலைக்கு வந்தாள் லட்சுமி.

"ஆ... ஆங்.. எ... என்னம்மா?"

"அம்மாவா? மறுபடி அம்மாவா?" முறைத்தவள் ரெண்டு ஆம்லெட் போட்டு எடுத்திட்டு வா!"

"இ.. இதோ!" அரக்க பரக்க ஓடுமுன் ரகுராமனைப் பார்த்தாள். அவரின் இதழ்க்கடையோரம் ஒரு அர்த்தம் பொதிந்த சிரிப்பு.

'மைத்ரேயி வச்சே.. உன்னை விரட்றேனா, இல்லையா பார்?' என்றது.

"லட்சுமி. அப்படியே எனக்கும் ரெண்டு ஆம்லெட்!" ப்ரேம் சொல்ல புரையேறியது ரகுராமனுக்கு.

'பெத்த குழந்தைகளே பேர் சொல்லி நாயைப் போல ஒரு தாயை வேலை வாங்கற கூத்து வேற எங்கேயும் நடக்காது. படு அவஸ்தையை!'என்று குதூகலித்தது அவர் மனம்.

ஆனால் இதை எதையுமே லட்சியம் செய்யாமல் கிச்சனுக்கு ஓடினாள் லட்சுமி.

6

"மதன மாளிகையில், மந்திர மாலைகளா...!

உதய காலங்களில் உந்தனின் லீலைகளா...!

அன்பே. அன்பே.. அன்பே.. அன்பே...!"

"ஏய், நான் இங்கே இருக்கவா.. போகவா?"

"ஏன் அப்படி கேக்கற மைத்து?" என்றான் மதன் பாடுவதை நிறுத்தி!

"பாடாதே!"

"ஏன் பாட்டு நல்லால்லையா?"

"பாட்டு நல்லாருக்கு. ஆனா அதை நீ பாடி கெட்ட பேர் வாங்காதே!"

"ப்ச்.. இன்னைக்கு ரொம்ப ஹாப்பியா இருக்கேன். அதை கெடுத்துடாதே மைத்து!"

"அப்படியென்ன விசேஷம் இன்னைக்கு?"

"என் டைப்பிஸ்ட் லீவு! ஒரு வாரம் வரமாட்டாளே...!"

"வாட்? டைப்பிஸ்ட் லீவுன்னா.. உனக்கு என்ன கொண்டாட்டம்?

"அது ஒரு பூசணிக்காய் மைத்து"

"அப்படீன்னா?"

"சப்பை.. ஃபிகருன்னு அர்த்தம்!"

"சே... பாவம் அப்படியெல்லாம் சொல்லாதே மதன்!"

"பின்னே என்ன மைத்து? என் வயசென்ன? பர்ஸனாலிட்டியென்ன? என் ரேஞ்ச் என்ன? அதைப் பத்தி எல்லாம் நினைச்சிப் பார்க்காம எங்கப்பா இவளை அவரோட ஃப்ரன்ட்டோடடாட்டர்ங்கறரெகமன்டேஷன்லஅப்பாய்ன்ட் பண்ணிட்டதால... என்னால இவளை தூக்கி அடிக்க முடியல. இவ என்னடான்னா.. நான் என்னமோ இவளையே சைட் அடிக்கிற மாதிரியும், கனவு காண்ற மாதிரியும் மனசுல ஒரு இது! நான் வரும்போதெல்லாம் மாராப்பை இழுத்து விட்டுக்கறதும், முந்தானையை எடுத்துப் போர்த்திக்கிறதும்.. வெறுத்துட்டேன் மைத்து.. போயும்.. போயும் இவளையா பார்ப்பேன்? நீ இருக்கியே எனக்கே எனக்குன்னு... உன்கிட்ட நான்...!"

"யூ...!" என்று பொய்க்கோபத்துடன் மதனின் வாயைப் பொத்தினாள் மைத்ரேயி. "ரொம் மேசமா பேசறே மதன்!"

"மொதல்ல கைய எடு... இந்த கைக்கு பதிலா உன் வாயால மூடியிருந்தன்னா... ஆ...!" என்றலறினான்.

"ஏன் இப்படி கிள்றே மைத்து? முதல்ல நெய்லெல்லாம் கட் பண்ணு. சின்ஸியரா உன்னை லவ்விக்கிட்டு இருக்கும்போதெல்லாம் வில்லத்தனமா என் மூடைக் கெடுக்குது."

"ஏய் மதன்.. அழகா மைத்ரேயின்னு பேர் இருக்கப்ப.. மைதா மாவு மாதிரி மைத்து மைத்துன்னு கூப்பிட்றது எனக்குப் பிடிக்கலே!"

"சரி... இப்ப இந்த டாபிக் ரொம்ப முக்கியமா? இதை விடு.. மெதன்ன இப்படி வந்திருக்கே?" என்றான் அவள் உடையைக்காட்டி.

"ஏன் இதற்கென்ன?" என்றபடி தன்னை ஒரு முறைப் பார்த்தாள்.

டைட் ஜீன்ஸ் முழுக்கை பனியன்.

இப்படியா முழுசா மூடுவாங்க? அதுவும் என்னைப் பார்க்க வரும் போது... என்று சொல்லிக் கொண்டே வயிற்றில் ஒரு கிள்ளு கிள்ளினான்.

"ஆவ்...!" அலறினாள். ஆனாலும் அவன் செய்கையை ரசித்தாள்.

"சும்மாயிரு மதன். இது பப்ளிக் ப்ளேஸ். ஒழுங்கா கைய வச்சிக்கிட்டு உட்காரு!"

"பிக்சர் போலாமா?"

"என்ன திடீர்னு?"

"சும்மாதான் போரடிக்குது வாயேன்!"

"ம்ஹூம்... நீ எதுக்குக் கூப்பிடறேன்னு தெரியும். வேண்டாம். அங்கேயும் நீ இதே சில்மிஷம்தான் பண்ணுவே.. நான் வரலை!"

"ஏய்.. என்ன நீ? சும்மா தொட்டுப் பார்க்கக் கூட விடமாட்டேங்கற? அவனவன் கல்யாணத்துக்கு முன்னாலேயே அப்பா ஆயிடறான். குடுத்து வச்சவனுங்க. நீ என்னடான்னா.. ப்ளீஸ் வாடா கண்ணா! முழுசா ஒரு பிரெஞ்ச் கிஸ் கொடுக்கக் கூட விட்டதில்லை நீ! இப்படியெல்லாம் காயப் போடாதே.. நான் பாவமில்லை..! முகத்தை பரிதாபமாக வைத்துக் கொண்டான்.

ஆமாம்.. ஆம்பிளைங்களப் பத்தி எனக்குத் தெரியாதா? இப்ப இப்படித்தான் கெஞ்சுவீங்க. காரியம் முடிஞ்சப்புறம் நாங்க கெஞ்சணும். கால்ல கைல விழுந்து என்னை கை விட்றாதீங்க கண்ணாளன்னு கெஞ்சணும்!"

"ஏய் நான் அப்படிப்பட்டவனா? நீ என்னை கைவிடாம இருந்தா சரி! ப்ளீஸ் மைத்து.. எங்கேயாவது பிக்னிக் ஸ்பாட்டாவது போய்ட்டு வரலாம்!"

"பார்க்க பரிதாபமா இருக்கு யோசிச்சு சொல்றேன்!"

"ரொம்ப பிகு பண்ணாதே! அடுத்த வாரம் உன் பர்த்டே வருதில்லே... அப்பா.. சும்மா ஒரு ட்ரிப் பெங்களூர்க்கு ஃப்ளைட்லே போய்ட்டு வந்திடலாமா?

"அதென்ன பெங்களூருக்கு?"

"ஹி.. ஹி அங்கே எங்களுக்கொரு ஒரு ஹோட்டல் இருக்குல்லே.. அதை அப்படியே எப்படி நடக்குதுன்னு இன்ஸ்பெக்ஷன் பண்ணிட்டு.. ஒரு ரூம்ல ரிலாக்ஸா பேசிட்டு...!"

"நீ.. ரூம்ல.. பேச... யாருக்கு காது குத்தறே? அங்கெல்லாம் நான் வரலேப்பா?!"

"சீ.. சீ.. நீயெல்லாம் ஒரு பொண்ணா? இருக்க முடியாது. நிச்சயமா இருக்க முடியாது. பக்கத்துல அர்விந்தசாமி மாதிரி ஒரு லவ்வரை வச்சிக்கிட்டு, இங்கே தொடாதே, அங்கே தொடாதே! இங்கே வரமாட்டேன், அங்கே வரமாட்டேன்ன? உன் உடம்புல ஹார்மோன் இருக்கா இல்லையா? இது சரிப்படாத கேஸ்... நான் பேசாம பவித்ராவை லவ் பண்ணப் போறேன்!"

"ஏய்.. அது யார் பவித்ரா?" திடுக்கிட்டுப் போனாள் மைத்ரேயி.

"என் மாமா பொண்ணு! வயசு வந்த நாள்லேர்ந்து கொக்கு மாதிரி ஒத்தைக் கால்லே நின்னுக்கிட்டிருக்கா! கல்யாணம்னு ஒண்ணு ஆனா, அது மதனோடதான். இல்லேன்னா... மரண தேவனோடதான்னு! அடடா... பொண்ணுன்னா அவ இல்லே பொண்ணு! உன் நெஞ்சில் ஈரமே இல்லே! அவ இதயத்துல அருவிய ஓடுது. ஒரு பார்வை பார்த்தா போதும்! அந்த அருவி மேல என் தலையை சாய்ச்சு அணைச்சுப்பா!" என்றான் உணர்ச்சிப் பொங்க.

உக்கிரமாய், கோபமாய் அவனை ஒரு பார்வை பார்த்தாள் மைத்ரேயி!

"அப்ப.. மனசுல இப்படியொரு எண்ணம் வச்சிக்கிட்டுதான் என்கிட்டே இவ்வளவு நாளா பழகினியா?"

"சேச்சே... இல்ல... இப்பத்தான். ஜஸ்ட்.. நவ்!" அலட்டலாய் சொன்னான்.

"போ... அவக்கிட்டேயே போ! நெஞ்சுல போட்டு தாலாட்டுவா... குட்பை!" சட்டென எழுந்துக் கொண்டாள்.

மதனுக்கு முகம் கலவரமாகிப் போனது.

"ஏய்.. மைத்து... ஜஸ்ட்... ஃபார்.. ஃபன்! நான் அப்படி யெல்லாம்...!"

"ஆளை விடுப்பா...! விடுவிடுவென நடக்கத் தொடங்கினாள்.

"ஏய்.. ஏய்.. நில்லு! அந்த பவித்ராமேல எனக்கு இஷ்டமே இல்லே... சும்மா விளையாட்டுக்கு..."

"விளையாட்டுக்குக் கூட என்னை யாரும் இன்ஸல்ட் பண்றதை விரும்பலே. நீ உன் மாமா பொண்ணையே கட்டிக்க.. யார் வேண்டாங்கறா... எப்ப உன் மனசுல அவளைப் பத்தி ஒரு சிக்னல் விழுந்துச்சோ... அப்பவே நீ ஒரு 'ரோக்'னு புரிஞ்சுப் போச்சு!" பொங்கிய கண்ணீரை மறைக்க சிரமப்பட்டாள்.

"ஐய்யய்யோ.. நில்லு மைத்து.. பவித்ராவ நீ பார்க்கணுமே! அவளுக்கு மாறு கண்ணு!"

"...." நிற்காமல் நடந்தாள்.

"கறுப்பா இருப்பா தெரியுமா?"

"...." கார் கதவைத் திறந்து ஏறி அமர்ந்தாள்.

அவனும் சடக்கென்று மறுகதவை திறந்து... பக்கத்தில் அமர்ந்து.." அவ ஒத்தை நாடி மைத்து!" என்றான் பரிதாபமாய்.

"ஸோ வாட்? நீ முதல்ல கீழே இறங்குமேன்?"

"அதனாலென்னவா? போச்சு போ! அவ நெஞ்சுல சாஞ் சா... எலும்பு குத்தாதா?" என்றதும்...

அதுநேரம் வரை சிடுசிடுத்த முகம் சிரிப்புக்குத் தாவியது. அடக்க மாட்டாமல் சிரித்தவள் அவனையே பார்த்தாள்.

"யூ... ராஸ்கல்..." என்றபடி அவன் கன்னத்தில் வலிக்காமல் அறைந்தாள்.

7

லட்சுமி அதிகாலையில் எழுந்து குளித்து கோவிலுக்குச் சென்றாள். மைத்ரேயின் பெயருக்கு அர்ச்சனை செய்துவிட்டு வந்தாள்.

அன்று அவளின் பிறந்தநாள் அல்லவா? மறக்க முடியுமா?

அந்த நாள்?!

மைத்ரேயி பிறந்ததும் ரகுராமன் சந்தோஷ ஆரவாரத்தில் லட்சுமிக்கு முத்த மழையாய் பொழிந்தாரே? ப்ரேம் பிறந்த போதுக்கூட இவ்வளவு அவர் சந்தோஷப்படவில்லை. பெண் குழந்தை என்றால்.. அவ்வளவு ஆசை! தன் ஆசைப்படி லட்டு மாதிரி ஒரு பெண்ணை பெற்றுக் கொடுத்த லட்சுமியின் மேல் அவரின் காதலின் சதவீதம் கூடிக் கொண்டேப் போயிற்று.

ஆனால்... ஆனால்...

வலுக்கட்டாயமாய் தலையை உதறி வெளிவர எண்ணிய கண்ணீரை சிமிட்டி, மறுபடி உள்ளேயே இழுத்துக் கொண்டு அடுத்த வேலைக்கான ஆயத்தத்தில் ஈடுபட்டாள்.

'மைத்ரேயிக்கு பாயசம் என்றால் மிகவும் பிடிக்குமே! நிறைய தேங்காயைத் துருவி போட்டு, முந்திரியை நெய்யில் வறுத்துப் போட்டு, ஏலக்காய் மணத்துடன் சிறிது கேசரி பவுடரையும் போட்டு ஒரு கிண்ணத்தில் பாயசத்தை ஊற்றி வைத்தால்... ஒவ்வொரு ஸ்பூனாய், அவள் சப்பி ருசித்து சாப்பிடும் அழகை நாள் முழுக்கப் பார்த்துக் கொண்டே இருக்கலாமே!"

செயலில் இறங்கினாள். இன்னும் இருள் விலகவில்லை. மெதுவாய் மைத்ரேயி கண் விழிப்பதே ஏழரைக்குத்தான்.

இன்று அவளை சீக்கிரம் எழுப்பி குளிக்க வைத்து, பிரசாதம் வைத்து பாயாசம் குடிக்கச் செய்ய வேண்டும். அப்படியாவது இந்த சமையல்கார 'அம்மா' மீது கொஞ்சமேனும் பாசம் வராதா என் மகளுக்கு?' எதிர்பார்ப்பும் ஆவலுமாய் உள்ளே நுழைந்தவள் ஒருக்களித்து. கால்களை குறுக்கி, கைகளை அதனுடன் மடக்கி படுத்திருந்த விதம் கருப்பையில் தாயின் வயிற்றில் இருக்கும் சிசுவைப் போன்று இருந்தது.

பாசம் மேலிட, விரல்கள் நடுங்க அந்த பட்டுக் கன்னத்தை தொட்டதும், லேசாய் இமைகள் துடித்தன.

"மைத்ரேயி, மைத்ரேயி..." சன்னமாய் அழைத்தாள்.

"ம்...!" கண்களைத் திறக்கவில்லை.

"மைத்ரேயி, எந்திரிம்மா!2

"ம்... என்ன மம்மி?" புரண்டு குப்புறப் படுத்தாள்.

'மம்மி' லட்சுமியினுள் சிலிர்த்தது.

'என்னையா சொன்னாள் மம்மி என்று!'

"எந்திரிம்மா... இன்னைக்கு உன் பிறந்தநாள் இல்லையா? எந்திரிம்மா!"

அவ்வளவுதான்!

Optimized using trial version www.balesio.com

தூக்கம் பறந்தோட குலுக்கிப் போட்டதுப் போல் எழுந்தமர்ந்து, "மம்மி... இந்த பிறந்த நாளுக்கு என்ன ப்ரசென்ட் தரப்போறே?" என்று ஆவலாய் கேட்டவள்.. அது நேரம் வரை ஜீரோ வாட்ஸ் பல்பில் தெரிந்த உருவம், பிசிறின்றி இப்போத கண்களுக்குப் புலப்பட.. நொடியில் முகம் மாறினாள்.

"ஏய்.. வாட்ஸ்திஸ் நான்சென்ஸ்? நீ.. நீ.. என்னை எதுக்கு எழுப்புனே? போயும், போயும் பிறந்த நாளும் அதுவுமா இன்னைக்கு உன் முகத்திலேயே நான் முழிக்கணும்? இடியட்.. உனக்கு யார் குடுக்கிற இடம் இது?"

"என்னம்மா இங்கே சத்தம்?" என்றபடி சுகுணா! அங்கு லட்சுமியையும் பார்த்து வியந்தாள்.

"அட... லட்சுமி! இந்த நேரத்துல நீ எங்கே இங்கே? கையில என்ன பாயாசம்?

"வா... மம்மி! இன்னைக்கு என் பர்த்டே அதுவுமா இந்த மூதேவி முகத்தில விழிக்க வேண்டியதாயிடுச்ச! வழக்கம் போல நீதான் எழுப்பறியோன்னு பார்த்தா... கடைசியில இது! சே.. மூட் அவுட் பண்ணிட்டா! ஆஃப்ட்ரால் ஒரு குக்! இந்தளவு என் மேல உரிமை எடுத்துக்கிட்டு என் விஷயங்களிலி தலையிடறது பிடிக்கலே! இவ யார் என்னை வந்து எழுப்ப? எல்லாம் நீ குடுக்கற எடம் மம்மி?2 காச்மூச்சென்று கத்தினாள்.

சுகுணா, லட்சுமியையேப் பார்த்தாள். கையில் பாயாசம். டேபிளின் மேல் கோவில் பிரசாதம். முகம் சுருக்கி அவளையேப் பார்த்த சுகுணாவுக்கு கோபம் வரவில்லை. மாறாக வியப்புதான் ஏற்பட்டது.

"இன்னைக்கு மைத்ரேயிக்கு பிறந்த நாள்னு உனக்கு எப்படித் தெரியும் லட்சுமி?2

"அது... அது வந்து?"

"அதானே இவளுக்கு எப்படித் தெரியும்? நம்ம வீட்ல யாருக்கும் பர்த்டேயை விசேஷமா கொண்டாடறதில்லையே!" மைத்ரேயுக்கும் ஆச்சர்யமாய் இருந்தது.

"அது... அது..."

"பெரிய ஐயா சொன்னாரா?"

"ஆ... ஆமாம்மா...!" நிம்மதியாய் மூச்சு விட்டாள்.

'என் உயிரில் தாங்கி பிரசவித்த என் மகளின் பிறந்தநாளை யார் வந்து எனக்குச் சொல்ல வேண்டும்?' நாக்கு துடித்தது.

"டாடி என்ன சொன்னார்? இப்படித்தான் காலைல வந்து என்னை எழுப்பச் சொன்னாரா? எதுக்காக நீ வந்து எழுப்பினே?"

"கோ... கோவில் பிரசாதம், பாயாசம்...!"

"மண்ணாங்கட்டி அந்தளவு உரிமைய எடுத்துக்கிட்டு இதையெல்லாம் செய்ற வேலையை இனி வச்சுக்காதே! செருப்பு எங்கேயிருக்கணுமோ... அங்கேயிருந்தாதான் மதிப்பு! எனக்கு ஐஸ் வைக்காதே! சம்பளம் கூடக் குறைச்சி போட்டுத்தாங்கன்னு மம்மிக்கிட்டே கேட்டா.. தரப் போறாங்க... அதுக்காக... என்கிட்டே தாஜாப் பண்ற வேலையெல்லாம் வெச்சுக்காதே என்ன?"

பளாரென அறைந்ததுப் போலிருந்தது. கண்ணீரை மறக்க சிரமப்பட்டாள் லட்சுமி.

'நான் யாரென்று தெரியுமா மைத்ரேயி! தெரிந்தால் இப்படியெல்லாம் பேசுவாயா? என்னைவிட உரிமை வேற யாருக்கு உண்டு?'

திரும்பி நடந்தாள் சோர்வாக.

"ஏய்... நில்லு இதையெல்லாம் எடுத்துட்டுப்போ!"

"அது... அது கோவில் பிரசாதம்மா!"

"அது எங்களுக்கும் தெரியும். எடுத்துட்டுப் போன்னா... போயேன்...!"

"விடு மைத்ரேயி ஏதோ, உன் மேல உள்ள பாசத்தால தெரியாம செஞ்சுட்டா.. கோவில் பிரசாதத்தை வேண்டாங்காதே. நீ போ லட்சுமி!"

"ஏதோ நீங்க சொல்றதால கேக்கறேன். என்னமோ தெரியலை மம்மி! இந்த பொம்பளையைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கலே...!"

வெளியேறிக் கொண்டிருந்தவளின் காதில் அட்சர சத்தமாய் விழுந்தது வார்த்தைகள்.

பொம்பளை!

அடிவயிற்றில் 'சுருக்' கென்று ஒரு வலி!

"சரி விடு... ஹாப்பி பர்த்டே டூ மை டியர்!" சொல்லிவிட்டு மைத்ரேயியின் கன்னத்தில் முத்தமிட்டாள் சுகுணா.

"தாங்க்யூ மம்மி!"

"இந்தா... இது என்னோட பர்த்டே ப்ரசென்ட்!" ஒரு சாவி வளையத்தை நீட்டினாள்.

"என்ன மம்மி இது கீ?"

"ரொம்ப நாளா கேட்டுட்டு இருந்தியே ஸ்கூட்டி! அதோட 'கீ' தான் இது!"

"வாவ்... தாங்க்யூ.. தாங்க்யூம்மா!" சந்தோஷ மிகுதியில் அவள் கழுத்தை இறுக்கி முத்தமிட்டாள்.

"என் குழந்தைங்களை மடக்கிப் போட ஐஸ் வைக்கறியா? நீ தலைகீழா நடந்தாலும் அது நடக்காது. அன்டர்ஸ்டான்ட்?" இறுமாப்புடன் சொன்னார் ரகுராமன்.

நிதானமாய் அவர் குடித்து வைத்த கோப்பையை எடுத்துக் கொண்டவள், "மணல்ல சர்க்கரையை கலந்தாலும், எறும்பு சர்க்கரையை இனம் கண்டுடும்! அதேப் போலத்தான் ஒரு தாயோட அன்பும்! நிஜத்தை ரொம்ப நாளைக்கு மறைச்சு வைக்க முடியாது பெரியய்யா! அது தன்னால ஒருநாள் வெளிச்சத்துக்கு வந்துதான் தீரும்!" என்றவள் அவர் பதிலை எதிர்பார்க்காது வெளியேறினாள்.

"ஏன்லட்சுமிம்மா..உன் முகமெல்லாம் வீங்கி, கண்ணெல்லாம் சிவந்துப் போயிருக்கு?" பள்ளிக்கு புறப்பட ஆயத்தப்படுத்த

கொண்டிருந்த விஜிக்கு உதவியாய் புத்தகங்கள் எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவள் ஒரு அசட்டுப் புன்னகையை உரித்தாள்.

"ஓ.... ஒண்ணுமில்லேம்மா!"

"நீ சொல்லலேன்னாலும் எனக்குத் தெரியும்!"

"...."

"அக்காவுக்கு கொஞ்சம் முன்கோபம் ஜாஸ்தி! ஆனாலும் அவ நல்ல டைப்தான் லட்சுமிம்மா! ஆனா உன்கிட்டே மட்டும்தான் அவ ரொம்ப ஓவரா நடந்துக்கறா. அதான் ஏன்னே புரியலை. ஆமா... டாடி உன்கிட்டே சொன்னாரா? அக்காவோட பர்த்டே இன்னைக்குன்னு!"

"அ.... ஆமாம்! பரிதாபமாய் தலையாட்டினாள்.

"ஆச்சர்யமாயிருக்கு. அவர் இப்படியெல்லாம் உன்னைப் போல ஆளுங்கக்கிட்டேல்லாம் சொல்லமாட்டாரே! எங்ககிட்ட பேசக்கூட அவருக்கு நேரமிருக்காதே!"

"இல்லேம்மா... அவர்தான் சொன்னார். யார் யாருக்கு எப்பப்போ பிறந்தநாள்னு?"

"அப்படியா? அப்ப சொல்லுப் பார்ப்போம். ப்ரேம் அண்ணாவுக்கு எப்ப பர்த்டே?2

"செம்டம்பர் பதினாறு!"

"டாடிக்கு?"

"ஆகஸ்ட் இருபது!"

"எனக்கு?"

திக்கென்று நிமிர்ந்தாள்.

"சொல்லு... எனக்கெப்போ?"

"...."

"பார்த்தியா? என் பர்த்டேய மட்டும் மறந்துட்டியே... போ.. நீ என்கிட்டே பேசாதே!" நிஜமான வருத்தத்துடன் கோபித்துக் கொண்டாள் விஜி.

லட்சுமி அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"வேணாம்மா? நீயும் என்னை வெறுத்துடாதே கண்ணு!" நாத்தழு தழுத்தது.

"ஐய்யய்யோ... அழறியா என்ன? சும்மா விளையாட்டுக்கு சொன்னேன். நானாவது... உன்கிட்டே பேசாம இருக்கறதாவது.. வரட்டுமா?" ஆறுதலாய் கூறிவிட்டுப் போனவளை பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள் லட்சுமி.

மதனின் பார்வை போன திக்கையே பார்த்தவளுக்கு கர்ரென்று ஏறியது கோபம்.

ஒரு மிடி லேடி டாக் டாக்கென்று நடந்துப் போனாள். அவள் பின்னழகையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் மதன்.

"ஐயா... மன்மதனாரே... கொஞ்சம் பார்வைய இப்படி திருப்பறீங்களா?"

"ஹி... ஹி... சும்மா...!" அசடு வழிந்தான்.

"வெக்கமாயில்லே... இப்படி வெறிச்சுப் பார்க்கறியே! காமுகா!"

"சேச்சே... நீ ஏன் சீரியஸா எடுத்துக்கறே? நான் கலைக் கண்ணோடத்தான் பார்த்தேன்!"

"யாரு... நீ?"

"நிஜமாமைத்து..தப்பான அர்த்தத்துலநான்பார்க்வேயில்லே! அந்தப் பொண்ணு நேச்சுரலி க்யூட்டா இருக்கா. ஆனா, அளவுக்கதிகமா மேக்கப் போட்டதால ஆர்ட்டிஃபிஷியலா தெரியறா... அதைதான்...!"

மைத்ரேயி எதுவும் சொல்லாமல் அவனையேப் பார்த்தாள்.

"கோபமா? ஏதாவது பேசும்மா! இதெல்லாம் வயசுக் கோளாறு ஆனா, என் மைத்ரேயிக்கு நான் விசுவாசமான ராமன்!"

"தண்ணியில எழுதி வைக்கணும் உன் வார்த்தைய... நாய் வாலை நிமிர்த்தத்தான் முடியுமா?"

"லொள்... லொள்.. லவ்!" என்று குரைத்து அவள் தோள் பட்டையில் வலிக்காமல் கடித்தான் மதன்.

"சீச்சீ.. இதென்ன?"

"நாய் வால்த்தனம் பண்ணுது... சும்மாயிரு!"

சின்ன கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தாள்.

"பேசாமயிரு. இல்லாட்டி நாய் வண்டி வந்தா பிடிச்சிக் குடுத்துடுவேன்!" என்றவள் தங்களை கடந்துச் சென்ற சக மாணவன் பாபுஜியையே பார்த்தாள்.

"என்ன மைத்து? பாபுஜிய அப்படிப் பார்க்கறே?"

"என்னதான் சொல்லு... மலையாளீஸ் ஒரு தனி அழகுதான். கம்பீரம் தான்!"

"அட..!"

"நிஜமாத்தான்! நான் பார்த்த பெரும்பாலான கேரளத்து ஆண் மகனெல்லாம், நல்லா உயரமா, கட்டுமஸ்தான உடல்வாகோட, அடர்த்தியான மீசையோட, ஆழமான ஊடுருவும் பார்வையோட.... ஆளை அசைச்சுப் பார்த்துடறாங்கப்பா!" மைத்ரேயி லயித்துப் பேசினாள்.

"நீ... பேசறது சரியில்லே மைத்து!"

"நம்ம... மோகன்லாலே எடுததுக்க.. தூள்.. ஃபிகருப்பா! அந்த சிரிப்பும், அந்த பார்வையும் கொக்கிப் போட்டு இழுக்கும் பெண்களை! எந்த பெண்ணுமே மானசீகமா அவரை லவ் பண்ணிடுவா! காலாபாணியில் என்னா போடு போட்டாரு பார்த்தியா? தபுவோட லவ் பண்ற சீன்லெல்லாம் நான் அப்படியே கனவுலகிலே மிதக்க ஆரம்பிச்சிட்டேன். எப்படின்னு கேளு! தபுவோட எடத்துல என்னை இறுத்தி வச்சுப் பார்த்தேன்!"

"கண்றாவி! இதை என்கிட்டேயே சொல்றியா?"

"நீ வேணா பாரு! மேகன்லாலை வச்சு எப்படியாவது ஒரு படம் நான் டைரக்ட் பண்றேனா, இல்லையான்னு! நான்

நினைக்கிறேன் அவர் முகத்துக்கு அந்த மீசைதான் பெரிய ப்ளஸ் பாயிண்ட்டுனு. உனக்குமிருக்கே.. கரப்பான் பூச்சிக்கு இருக்கற மாதிரி!"

அழும் நிலைக்கே வந்துவிட்டான் மதன்.

"இதோ பார்! நீ படிச்ச படிப்பெல்லாம் போதும். நான் நாளைக்கே உங்க வீட்ல வந்து உங்கப்பாவ பார்த்துப் பேசப் போறேன். அடுத்த வாரமே கல்யாணம். அனைக்கு நைட்டே சாந்தி முகூர்த்தம்! பாவி... ஒவ்வொரு ஆம்பளையையும் இப்படி வர்ணிக்கிறியே... நீ உருப்படுவியா? இந்த மதனோட வயிற்றெரிச்சல் உன்னை சும்மா விடாது. நீ பத்து பன்னெண்டு குழந்தைகளை பெத்துக்கிட்டு எப்பவுமே வாயும் வயிறுமாதான் இருப்பே!"

"இதுக்குப் பேரு சாபமா...? படவா...?

அவன் தொடையை நறுக்கென்று கிள்ளினாள்.

"ஆ.."வென்ற அலறிய அலறலில் பாபுஜி ஓடி வந்தான்.

என்ன மதன்?"

"ஐயோ ஒண்ணுமில்லே... ஒண்ணுமேயல்லே... நீ முதல்ல போப்பா!" மீண்டும் அலறினான் மதன்!

8

வேலையெல்லாம்முடித்துக்கொண்டுபோகஎந்தனித்தவளை சுகுணா அழைத்தாள். பக்கத்தில் பைப் புகைத்துக் கொண்டு ரகுராமன் அமர்ந்திருந்தார். அதை பார்க்க மனம் கனத்தது லட்சுமிக்கு.

எதிரே வந்து நின்றாள்.

"என்னம்மா?"

"நாளைக்கு சமையல் கொஞ்சம் தடபுடலா இருக்கட்டும்!"

"என்ன விசேஷம்?" கேட்கவில்லை. பார்வை கேட்டது.

"நாளைக்கு திதி! ஏழெட்டு ஸ்வீட், காரம்னு செஞ்சுடு!"

"யாருக்குமா திவசம்?"

"என்னோட முதல் மனைவிக்கு!" ரகுராமன்தான் சொன்னார் நிதானமாக.

சூடிழுக்கப்பட்டது போல் நிமிர்ந்தாள் லட்சுமி.

சோப்புநுரையை வழித்தெறிந்ததுப் போல் ஆங்காங்கே மேக குவியல்கள். ஜன்னல் வழியே தெறிந்த இந்த அழகை லட்சுமியின் உணர்வு உணரவில்லை. அவள் கண்கள் இடைவிடாது சுரந்து கொண்டிருந்தது. உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. இதயமோ பாறாங்கல்லாய் கனத்துக் கொண்டிருந்தது.

'நான் அப்பவே செத்திருக்கணும் என் கணவரோடு சந்தோஷமாய் வாழ்ந்த அந்த நாளிலேயே, பூவோடும், பொட்டோடும், மனம் நிறைந்த சந்தோஷத்தோடும் போயிருக்கணும், இப்படி மோசமான வாழ்க்கை எனக்கெதற்கு? இதையெல்லாம் பார்ப்பதற்கா... இந்த மாதிரி பேச்செல்லாம் அவர் வாயால் கேட்பதற்கா உயிர் காத்தேன்? உயிரோடு இருக்க எனக்கு திவசம் கொடுத்து வந்திருக்கிறார் என்றால்.. எந்தளவு என்னை வெறுத்திருப்பார்? கடவுளே... உனக்க கண்ணில்லையா? யாருக்கு என்ன பாவம் செய்தேன்? எதற்காக இப்படியொரு தண்டனை? எதற்காக இன்னும் நான் தவமிருக்கிறேன்? இப்படியே என் உயிரைப் பறித்துவிடு இறைவா... என்னால் எதையும் தாங்கிக் கொள்ள முடியவில்லையே...!' சத்தமின்றி அழுதாள் லட்சுமி.

'உனக்கும் தட்டுப் போட்டுக்க லட்சுமி!' ரகுராமன் மனைவியின் கையைப் பற்றி அருகே அமர்த்த முயற்சித்தார்.

"என்னண்ணாயிது புதுசா? நீங்க சாப்பிட்டு முடிக்காம நான் என்னைக்காவது சாப்ட்ருக்கேனா?"

"மரியாதை மனசுல இருந்தா போதும். நாம உடலாலேயும், உள்ளத்தாலேயும் இணைஞ்சவங்க.. இணையா சாப்பிட்டா என்ன தப்பு?' சாப்பிடு!"

"உங்க அளவுக்கு என்னால் பேசமுடியாதுங்க... தட்டைப் பார்த்து சாப்பிடுங்க... உங்களுக்கு பிடிச்ச புடலங்காய் கூட்டு, மோர்க்குழம்பு, அப்பளம் எல்லாம் அப்படி அப்படியே இருக்கு... சர்பபிடுங்கோ!"

"இதெல்லாம் சாப்பிடணும்னா... நான் சொல்றதைக் நீ கேக்கணும்!"

"சொல்லுங்கோ!"

"நான் ஊட்டி விடுவேணாம்.. நீ சாப்பிடுவியாம்!"

"ஐயோ.. என்னண்ணா நீங்க?" வெட்கத்தில் முகம் அந்திவானமாய் சிவந்தது.

"அட... என்ன இப்படி வெக்கப்படறே? வா.. லட்சுமி!"

"வெக்கமாயிருக்குண்ணா!"

"இதுக்குக் கூடவா?" என்றவர் காதலாய் அவள் கரம் பற்றி அருகேயிழுத்து தன் கையால் ஊட்டிவிட... வெட்கமும் பெருமையுமாய் சாப்பிட்ட லட்சுமியின் இடுப்பைப் பிடித்துக் கிள்ளினார்.

"ஆ...!" என்றலளினாள் லட்சுமி.

சாப்பிடும்போது இதென்ன சில்மிஷம்?" பொய்க் கோபத்தோடு சிணுங்கினாள்.

"அதுக்குத்தான் சொல்றேன். சீக்கிரம் சாப்பிடு. இந்த சில்மிஷத்தையெல்லாம்அங்கே வச்சுக்கலாம்னு!" கட்டிலைக் காட்டிக் கண்ணடித்தார்.

"வர.. வர ரொம்ப மோசமா பேச ஆரம்பிச்சிட்டேள்!"

மந்தகாசமாய் சிரித்து கொண்டு மீண்டும் அவள் கழுத்தில் விரலை ஓடவிட, நகர்ந்து உட்கார்ந்தாள் லட்சுமி.

"சும்மாருங்கோ... குழந்தை எழுந்துக்கப் போறான்!"

"என் புள்ளைக்குத் தெரியும்.. எப்பப்போ தூங்கணும், விழிக்கணும்னு எல்லாம் அவன் நன்மைக்குத்தானே?"

"என்ன சொல்றீங்க?" விழித்தாள்.

"அவன் ரொம்ப நாளா ஒரு பொம்மைய கேட்டுட்டு இருக்கான் விளையாட! எதுக்கு வீண் செலவு? பேசாம நாமளே அழகா ஒரு உயிருள்ள பொம்மைய குடுத்துட்டா...?"

"அச்சச்சோ...!" என்று மேலும் சிவந்தது முகம்.

ரகுராமன் அந்த கிராமத்திலேயே அதிகம் படித்தவர். அதனாலேயே அந்த ஊரில் அவருக்கு தனி மதிப்பு. பஞ்சாயத்துக் குழுவில் அவரும் இடம் பெற்றிருந்தார். படித்து பட்டம் பெற்றும் போதிய வசதியின்மையால் அவரால் டெபாசிட் கட்டி எந்த அலுவலகத்திலும் வேலை செய்ய முடியவில்லை. அதனால் தனக்கிருந்த சிறிய நிலத்தில்தான் விவசாயம் செய்து வந்தார். அதே கிராமத்தில் பெயருக்கேற்ற சொர்ண விக்ரமாய் ஜொலித்த லட்சுமியை மணந்தார். மனைவியை உயிரினும் மேலாக நேசித்ததன் சின்னமாய் மூன்று வயது மகன் ப்ரேம் குமார். இப்போது வயிற்றில் அடுத்த சின்னம் எட்டு மாதம்.

வருமானம் குறைச்சல் என்றாலும் அந்த இல்லத்தில் மகிழ்ச்சிக்கு பஞ்சமேயில்லை. கணவனும், மனைவியும் போட்டி போட்டு அன்பைக் கொட்டி திணறிப் போயினர். ஊரே இவர்களைப் பார்த்து கண் வைத்தது.

'கணவன்... மனைவின்னா.. இப்படியில்ல இருக்கணும்!'

மைத்ரேயி பிறந்தபோது ரகுராமன் வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்தார். அவர் ஆசைப்பட்டபடியே பௌர்ணமி நிலவுப் போல் தகதகவென ஜொலிக்கும் அழகுடன், தலை கொள்ளா முடியுடன், பெண் குழந்தையாக பிறந்து விட்டதில் பூரித்துப் போனார்.

"தாங்க்ஸ் லட்சுமி... ரொம்ப ரொம் தாங்க்ஸ்!"

லட்சுமி புருவம் சுருக்கினாள்.

"என்னங்க இது? எதெதுக்கு நன்றி சொல்றதுன்னு ஒரு வரைமுறை யில்லையா? இவ நம் குழந்தைங்க!"

"ஸாரி. சந்தோஷத்துல என்ன பேசறதுன்னே புரியல லட்சுமி. குழந்தை எவ்ளோ அழகாயில்லே? சுருட்டை முடி

ஸ்பிரிங் போல... சின்ன மூக்கு, கூர்மையா மல்லிப்பூ மாதிரி.. யப்பா... இந்த உதடை பாரேன். செக்கச் செவேர்னு... கண்ணு நாவல் பழம் மாதிரியே இல்லே."

"போங்கண்ணா... குழந்தைக்கு உங்க கண்ணே பெரிசா இருக்கு. அவ அப்படியே உங்களையே உரிச்சு வச்சு பொறந் திருக்கா. ப்ரேம் கூட உங்க சாயல்தான்!" லட்சுமிக்கு பெருமை பிடிபடவில்லை.

"கவலையேப் படாதே... அடுத்ததை உன்னை மாதிரி பெத்துக்கலாம்!"

"இன்னொன்னா? வேணாம்ப்பா! இந்தரெண்டே போதும்!"

"நான் விட்ருவேனா? ஐயா ஐந்தாண்டு திட்டமே போட்டு வச்சிருக்கேன்...!" குறும்பாய் சொல்லியபடி தன் தலையை லட்சுமி தலையோடு செல்லமாய் மோதினார்.

"தங்கம் விக்கிற விலைக்கு இந்த ஒரு பொண்ணையே வளர்த்து, ஆளாக்கி கட்டிக்குடுக்க தகிங்கிணத்தோம் போடணும். நீங்க என்னன்னா...?"

"ஏன் லட்சுமி? நாம எப்பவும் இப்படியேவா இருந்துடப் போறோம்? பார்த்துட்டே இரு... எம்பொண்ணு பொறந்த ராசி... நம்மள ஒஹோன்னு தூக்கி விடப்போறா...!"

"என்ன சொல்றீங்க?"

"டவுன்ல பால் தொட்டி ஒண்ணு தொறக்கப் போறேன். அங்குள்ள பெரியவங்க ஒப்புதல் கடிதத்தோட உயர்மட்ட அதிகாரிங்களை அடுத்த வாரம் சந்திச்சு ரெண்டு, மூணு வாரத்துல ஆரம்பிச்சிடுவேன். பாங்க்ல லோன் ஒவ்வொரு பிஸினஸா இறங்கி ஒரு கைப் பார்த்துடுவேன். பாங்க்ல லோன் கேட்டு பார்க்கலாம்னு ஒரு ஐடியா! அந்த பணத்தை வச்சு வெளியூர்ல ஒரு பெரிய பிஸினஸா ஆரம்பிப்பேன்...! ஏய்.. என்ன அப்படிப் பாக்கறே?"

"இல்ல... உங்களுக்குள்ள இத்தனை கனவுன்னு ஆச்சர்யப்பட்டுப் போறேன்."

"கனவா? பார்த்துட்டே இரு.. அத்தனையும் நனவாக்கறேன்..."

நாட்கள் நகர்ந்தன.

ரகுராமன் வாய்ச்சொல் வீரர் மட்டுமல்ல. செயலிலும் வீரர்தான் என்பதை நிரூபித்தார்.

ஒவ்வொரு பிஸினஸாய் அடியெடுத்து வைக்க, பணம் சேர்ந்தது. குடும்பத்தில்சந்தோஷத்தின் மடங்கு அதிகரித்தது.

அன்று...!

மைத்ரேயியை குளிப்பாட்டி சாம்பிராணி புகை காட்டி, பவுடரும் மையுமாய் விழிகளை அகலப்படுத்தி, ஒரு சின்ன கூடை நாற்காலியில் உட்கார வைத்த லட்சுமி சாம்பார் கொதிக்கும் மணம் நாசியைத் தொட எழுந்தோடினாள்.

குளித்து முடித்து துவட்டியபடியே சாப்பிட அமர்ந்த ரகுராமன் மைத்ரேயியை தூக்கிக் கொஞ்சினார். இப்போது அவளுக்கு மூன்றுவயது! பேச்சு டாண் டாண் என்று வந்தது. கேள்வி கேட்பவர்களையே எதிர்க் கேள்வி கேட்டு திணறடித்தாள்.

"மைத்ரேயி குட்டி... அப்பாவுக்கு ஒரு முத்தாக்குடு..."

"ம்ஹூம்..." தலையை ஆட்டி அழகாய் மறுத்தது.

"ஏன்டா?"

"நீதான்... எனக்கு மித்தாயே தரலையே...!"

"ஓஹோ... என் கண்ணம்மாவுக்கு அதனாலதான் இவ்வளவு கோபமா? நான் இப்ப முக்கிய வேலையாய் வெளியேப் போறேனாம்! வரும்போது ஒரு பாக்கெட் நிறைய சாக்லேட் வாங்கி வருவேனாம். இப்ப என் மைத்ரேயி குட்டி ஒரு முத்தா குடுக்குமாம்!"

"மொதல்ல வாங்கித் தந்தாதான்!"

"அடி இப்புடி கறாரா இருக்கியே...!" என்றபடி பெருமைத் தாளாமல் குழந்தையை முகமெங்கும் முத்தம் கொடுத்தார்.

"அடேயப்பா.. பொழுது விடிஞ்சா பொழுது போனா போதும்! உங்க மகளை வச்சே கொஞ்சிகிட்டிருங்க... மொதல்ல சாப்பிடுங்க. அப்புறம் முத்தம் கொடுக்கலாம்!"

"என்ன பொறாமையா இருக்கா? உனக்கும் மிச்சம் வச்சிருக்கேன் லட்சுமி! கவலையேப் படாதே!"

"பிள்ளைங்க எதிரே இதென்னங்க பேச்சு?" மென்மையாய் கடிந்து கொண்டாள்.

"ஆமாம். ப்ரேம் எங்கே?"

"என்னப்பா?" என்றபடி அம்மாவின் பின்னாலிருந்து வெளிப்பட்டான். லட்சுமியின் முந்தானையின் முனையை சுருட்டி வாயில் வைத்துச் சப்பிக் கொண்டிருந்தான்.

"விட்றா ராஸ்கல்! இவனுக்கு இதே பழக்கமாகப் போச்சு. இப்படி துணிய வாயில வச்சு சூப்பும்போதெல்லாம் வாயப்பார்த்து ஒண்ணு போட்டறதை விட்டுட்டு...!"

"ஆமாம். சின்னப்பிள்ளை.. அவனுக்கென்னத் தெரியும்? ஸ்கூல்ல சேர்த்து விட்டா இந்தப் பழக்கம் தன்னால விட்றபோறது!"

"உன் புள்ளைய ஒண்ணும் சொல்லிடக் கூடாதே...!"

"உங்க பொண்ணு மட்டும்என்னவாம்? கூட கூட வாய் பேசுறா. மூனு வயசிலேயே இவ்வளவு வாயாடினா வளர வளர என்னெல்லாம பேசுவாளோ?"

"இந்தகாலத்திலஎதிர்பேச்சுபேசினாத்தான்சாதிக்கமுடியும்.. பார்த்துட்டேயிரு... எம்பொண்ணை எப்படி வளர்க்கிறேன்னு? வர்ற ஜூன் மாசம் ப்ரேமை ஸ்கூல்ல விட்றலாம். அப்படியே என் மைத்ரேயி குட்டியக்கூட எலிமென்ட்ரி ஸ்கூல்ல பேபி க்ளாஸ் சேர்த்து விடப் போறேன்!"

"இதென்ன கூத்து? பால் மணம் மாறாத வயசுல பள்ளிக்கூடத்துக்கா? வேணாங்க... குழந்தைங்களை பிஞ்சு வயசுலேயே கஷ்டப்படுத்த வேண்டாம். அதுக்காத்தானே

ப்ரேமையே இதுவரைக்கும் பள்ளிக்கு அனுப்பாம வச்சிருக்கேன்!"

"சரி... அதை அப்புறம் முடிவு பண்ணலாம்.. பசிக்குது, டயமாகுது.. தட்டைப் போடு!"

லட்சுமி பரிமாறினாள்.

"என்ன... பொரியல், கூட்டு, வடை, அப்பளம், பாயசம்னு அமர்க்களப்படுத்தறே.

"இன்னைக்கு சித்திரை கிருத்திகையாச்சே?" என்றவள் ஒரு கிண்ணத்தில் ஆறிய பாயசத்தை ஊற்றி ஒரு ஸ்பூனை போட்டு மைத்ரேயின் அருகில் வைத்தாள். இருவரும் கண்கொட்டாமல் ரசித்தனர்.

ப்ரேம் பாதிச்சாப்பாட்டில் "வேண்டாம்" என்று எழுந்து கொண்டான்.

"இப்படித்தாங்க... கொஞ்ச நாளா, இவன் சரியா சாப்பிடறதில்லை. வயித்தில பூச்சி இருக்குதுன்னு நினைக்கிறேன். வைத்தியர்கிட்டே கூட்டிட்டுப் போகணும்!" கவலைப்பட்டாள் லட்சுமி.

"இன்னைக்கு ஒருநாள் விடு! நாளைக்கு கூட்டிட்டுப் போறேன். டவுனுக்கு கிளம்பறேன்... நான் பாங்க்ல லோன் கேட்டிருந்தேனே... சாங்ஷன் ஆயிருக்குன்னு நாட்டாமை சொன்னாரு. நானும் அவரும்தான் இப்ப டவுனுக்குப் போறோம் பணத்தோட வருவோம். இன்னும் கொஞ்ச நாள் தான் இந்த கிராம வாழ்க்கை! வெளியூர் போய் லெதர் பிஸினஸ் தொடங்கப் போறேன். அப்புறம் பார்... பணம் கூரையைப் பிச்சிக்கிட்டுக் கொட்டப் போகுது. உன் உடம்பை தங்கத் தாலேயே மூடிடுவேன். என் குழந்தைங்களை வெஸ்டர்ன் ஸ்டைல்ல வளர்ப்பேன். பெரிய பங்களா... நாலஞ்சு கார்... ஏழெட்டு பாங்க்ல அக்கவுண்ட்ஸ்...!"

"மொதல்ல தட்டைப் பார்த்து சாப்பிடுங்க...!"

"உனக்கு கிண்டலா இருக்கா? இப்படியெல்லாம் கிண்டல் பண்ணினே.. உன்னை மட்டும் கிராமத்துல விட்டுட்டு போய்டப் போறோம் பார்!" செல்லமாய் எச்சரித்தார்.

ஆனால் அந்த எச்சரிப்பும், அவர் சொன்ன வார்த்தைகளும் அப்படியே பலிக்கப் போவதை பாவம் லட்சுமி அறியவில்லை.

9

மழை ஆர்ப்பாட்டமாய் அழுது களைத்து, விசித்துக் கொண்டிருந்தது. சிறிது தூறல்களின் சிலிர்ப்பில் லட்சக்கணக்கான நீர்பரப்பு பெரிதாகிக் கொண்டே போவதை அந்த இருட்டில் யாராலும் பார்த்து ரசிக்க முடியவில்லை.

லட்சுமி நிமிடத்திற்கொருதரம் வாசலைத் திறந்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். முகத்தில் கவலைக் கோடுகள். குழந்தைகள் இருவரும் சாப்பிட்டுவிட்டு தூங்கிக் கொண்டிருந்தனர்.

மணி... இரவு ஒன்பதை நெருங்கிக் கொண்டிருக்க, ரகுராமன் இன்னும் வீடு திரும்பவில்லை. காலையில் பாங்க்குக்கு போனவர்.. இன்னும் காணோம்.. எண்ணக்கூடாதவைகளை எல்லாம் எண்ணி கலவரப்பட்டாள்.

'இவர் பணத்தோடு வருகையில் எந்த திருடனாவது பணத்துக்காக இவரை... கடவுளே! ஏன் இப்படியெல்லாம் என்னை நினைக்க வைக்கிறாய்? அவரை எந்தவித இடர்பாடுமின்றி வீட்டில் கொண்டு வந்து சேர்த்துவிடு ஈஸ்வரா... உனக்கு பாலாபிஷேகம் பண்றேன்!"

"தட்.. தட்... தட்.."

கதவு தட்டப்பட்டது.

ஆவலாய் எழுந்தோடினாள்.

திறந்து கொண்டிருக்கும் முன்பே அவளைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த உருவம் நிச்சயம் ரகுராமன் இல்லை.

"யார் நீ?" என்று அவள் கேட்கும் முன்பே கதவை சார்த்தி மூச்சு வாங்கினான் அவன்.

ஆஜானுபாகுவாய், கருப்பாய் கண்கள் மிரட்சியோடும், சட்டையெங்கும் ரத்தக் கறையோடும், முழுக்க நனைந்திருந்த அவனைப் பார்க்கும் போது லட்சுமிக்கு திகில் அடிவயிறு வரைப் பரவியது.

"யா... யார் நீ? ... போ.. போய்டு... வெளியே போய்டு!"

கையெடுத்துக் கும்பிட்டான் அந்த மனிதன். ரகுராமன் வயதுதான் இருக்கும் அவனுக்கு.

"தங்கச்சி... என்னை தப்பா நினைக்காதே. நான் திருடவோ, வேறு எந்த கெட்ட எண்ணத்துடனோ... இங்கே வரலை...!

"பி... பின்னே... எதுக்காக?"

"என் உயிரைக் காப்பாத்திக்க வந்தேனம்மா! நான் வெளியூர்க்காரன். நல்ல வசதியோட இருப்பவன். மனைவியை இழந்தவன். ஒரே மகள்! ரெண்டு வயசு குழந்தையை என்னை பெத்தவங்க பொறுப்பில் விட்டிருக்கேன். ஆனா, என் சொத்தை அடையமச்சான்காரன் சதி செய்தான். என்னையேக் கொல்லத் துணிஞ்சான். கைகலப்புல பெரிய உருட்டுக்கட்டைய எடுத்து ஒரே போடா போட்டேன். ஆள் காலி! போலீஸ் என்னைத் தேடுது. நான் நிரபராதிம்மா! வேணுமின்னே இந்த கொலையை பண்ணலே! போலீஸ்ல நான் மாட்டிக்கிட்டா என் பொண்ணு அனாதையாயிடுவா! நான் மாட்டக்கூடாது. நல்ல வக்கீலை பிடிச்சி ஆஜராகணும். அதுவரைக்கும் நான் மாட்டக்கூடாது. இன்னைக்கு இரவு வரைக்கும் இங்கே எனக்கு அடைக்கலம் தந்தால்.. விடியறப்ப கிளம்பிடுவேன். வக்கீல் மூலமா ஜாமீன் வாங்கி எப்படியாவது தப்பிச்சிடுவேன்.. என்னைக் காட்டிக் கொடுக்காதே தாயீ...!

லட்சுமிக்கு அந்த மனிதனைக் காண பரிதாபமாய் இருந்தாலும் இரவு முழுக்க வீட்டில் அவனுக்கெப்படி அடைக் கலம் கொடுக்க முடியும்? அதுவும் அவர் இல்லாதபோது.. தவிர ஒரு குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுப்பது சட்டபடி குற்றமாயிற்றே? போலீஸ்க்குத் தெரிய வந்தால்... என்னையுமல்லவா தண்டிக்கும்? அவள் யோசித்துக் கொண்டி ருக்கும்போது மேற்குப்புற சுவற்றிலிருந்து பல்லியின் சப்தம் கேட்டது.

அவளுள்... ஏதோ நடக்கக்கூடாத ஒன்று நடக்கப் போகிறது என்பது போல் உடல் முழுக்க சூடு பரவியது.

"ஐயா... நீங்க செஞ்சது உங்க வரையில நியாமா இருக்கலாம். ஆனாலும் நீங்க என் வீட்ல தங்க முடியாதய்யா... என் புருஷன் இதை அனுமதிக்க மாட்டார். அவர் வர்ற நேரமாச்சு... வர்றதுக்குள்ளே.. வெளியேப் போய்டுங்க!"

சடுதியில் அந்த மனிதனின் முகம் கர்ண கடூரமாயிற்று. விநாடிப் பொழுதில் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தைகளின் அருகே போனான்.

"இதோ பார்! என்கிட்டேயே நீ கதை விடாதே! நீ என்ன பண்ணுவியோ, ஏது பண்ணுவியோ தெரியாது. இப்போதைக்கு நான் போலீஸ்ல மாட்டக்கூடாது. அதுக்கு உன் வீடுதான் எனக்கு சரணாலயம். விடியற வரைக்கும் நான் இங்கேதான் இருப்பேன். எனக்கு பாதுகாப்பு தரவேண்டியது உன் பொறுப்பு. எனக்கெதிரா ஏதாவது பண்ண நினைச்சே? இந்த ரெண்டு குழந்தைகளையும் கழுத்தை நெரிச்சி கொன்னுடுவேன்.. ஜாக்கிரதை!" அந்த மனிதனுக்கே ஆச்சர்யம்தான். 'நாமா இப்படிக் கொடூரமாய் பேசுகிறோம்?' என்று லட்சுமிக்கு மயக்கம் வரும் போலாயிற்று.

"வேணாம்.. என் குழந்தைங்களை ஒண்ணும் செஞ்சுடாதே! கையெடுத்துக் கும்பிடறேன்.. ஒண்ணும் பண்ணிடாதே! என் புருஷன் வர்ற நேரமாச்சே?!"

"ஷ்... ஷ்... அதே பாட்டை திரும்பத் திரும்பப் பாடாதே! உன் புருஷன் வந்த பிறகு நடக்கறதைப் பத்தி... அப்ப யோசிக்சுக்கலாம்!" அவன் குழந்தைகளின் அருகிலேயே அமர்ந்து கொண்டான்.

லட்சுமியோ கோழிக்குஞ்சாய் நடுங்கி ஒடுங்கிப் போனாள்.

ஊருக்குள் நுழைந்தனர் ரகுராமனும், நாட்டாமையும்,

"என்னங்கய்யா... திடீர்ன இப்படி மழை பிடிச்சிட்டுதே! நம்ம ஊர்ல அதிகமா பெய்யலே போலிருக்கு டவுன்ல ஒரேயடியாக அடிச்சு தள்ளிட்டுதே!"

"ஆமா ரகு! நம்ம ஊர்ல அதிகமா பெய்யலேதான். இன்னும்

இதே மாதிரி ஒரு மழை அடிச்சி விட்டா விளைச்சலைப் பத்தி கவலைப்பட வேணாம். ரொம்ப லேட்டாயிடுச்சு. இந்த பஸ்காரன் அநியாயத்துக்கு லேட்டாக்கிட்டான்."

"எனக்காக நீங்க ரொம் கஷ்டப்பட்டீங்க ஐயா! உங் உதவிய நான் சாகற வரைக்கும் மறக்க மாட்டேன்யா?"

"சேச்சே.. என்ன பேச்சு பேசற ரகு? நம்ம ஊர்லேயே அதிகம் படிச்ச உன் படிப்பு வெறும் விவசாயத்தோட மல்லுக்கட்டி நிக்கப்படாது. அதுக்குத்தான் ஆயிரம் பேர் இருக்கோமே! நீயாவது ஒரு தொழிலைத் தொடங்கி.. வேலையில்லாத நாலு பேருக்கு வேலை கொடுத்த அது எங்களுக்கும் பெருமையில்லையா? தவிர, உங்கப்பா என் நெருக்கமான சினேகிதன். அவன் உயிரோடஇருந்த இதையெல்லாம் செஞ் சிருப்பான். அவன் ஸ்தானத்துல இருந்து நான் செய்யறேன். இது என் கடமையுங்கூட..!" நெகிழ்ச்சியாய் பேசினார் நாட்டாமை.

"ஆனாலும் உங்களுக்கு பெரிய மனசுங்க. இவ்வளவு பெரிய தொகைக்கு ஜாமீன் கையெழுத்துப் போட எத்தனை பேர் முன் வருவாங்க? நான் கேட்கறதுக்கு முன்னே... நீங்க போட்டீங்களே...!"

"உன் மேலயும், உன் திறமை மேலயும் உள்ள அசாத்திய நம்பிக்கை தான் ரகுராமா! நீ உயரணும் இந்த ஊரும், உலகமும் அசந்து நிக்காறப்பல நீ பெரிய மனுஷனாகி காட்டணும். அந்த கவுரவம் தான்டா எனக்கு வேணும். நான் பெக்கலைன்னாலும், நீயும் என் புள்ளை தாண்டா ரகு! உன்னை நாலு பேர் புகழ்ந்து பேசறதை கேட்டு நான் சிலிர்த்து நிக்கணும். அதுதான்டா நான் எதிர்பார்க்கறது"

பணம் அடங்கிய லெதர் பேகை கக்கத்தில் இடுக்கிக் கொண்டு நாட்டாமையின் கையைப் பற்றி கண்களில் வைத்து வணங்கினான் ரகுராமன்.

"உங்க எதிர்பார்ப்பை நான் வீணடிக்க மாட்டேனய்யா! என் வாழ்க்கையில் கடைபிடிக்கிற உண்மையையும், உழைப்பையும் நான் செய்யப்போகிற தொழில்லேயும் பயன்படுத்தி முன்னுக்கு வருவவன். அடுத்த மாசமே குடும்பத்தோட மெட்ராஸ்க்கு போய்டலாம்னு இருக்கேன்"

"ஏம்ப்பா.. அங்கே வீடு கிடைக்கிறது கஷ்டமாச்சே?"

"அங்கே எனக்கொரு சினேகிதன் இருக்கான். அவன் மூலமா பார்த்து வச்சிட்டேன். லெதர் ஃபேக்டரி ஆரம்பிக்க வேண்டிய போதிய இடமும் வீட்டோ சேர்ந்தே இருக்கு.. அதனால பிரச்சினையே இல்லை!2

"பேஷ்... பேஷ்... அதோ வீடு நெருங்கிட்டுது. நீ போ... நான் இப்படியேப் போய்டறேன்!"

"ஐயா வீட்டுக்குள்ள வந்து ஒருவாய் தண்ணியாவது குடிச்சிட்டுப் போனா, சந்தோஷப்படுவேன்!"

"சரி உனக்காக வர்றேன். ஆனா சாப்பாடெல்லா போட்றாதேப்பா! என் வீட்ல எனக்காக சாப்பிடாம காத்துக்கிட்டிருப்பா.." என்று சிரித்தபடி கூற... இருவரும் வாசல்முன் நின்றனர்.

"லட்சுமி... லட்சுமி.. கதவைத் திற...!" தட்டினான் ரகுராமன்.

விசுக்கென்று எழுந்து நின்று கொண்ட லட்சுமி, துடித்த இதயத்தை கைவைத்து அழுத்திக் கொண்டாள்.

"லட்சுமி சீக்கிரம் திற. நனையறோம் பார்.. நாட்டாமை ஐயாவும் நிக்கிறார்... சீக்கிரம்.." ஓங்கித் தட்டினான்.

குபுக்கென்று பொங்கிய கண்ணீரோடு அந்த மனிதனை நெருங்கி வந்தாள்.

அவனுக்கும் இப்போது என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான். 'இந்த வீட்டில் நுழைந்தது தப்பு. வெளியே இந்த ஊர் நாட்டாமையும் நிற்கிறார். இவர்களிடம் அகப்பட்டால் அவ்வளவுதான். அவள் கணவன் மட்டும் என்றாலாவது பரவாயில்லை.'

"இந்த வீட்டுக்கு வேற பின்பக்க கதவ ஏதுமிருக்கா?"

"இ... இல்லையே..."

"ஏய் லட்சுமி... என்னப் பண்றே இன்னும்? யாரோடப் பேசிட்டிருக்கே? சீக்கிரம் கதவைத திற...!" உள்ளிருந்து கிசுகிசுப் பாய்கேட்ட கட்டையான ஆண் குரல் அவனுள் கோபத்தை உண்டாக்கியது. 'யார் அது?'

அவனோ தன் ரத்தக்கறைப் படிந்த சட்டையின் மீது கொடியில் தொங்கிக் கொண்டிருந்த ரகுவின் வேட்டியை உருவி தலையிலிருந்து நன்கு போர்த்திக் கொண்டு தாழை திறந்து... வில்லிருந்து விடுபட்ட அம்பு போல் அவர்களை ஊடுருவி இடித்துக் கொண்டு ஓடியேப் போய்விட்டான்.

அவர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. நாட்டாமை சுற்றுப்புற சூழலை உற்று நோக்கினார். பயமும், பதற்றமும், இவர்களின் வருகையை எதிர்பாராத அதிர்ச்சியுமாய், முகமெங்கும் வியர்த்து ஒடுங்கி நிற்கும் அழகிய இளமை பொங்கும் லட்சுமி. அரைகுறை உடையோடு முகம் மறைத்து போர்த்திக் கொண்டு ஓடும் புதியவன்.. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று சுலபமாய் கணக்கு போட்டார். அதே கணக்கை ரகுராமனும் போட்டுக் கொண்டிருக்க... நாட்டாமை அவன் தோளில் கை வைத்தார்.

"என்னப்பா இது?"

ரகுராமன் லட்சுமியையே வெறித்துப் பார்த்தான். அவனின் பொருள் பொதிந்த பார்வையை தாளமாட்டாமல் அருகே வந்தாள் லட்சுமி.

"உனக்கு என்னடி குறை வச்சேன்?"

"ஐயோ...!"

"உனக்கு நான் பத்தலையா?"

"ஐய்யய்யோ...! என்ன வார்த்தை சொல்லிட்டீங்க? என்னைப் பார்த்தா இப்படியொரு வார்த்தை சொன்னீங்க? பேசாதீங்கோ. உங்க வாயால பேசாதீங்கோ... அவன் யாருன்னே தெரியாது!" கதறினாள்.

"தெரியாமயா... புருஷன் இல்லாத வீட்ல... இத்தனை நேரம் வச்சிருந்தே?"

"ஐயா.. ஐயா.. அவசரப்பட்டு வார்த்தையை அள்ளி வீசிடாதீங்கய்யா.. உங்களுக்கும் பொண்ணுங்க இருக்கு!2

அவளின் பேச்சு நாட்டாமையை உசுப்ப கோபம் மூக்கை விடைக்கச் செய்தது.

"எம் பொண்ணுங்க கூடப் பொறந்த அண்ணன் தம்பிங்க எதிரேகூட நின்னு பேசாதுங்க... சே... உன்னை ரொம்ப நல்ல

பொண்ணன்னுல்ல நினைச்சிருந்தேன்! ரகுராமா... நீ என் புள்ளைய போல்ன்னாலும்,... நீதியும், நியாயமும் இந்த ஊரைப் பொருத்தவரை பொதுவானது. படிதாண்டிய பத்தினிகளுக்கு இந்த ஊர்ல என்ன தண்டனைன்னு உனக்கு தெரியாததல்ல. அதுவும் சாட்சிக்கு நானே நிற்கிறேன். நீ மானஸ்தன்னு எனக்குத் தெரியும். காலையே ஒரு பிராது குடுத்துடு. நாளைக்கு பஞ்சாயத்தை கூட்டிடலாம்!" என்று கூறிவிட்டு நடைபயின்று விட்டார்.

அவர் மூட்டிவிட்டுப் போன தீ ரகுராமனின் நெஞ்சில் கொளுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

நாளைக்குபஞ்சாயத்துகூட்டப்படும்.வழக்கமாய்இதுபோன்ற குற்றங்களுக்கு விபச்சாரி என்று முத்திரை குத்தி சாகும் வரை அவள் தீண்டத்தகாதவளாய் ஊருக்கு ஒதுக்குபுறமாய் தனியே வசிக்க வேண்டும். கணவனோ, குழந்தைகளோக்கூட அவளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது.

இது எவ்வளவு பெரிய அவமானம்? ஊரெல்லாம் வணங்கம் மரியாதை நாளை வேரோடு சாயப் போகிறது. இந்த ஊர் முகத்தில் எப்படி விழிப்பேன்!' ரகுராமன் கொஞ்சம் கொஞ் சமாய் செத்துக் கொண்டிருந்தான்.

லட்சுமியோ, போற உயிரை பிடித்து வைத்துக் கொண்டு தன் நியாங்களை, நிஜங்களை கூறி கதறிக் கொண்டிருந்தாள். ஆனால், ரகுவின் காதில் எதுவுமே ஏறவில்லை. தன் கண்களை தான் பார்த்த சம்பவங்களைத் தவிர வேறெதையும் நம்பத்தயாராயில்லை.

ஒரு முடிவுக்கு வந்தவனாய் லட்சுமயின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளி கதவை சாத்தினான். தூக்கத்திலிருந்து விழித்து அழுது கொண்டிருந்த குழந்தைகளை அணைத்துக் கொண்டார். அவர் அழுவதை புரியாமல் பார்த்து பயந்து மேலும் வீறிட்டன!

லட்சுமி கதவை தட்டித் தட்டி ஓய்ந்து போனாள். இனி தட்டிப் பயனில்லை. காலையில் குழப்பம் ஓய்ந்து நிதானமாய் இருக்கும்போது எடுத்துக் கூறலாம். என் கணவர் நிச்சயம்

என்னைப் புரிந்து கொள்வார். என் அன்பும் கண்ணீரும் உண்மையை உணர்த்தும் என்று தீர்மானித்தவள் நாலைந்து தெரு தள்ளி இருந்த மாமாவின் வீட்டிற்கு போனாள்.

விடியுமுன்பே எழுந்து வந்து பார்த்தவள் மயக்கம் போடடு விழாத குறையாய் தடுமாறினாள். வீட்டின் முன் பூட்டு தொங்கியது. கணவரையும் காணோம், குழந்தைகளையும் காணோம்.

அழக்கூட முடியாமல் அமர்ந்து விட்டாள் லட்சுமி.

'ஒருநாள் இரவில் இப்படியெல்லாம் கூட நடக்குமா? மண் கோபுரமாய் என் வாழக்கை இப்படி சரிந்துப் போனதே! பாவி... அவன் யார்? அவன் மட்டும் வராதிருந் தால்.. இப்படியாகியிருக்குமா? அவனுக்கு தன்னை பாதுகாத்துக் கொள்ள என் வீடுதான் கிடைத்ததா? ஓடியவன், ஓடு முன்பு தான் இப்படிப்பட்டவன் என்று ஒரு வார்த்தை என் புருஷனிடம் சொல்லிவிட்டுப் போக கூடாதா? பாவி... கொலைக்காரன்... என் வாழ்க்கையையும் சேர்த்து குத்தி குதறிவிட்டுப் போய் விட்டாயே! ஐயோ... இனி என் நிலையென்ன? என் வாழ்க்கை...? என் குழந்தைகள்? பெத்தவங்கக் கூட இல்லாத நிலையில் என் எதிர்காலம்? கடவுளே... விடிய இன்னும் அதிக நேரம் இல்லை. விடிந்ததும் ஊரெங்கும் தண்டோரா போடுவார்கள். செய்யாத தப்பை செய்ததாக கூறி... ஐயோ வேணாம். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது. கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து செத்துப் போனால் என்ன? வேணாம்... நான் செய்யாத தவறை ஸ்திரப்படுத்தி கல்லறை கட்டி விடுவார்கள். இந்த ஊரைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. என் புருஷனை நம்ப வைக்க வேண்டும். என் கால் பெருவிரலைக் கூட பிற ஆண்மகன் பார்த்ததில்லை என்பதை நிரூபிக்க வேண்டும். எப்படியாவது அவரைப் பார்க்க வேண்டும். அதுவரை நான் உயிரோடு இருந்தே ஆக வேண்டும்.' லட்சுமி விழிநீரை சுண்டியெறிந்தாள்.

கிழக்கு வானில் பறவைகள் சிறகொடித்துப் பறக்க... சிவப்புப் பந்து மேல் நோக்கி எழ... லட்சுமி அந்த ஊரை விட்டு வெகுதூரம் போய்விட்டிருந்தாள்.

10

சென்னை மாநகரம்!

லட்சுமியை வரவேற்றது. ஆனாலும் எந்த தைரியத்தில் எதை நாடி, எதை தேடி வந்திருக்கிறோம் என்பதே புரியவில்லை. ஆனாலும் ஒரு வீம்பு, தான் கறைபடா தங்கம் என்பதை உணர்த்த உயிர் வாழ்ந்தே ஆகவேண்டும். லட்சுமிக்கு எந்த வேலையும் தெரியாது. கையெழுத்துப் போடத் தெரியும் என்றளவிற்கு படிப்பறிவு!

அந்த லட்சுமி கடாட்சமான முகமும், அலங்க மலங்க விழிக்கும் விழிகளும், சோகத்தைப் பூசிக் கொண்ட முகமும், மினுமினுக்கும் சந்தன நிற இளமையும், யாரோ முன்பின் அறிமுகமில்லாத ஒரு பெண்மணிக்கு இரக்கத்தை ஏற்படுத் தியது. லட்சுமியைப் பற்றிய விவரங்கள் அறிந்து தனக்குத் தெரிந்த செட்டியார் வீட்டில் சமையல் வேலையில் சேர்த்து விட்டாள்.

அந்த இடம் அவளுக்கு பாதுகாப்பாய் இருந்தது. அந்த சென்னையிலேயே தன் கணவரும் இருக்க வேண்டும் என்று நம்பினாள். காரணம், அடிக்கடி ரகுராமன் சென்னையில்தான் செட்டிலாக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

எங்காவது தன் கணவரின் முகமோ, குழந்தைகள் முகமோ கண்ணில் படாதா? என்று அந்த பெரிய ஊரில் தேடித் தேடியே அவள் விழிகள் மங்கிப் போயின.

லட்சுமியின் எண்ணம் தவறாகவில்லை. ரகுராமன் சென்னையில் அம்பத்தூரில்தான் இருந்தார். ஏற்கெனவே நண்பர் மூலம் பார்த்திருந்த வீட்டிலேயே தன் இரண்டு குழந்தைகளோடு வந்து தங்கியிருந்தார். தன் கடந்த காலத்தை முடிந்த வரை முற்றிலுமாக நினைவிலிருந்து தொலைத்துவிட கணநேரமும் வீணாக்காது தொழிலும், குழந்தைகள் கவனிப்பிலுமாக செலவிட்டார். ஆனாலும் இரவு என்றொரு பொழுது மட்டுமே... அவரை தூங்க வொட்டாமல் பழைய நினைவுகளை உசுப்பி கம்பளிப்பூச்சியாய் அரித்தெடுத்துக் கொண்டிருந்தன. நினைக்க... நினைக்க நாடி நரம்புகள்

முறுக்கேறி கண்கள் பலமாய் ஓங்கிக் குத்துவார். ஆத்திரத்திலும், வலியிலும் கண்கள் சுரக்கும்.

அதிகாலையிலேயே எழுந்து சமைத்து குழந்தைகளை தயார் பண்ணி பள்ளிக்கு அனுப்பிவிட்டு, மறுபுறம் இயங்கும் தன் சிறிய பேக்டரியை, உதவிக்கு இருவரை மட்டுமே வைத்து கொண்டு வேலை செய்து கொண்டிருப்பார். அப்போது ஒரு நாளில்தான் பாங்க் லோன் வசூலிக்கும் ஃபீல்ட் ஆபீஸர் மூன்று மாதமாய் பணம் கட்டாத ரகுராமனை தேடி வந்தார். ஸாரி... வந்தாள்.

அந்தஆபீஸர்வேறுயாருமல்லசுகுணாவேதான்.சுகுணாவுக்கு அந்த சூழ்நிலையே வித்தியாசத்தை உணர்த்தியது. ஒரு மீடியம் சைஸ் அறை. அதிலேயே கிச்சன், படுக்கை, பூஜையறைகளாக பயன்படுத்தப்பட்டிருந்தன. மறுபும் பேக்டரி, அதில் நாயாய் பேயாய் உழைக்கும் முப்பது வயது மனிதனை ஊன்றி கவனிக்க ஆரம்பித்தாள். அந்த முகத்திலிருந்த இறுக்கத்தை மீறிய வெறுமை சுகுணாவை என்னவோ செய்தது.

சாதாரணமாகவே இளகிய மனது அவளுக்கு. தந்தை பெரும் புணக்காரர். வேண்டிய அளவு சொத்தை சேர்த்துவிட்ட பின்பும், இன்னும் தேடி மலேஷியாவில் தன் நண்பரோடு சென்ட் தொழிற்சாலையை விஸ்தரித்து வருகிறார். கொள்ளை லாபம். அதனாலேயே அங்கேயே செட்டிலாகி விட்டார். தாயில்லா ஒரே மகள் சுகுணா மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவள் கேட்டு இவர் மறுத்தது கிடையாது. "எனக்கு இன்டியாவை விட்டுவர மனசில்லையப்பா.. நான் இங்கேயே இருந்துடறேனே!"

"தனியாகவா?"

"இன்டியாவுல எத்தனையோ கோடி மக்களுடன்தான்!"

"நாட்டி கேர்ள்! நல்ல மாப்பிள்ளையை பார்த்து முடித்துவிட்டு போகட்டுமா?"

"இவ்வளவு சீக்கிரமாகவா? இன்னும் பதினெட்டே ஆகலை. ஒரு நாலு வருஷம் போகட்டும் டாடி!"

"போரடிக்கும் கண்ணா...!"

"வேலைக்குப் போறேம்ப்பா!"

"நம்ம ஆபீஸ் மேனேஜ்மென்ட்டை ஏத்துக்கறியா சுகி?"

"அதுக்குரிய மெச்சூரிட்டி வரட்டும் டாட். அதுவரை வெளியார் அலுவலகத்தில்.."

"உன் விருப்பத்திற்கு மறுப்பேது செல்லமே...!"

நினைத்தபோது விமானத்தில் வந்து மகளை கொஞ்சிவிட்டுப் போவார். தினசரி தொலைபேசியில் அளவளாவுவார். சுகுணா ஒரு சேலஞ்சசிற்காக கல்லூரி படிப்பை முடித்த கையோடு பாங்கில் ஃபீல்ட் ஆபீஸர் வேலையில் சேர்ந்தாள். சம்பளம் குறைவு என்றாலும், அந்த சுறுசுறுப்பான சுழலும் வாழ்க்கை பிடித்துப் போகவேத் தொடர்ந்தாள்.

அடுத்ததாக அவள் மனதிற்கு பிடிக்கத் தொடங்கியது மைத்ரேயி தான். துறுதுறுவென்று இங்கும் அங்கும் கொலுசு சப்திக்க அது ஓடும் ஓட்டமும், வசீகரமும், மணிபிரவாக பேச்சிலும் தன் மனதை இழந்தாள்.

'இந்தக் குழந்தைகளுக்கா தாயில்லை?' அந்த வீட்டு சூழ்நிலையை வைத்து சுகுணா அப்படித்தான் முடிவு செய்தாள்.

சில மாத சந்திப்பில் ரகுராமனும், சுகுணாவிடம் சகஜமாய் பேசத் துவங்கியிருந்தார். மெல்ல அவர் குடும்பத்தைப் பற்றி விசாரித்தாள்.

"குழந்தைக்கு என்ன வயசு?"

"மூணுங்க.."

"அம்மா இல்லையா?"

எச்சிலை விழுங்கி கோபத்துடன் அடக்கிக் கொண்டவன் "செத்துப் போயிட்டா!" என்றான்.

"சின்னக் குழந்தைங்களா இருக்கே... பராமரிக்க கஷ்டமா இல்லையா?"

"அதுக்காக என்னங்க பண்ண முடியும்?"

"மறு கல்யாணம் பண்ணிக்குங்களேன்..."

"ஏன் நீங்க பண்ணிக்கறீங்களா?" சட்டென்று ரகு தன்னையுமறியாமல் யதேச்சையாகத்தான் அந்த வார்த்தையைக்கேட்டான். மறுகணமே, நாக்கை கடித்து தன் தவறுக்கு தலைகுனிந்தார்.

Optimized using trial version www.balesio.com

"மன்னிச்சிருங்க... நான் தெரியாம... "அவர் பேசுமுன்பே தன் காரில் ஏறி புறப்பட்டுவிட்டிருந்தாள் சுகுணா.

'மடையன் நான்! என்ன திமிர் இருந்தா.. ஒரு கல்யாணமாகாத பெண்ணைப் பார்த்து அப்படியொரு கேள்வியைக் கேட்டிருப்பேன்? நம்மீது இரக்கப்பட்டு அவள் கேட்டாளே.. அந்த பேச்சிற்கக் கூட நான் மதிப்பளிக்காமல்... சே... என் மனசும் எப்போது சாக்கடையாகிப் போனது?' அன்று இரவு முழுக்க அவர் தூங்கவே இல்லை. கண்ணைத் திறந்தாலும் மூடினாலும் சுகுணாவின் முகம் தோன்றி கஷ்டப்படுத்தியது.

ஆனால் அடுத்த வாரமே சுகுணா தன் வீட்டிற்கு புன்னகை பூக்க வருவாள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"வா.. வாங்க!"

"...." மௌனமாய் வந்தாள்.

"ஸாரிங்க.. அன்னைக்கு நான் அப்படி பேசியிருக்கக் கூடாது. மன்னிச்சிருங்க..."

"நானும் அதைப்பத்திதான் ஒரு வாரமா யோசனைப் பண்ணிட்டிருந்தேன்... அப்பறம்தான் உண்மையே புரிஞ்சது.."

"என்னங்க?"

"தெரிஞ்சோ தெரியாமலோ உங்களை நானும் நேசிக்க ஆரம்பிச்சது.."

"எ... என்ன?"

"இந்த குழந்தைங்களுக்கு அம்மாவா இருக்க ஆசைப்படறேன்.. அந்த இடத்தை எனக்குத் தருவீங்களா

"புரியாம பேசாதீங்க... நான் கல்யாணமானவன்!"

"பின்னே... குழந்தைகள் எப்படி வந்ததாம்? நான் மட்டும் இல்லேன்னா சொல்றேன்?" என்றாள் குறும்பாக.

"நீ... நீங்க பெரிய இடம்..."

"எங்கப்பாவோட உழைப்புதான் காரணம். அதே உழைப்பும், விடாமுயற்சியும் உங்ககிட்டேயும் இரக்கு"

ரகுராமனுக்குள் புது ரத்தம் உற்பத்தியானது.

"மிஸ்.. சுகுணா.. மறுபடி நல்லா யோசிச்சி... அப்புறமா பத்துநாள் கழிச்சி வாங்க..."

"அப்பவும் இதே கேள்வியத்தான் கேப்பேன். உங்க இனிஷியலை எனக்குத் தருவீங்களா?"

"எனக்கு பிரமிப்பா இருக்குங்க சுகுணா! நடக்கறதெல்லாம்... கனவு தானான்னு. உங்க அப்பா இதுக்கு ஒத்துக்குவாரா?"

"அந்த கவலையை விடுங்க... முக்கியமான கேள்வியை நான் கேக்கணுமே!"

"என்ன?"

"உங்களுக்கு என்னை பிடிச்சிருக்கா?"

"இதை நான் கேக்க வேண்டிய கேள்வியாச்சே! பரதேசிக்கு பாதாம் அல்வாவை குடுத்து... நல்லாருக்கா, இல்லையான்னு கேக்ற மாதிரி இருக்கு!" என்றதும் சுகுணாவின் அழகிய முகம் செம்மையைப் பூசிக் கொண்டது.

சுகுணாவின் அப்பா அரை மனதோடுதான் சம்மதித்தார். திருமணத்தை முடித்த கையோடு மலேஷியா பறந்து போனார்.

இல்லறம் இனிதாய் துவங்கியது.

விஜி பிறந்தநாள். ரகுராமனின் பிஸினஸ் பரந்து விரிந்தது. சுகுணாவின் அப்பாவும் இறந்துவிட கம்பெனி பொறுப்புகள் சுகுணாவின் பிடியில் வந்தன. வேலையை விட்டாள்.

இடைப்பட்ட வருடங்களில் லட்சுமியின் நினைவுகள் சுத்தமாய் அகன்று விட்டாலும் அந்த கடைசி நாள் பூகம்பம் வெடித்த நாளை மட்டும் மறக்கவில்லை. தன் கசப்பு. வெறுப்பையெல்லாம் காட்டிக் கொள்ள அந்த நாளை லட்சுமியின் இறந்த நாளாக்கி வருடா வருடம் திவசம் கொண்டாடி தன் காயத்திற்கு மருந்து பூசிக் கொண்டார்.

ரகுராமன் அந்த சம்பவத்திற்குப் பிறகு தன் ஊர் பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை. லட்சுமி என்ன ஆனாள்? என்பதை அவர் அறிந்து கொள்ளவும் விரும்பவில்லை. ஒருவேளை அப்படி ஊர் பக்கம் போயிருந்தாலாவது உண்மை அறிந்திருப்பாரோ? அவமானம் தாங்காது எங்கேயாவது நாலு முழக் கயிற்றில் தொங்கிவிட்டிருப்பாள் என்றே முடிவு கட்டினார்.

ஆனால், இப்படி இந்த நிலையில், தன் வீட்டிலேயே ஒரு வேலைக்காரியாக அவள் வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

இதுவரை பட்ட துன்பம் போதாது. இனி வரப்போகும் நாட்களே அவளுக்கு பாடம் புகட்டும் நாட்களாக அமைய வேண்டும் என்று தன் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார்.

அந்த சலனமற்ற முகத்திலிருந்து ரகுராமனால் எதையும் உணரமுடியவில்லை.

ஒரு பெரிய தாம்பாளத்தட்டில் படையலிட்டு வணங்கிய பின் ஒரு சேலை ரவிக்கையை வைத்து லட்சுமியிடம் நீட்டினாள் சுகுணா.

"என்னம்மா?"

"வருஷா.. வருஷம்.. யாருக்காவது இப்படி கொடுக்கறது வழக்கம். இந்த வருஷம் நீங்க இருக்கீங்களே... உங்களுக்கே கொடுக்கலாம்னு அவர் சொன்னார்..."

'எனக்கே திவசம் வச்சு... எனக்கே துணியா?' நினைக்கவே உள்ளம் நைந்துப் போக... ரகுராமனை ஏறிட்டுப் பார்க்காமல் வாங்கிக் கொண்டாள்.

அந்தக் கண்களில் சட்டென உற்பத்தியாகப் போகும் கண்ணீருக்காகக் காத்திருந்த ரகுராமன் ஏமாந்துப் போனார்.

"ஏம்மா.. சாப்பாடே வேண்டாம்னுட்டே? உனக்கு பிடிச்ச புலாவ் தான் செஞ்சிருக்கேன்!"

"தலையை வலிக்குது லட்சுமிம்மா! சாப்பிடவே பிடிக்கலே" கட்டிலில் குப்புறப்படுத்துக் கிடந்த விஜி முகம் சுருக்கினாள்.

லட்சுமி தைல பாட்டிலை கொண்டு வந்து விஜியின் நெற்றிப் பொட்டில் வைத்து இதமாய் தடவிக் கொடுத்தாள்.

"சித்த நேரம் படுத்துக்கோ விஜிம்மா! ஒரு பத்து நிமிஷம போனப்புறம் நான் ரசம் சோறு கரைச்சிக் கொண்டு வர்றேன். குடிச்சிடடப் படுத்துக்கோ... நைட்ல வயசுப் பொண்ணு வெறும் வயத்தோட படுக்கக் கூடாது" கரிசனமாய் சொன்ன லட்சுமியின் கையைப் பற்றி முத்தம் கொடுத்தாள் விஜி!

"இப்ப எதுவும் சாப்பிடணும்னு தோணலே! இதுவே மம்மி சொன்னாக்கூட மறுத்திருப்பேன். ஆனா லட்சுமிம்மா.. நீ சொன்னா... அதை என்னால மீற முடியலை. கொண்டு வா.. உன் கையால அதை நான் சாப்பிடறேன்!"

'பெத்த மகளுக்கே வராத பாசம் உனக்கு மட்டும் எப்படியம்மா வருது?' குபீரென்று விம்மிய நெஞ்சை அடக்க சிரமப்பட்டு எழுந்து போனாள் லட்சுமி.

11

அதென்ன? இப்பத்தான் சந்திச்சோம். பார்தது பேசி வீட்டுக்கு வந்து ஒரு மணிநேரம் கூட ஆகலே. அதுக்குள்ளே ஃபோனா? மைத்ரேயி ஆச்சர்யமாய் கேட்டாள். இடது கையில் ரிசீவர், வலது கையில் சிப்ஸ்... வாய்க்குக் கொடுத்துக் கொண்டிருந்தது.

"என்ன பண்றது மைத்து? நீ பாட்டுக்கு மலையாளிஸ்தான் பிடிக்கும்னு குண்டு போட்டுட்டே! அந்த பாபுஜி வேற உன்னையே சுத்தி சுத்தி வர்றான்....!"

"ஏய்... அவன் கல்யாணமானவன்ப்பா!"

"இப்பல்லாம் அதை யார் பார்க்கிறா? உயரமா, முகத்து நிறைய மீசை இருந்தாப் போதும்ங்கறாங்க. காதலுக்குத்தான் கண்ணில்லையே...!"

"இப்ப சொன்னியே... இது நூத்துக்கு நூறு நிஜம்... நிஜமாவே பாபுஜிக்கு..."

"அம்மா தாயே... வேற எதையாவது பேசும்மா...!"

"என்ன பேச? போரடிக்குதுப்பா.. நாள் முழுக்க உட்கார்ந்து பேசறது போதாதுன்னு.. இப்ப போன்ல வேற அறுக்கற! இன்னும் எவ்ளோ காலமிருக்கு? அப்பவெல்லாம்பேச எதையாவது மிச்சம் வையேன் மதன்!"

"பேசறதா? யார் அப்ப உன்னை பேச விடப்போறா? எல்லாமே ஆக்டிவ்தான். அப்புறம்.. ஒரு முக்கியமான விஷயம். உங்கப்பாக்கிட்டே எப்ப நம்ம விஷயத்தைப்போடடு உடைக்கப் போறே? இங்கே உடைச்சாச்சு... ப்ச்...

ஏன் என்ன ஆச்சு?"

"ஒக்கேன்னட்டார்...!"

"படவா... இதுக்கா வருத்தப்படறே?"

"காதல்னா வில்லன்னு ஒருத்தன் இருக்கணும். அப்பத்தாம்மாத்ரில்லிங்கா இருக்கும்...! நாளைக்கு டாடியோட நான் உங்க வீட்டுக்கு வர்றதா ப்ளான்!"

"...."

"ஏய் என்ன அமைதியாய்ட்டே...?"

"கொஞ்ச நேரம் கூட வெக்கப்பட விடமாட்டியா?"

"ஓஹோ.. அப்படியா! சரி ஒரு இது குடேன்!"

"எது?"

"அதான் அது?"

"ஓ... அதுவா?" என்றவன் இச்சென்று போனிற்கு முத்தம் கொடுத்து வைப்பதை அறைவாசலில் இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த லட்சுமிக்கு ரத்த நாளங்கள் கொதித்து. வந்த வேகத்தில் திரும்பிப் போனவள் ரகுராமனின் அறையை நோக்கிப் போனாள்.

அங்கே...

சோபாவடில் சுகுணாவின் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தார்.

தன் உயிரையே பறித்து யாரோ கசக்கிப் பிழிவது போல் துடித்துப் போனாள்.

சட்டபூர்வமான மனைவியாய் இருந்தும், தொட்டு பேச முடியாத அவலம். எல்லா உரிமைகள் இருந்தும் எதுவும் இல்லாத நிலை. தன் கண்ணெதிலே காதல் கணவன் இன்னொருத்தியைக் கொஞ்சுவதை.. ஞானியால்கூட தாங்கிக் கொள்ள முடியாதே! லட்சுமியால் மட்டுமே தாங்கிக் கொள்ள முடியுமா என்ன?

வந்த வழியே திரும்பிப் போக எத்தனித்தவளை சுகுணா பார்த்து சட்டென் சுதாரித்து நகர்ந்து கொண்டாள்.

"லட்சுமி"

நின்றாள்.

"இங்கே வா"

"....."

"மாடியில உனக்கென்ன வேலை? நாங்க யாராவது உன்னை வரச் சொன்னமா?"

"இ... இல்லே..."

"பின்னே எதுக்காக இங்கே வந்தே?"

பதில் சொல்ல முடியாத கேள்வியாய் திணறிப் போனாள். ரகுராமன் புன்னகை பூத்த முகத்துடன் அவள் சொல்லப் போகும் பதிலுக்காக காத்திருந்தார்.

"காலி டம்ளரை எடுத்திட்டுப் போகலாம்னு..."

"அதைத்தான் அப்பவே எடுத்துட்டுப் போய்ட்டியே..."

"மன்னிச்சிடுங்க... நினைவில்லே..."

"ம்.. போ இந்த மாதிரி திரும்ப இன்னொரு முறை நினைவில்லேன்னு வந்து நிக்க வேண்டாம். கொஞ்சம் நாகரீகமா நடந்துக்க தெரிஞ்சுக்க...!" சுகுணாவுக்கு லட்சுமி மீது கோபமாய் வந்தது.

'இன்னுங்கூட இந்த வீட்ல இருக்கணும்னு தோணுதா?'

மறுநாள் சுகுணா வெளியில் போய்விட்டிருந்த நேரத்தில் லட்சுமியைப் பார்த்து நக்கலாய் இந்த கேள்வியைக் கேட்டார் ரகுராமன்.

"இனிதான் எந்த காரணத்தை முன்னிட்டும் இந்த வீட்டை விட்டு போகக்கூடாதுன்னு முடிவே பண்ணிட்டேன்!"

"ஏன்? சுகுணா என்னோட நெருக்கமா இருக்கறதைப் பார்த்ததும் ஆசை வந்திடுச்சோ?"

"நிறுத்துங்க.." அடிக்குரலில் கிறீச்சிட்டாள். அந்த கத்தலுக்கு ரகுராமனேக்கூட ஓரடி பின்னே நகர வேண்டியிருந்தது.

"கேவலம்... வெறும் சதைங்க இணையறதுதானா தாம்பத்யம்? இது தான் முக்கியம்னு நான் நினைச்சிருந்தா, அட, ஆனது ஆகட்டும் நானும் எப்பவோ இன்னொரு சதைப்பிண்டத்தைத்

தேடிப் போயிட்டிருப்பேன். ஆனா, நான் இந்த தாலிய மதிக்கிறேன்... இதை கட்டினவரை பூஜிக்கிறேன். வாழ்ந்த அஞ்சு வருஷ தாம்பத்யத்தை அசைபோட்டு சந்தோஷிக்கிறேன். ஆனா சாகும்போது நீங்க குத்தின சிகப்பு முத்திரையோட சாகமாட்டேன். நிச்சயமா அதை அழிச்சிட்டே சாவேன். உங்க வாயாலே அதை நான் சொல்ல வைப்பேன். இந்த லோகத்திலே தெய்வம்னு ஒண்ணு நிஜமா இருந்தா... நான் சொல்றது நிச்சயம் நடக்கும்!"

"பேஷ்... பேஷ்... நடக்கட்டும்.. அதற்காக என் அட்வான்ஸ் வாழ்த்துக்கள்"

ரகுராமனின் அந்த கிண்டலை ஜீரணிக்க முடியாதவள் உதடை கடித்து துக்கத்தை அழுத்தி விழுங்கினாள்.

"இப்படியெல்லாம் நீங்க மாறிப் போவீங்கன்னு... நான் நெனச்சுக் கூடப் பார்க்கலீங்க.."

"என்ன பண்றது? நாயைக் குளிப்பாட்டி நடு வீட்ல வச்சுக்கற எந்த கண்ணியவானும் இப்படி மாறித்தான் போவான்!"

"எனக்கு... எனக்குப் போயா திவசம் தர்றீங்க? எந்த கல் நெஞ்சுக்காரரும் கூட இப்படியெல்லாம் செய்ய மாட்டாங்க!"

"என்னைப் பொறுத்தவரை நீ அன்னைக்கே செத்தாச்சு. மரியாதையாச் சொல்றேன். இந்த வீட்டை வீட்டு போய்டு. எந்த மாய்மாலம் பண்ணியும் என்னை நீ மாத்த முடியாது. சுகுணாவைத் தவிர,வேற யாருமே... அந்த இடத்துக்கு வரமுடியாது!"

வெறுமையாய் சிரித்தாள் லட்சுமி.

"அவ... இப்ப இருக்கிற இடமே என்னுதுதானே? பயப்படாதீங்க... அந்த அளவுக்கெல்லாம் மாய்மாலம் பண்ற தெம்பு இப்ப என்கிட்டே இல்லை! கவலை, என் இளமையையெல்லாம் உறிஞ்சி சக்கையாக்கிட்டது. என்கிட்ட இப்ப இருக்கறதெல்லாம் நம்பிக்கையும், தூய அன்பும்தான். நீங்க... உங்க சுகபோகத்திலேயே மூழ்கிட்டிருக்காம கொஞ்சம் நம்ம குழந்தைங்க மேலேயும் கவனத்தை செலுத்துங்கே!"

"அது எனக்குத் தெரியும். நீ சொல்ல வேண்டிய அவசியமில்லை"

"எப்படி அவசியமில்லாப் போகும்? என் குழந்தை என் கண்ணெதிரே பள்ளத்தில் விழுந்திடிருக்கா. நான் பல் பிடுங்கப் பட்ட பாம்பு! அவகிட்டேக்கூட நெருங்கி ஒரு வார்த்தை இதமா பேச முடியல. பெத்த தாயே குழந்தைக்கு பயப்படற அந்நீதி வேற எந்த தாயக்கும் வரக்கூடாது..."

"யாரைச் சொல்றே? மைத்ரேயி பத்தியா?"

"ஆமாங்க... யாரோ ஒரு பையன்கிட்டே போன்ல நாள் கணக்கா பேசிட்டிருக்கா."

"தெரியும். அது எந்த மாதிரி உறவுன்னும் எங்களுக்குத் தெரியும். என் சுகுணா அந்த பையனை நல்லா விசாரிச்சிருக்கா. அவ விரும்பற பையனுக்கே அவளை கல்யாணம் செஞ்சி வைக்கப் போறேன். இதுக்கு மேலே இந்த விஷயத்திலே நீ தலையிடாதே! கவலைப்படற மாதிரி சிரமப்பட்டு நடிக்கவும் செய்யாதே! அந்த யோக்யதை உனக்கில்லே... அதுக்கு நானும் சுகுணாவும் இருக்கோம்... புரியுதா?"

பலமாய் அவள் வாயை சார்த்திவிட்டுப் போய்விட்டார்.

அடுத்த மூன்றாவது மாதத்தில் மைத்ரேயிக்கும், மதனுக்கும் மிக விமர்சையாய் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது.

திருமணத்தைமுன்னிட்டுவேலையாட்களுக்குஇரண்டுமாத சம்பளமும் துணிமணிகளும் கொடுக்கப்பட்டது. மைத்ரேயி லட்சுமிக்கும் தன் கையால் அவற்றைக் கொடுத்தபோது, லட்சுமியின் சூடான கண்ணீர் அவளின் கையில் பட்டு சிதறியது.

நிஜமாகவே அந்த கண்ணீர் மைத்ரேயியை கொஞ்சம் அசைத்துப் பார்க்கவே செய்தது.

'ஏன் அழுகிறாள்? என்மீது இவளுக்கென்ன இப்படியொரு பாசம்?" என்று கொஞ்சம் அவள்மீது பரிதாப்பட வைத்தது.

திருமணப் பந்தலில் ரகுராமனும் சுகுணாவும் பாதபூஜை பெற... ஓர மூலையில் சந்தோஷமும், துக்கமுமாய் பூத்தூவி வாழ்த்தினாள் லட்சுமி.. தான் சுமந்து பெற்ற செல்வத்தை!

12

"எப்படி... என் மகளின் கல்யாணம்? எந்த மாதிரி சீரும் சிறப்புமாக நடத்தினேன் பார்த்தியா? பெத்த மகளின் கல்யாணத்தை கிட்டே இருந்தும் எட்ட நின்று ரசித்த தாய் இந்த உலகத்தில் நீ மடடுமாகத்தான் இருப்பாய் ல்லவா?"

"...."

"அடிக்கடி சொல்வியே... தெய்வங்கள் உனக்கு துணையாய் நிற்கும் என்று! இந்த முக்கியமான நேரத்தில் எங்கே போனது உன் தெய்வங்கள்?"

"...."

"இப்போது புரிகிறதா? தெய்வங்கள் நல்லவர்களுக்கு மட்டும் தான் துணைபோகும் என்று!"

லட்சுமியின் புண்பட்ட இதயம் மேலும் வலித்தது.

லட்சுமிக்கேக் கூட இப்போது ஒரு பெரும் சந்தேகம் எழுந்தது.

'உண்மையில் தெய்வங்கள் இருக்கின்றதா... இல்லையா? இருந்திருந்தால் இந்த அபலையை ரத்த கண்ணீர் வடியவிட்டு இன்னுமா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்?'

லட்சுமியின் தாய் உள்ளத்திற்கு அடுத்து ஒரு அடி காத்திருந்தது.

இரவு!

கரிய வானில் பாதரஸமாய் மின்னும் நட்சத்திரங்கள். ஒரு சேரில் அமர்ந்து கால்களை டீப்பாய் மேல் நீட்டி, சுவாரஸ்யமாய் சிகரெட் பிடித்து புகையை அண்ணாந்து விட்டுக் கொண்டிருந்தனர் ப்ரேம். கண்களில் இளம் சிவப்பு ஏறியிருக்க, அவனின் இடது கையில் ப்ரவுன் நிற திரவம். வலது பக்க சிறிய டீப்பாய் மீது ஒரு புட்டி. ஷீவாஸ் ரீகல்! ஸ்பென்சர் சோடா, ஐஸ் க்யூப், இடுக்கி, எல்லாமே இருந்தது.

"எங்கே இந்த லட்சுமி? சிக்கன் ஃப்ரை எடுத்துவரச் சொல்லிட்டு மேலே வந்து அரைமணியாய்ட்டது. இன்னும் என்ன செய்யறா?" எரிச்சலாய் வாசலைப் பார்த்தவன் லட்சுமி ட்ரேயுடன் வருவதைப் பார்த்ததும் கேட்டான்.

"எப்போ கேட்டேன்? ஆடி அசைஞ்சு எடுத்திட்டு வர்றே? வர வர நீ ரொம்ப சோம்பேறியாய்ட்டே! இந்தா இப்படி வா... அந்த சோடாவை திற...!"

லட்சுமி ஆடிப் போனாள்.

'இந்தப் பழக்கமெல்லாம் கூட இவனுக்கு உண்டா? கடவுளே...!'

"ஏய்.. காதிலே விழலே? சோடாவை திறக்கச் சொன்னேன்"

"வே.. வேணாம்ப்பா!"

"என்ன வேணாம்?" பொறுமை மீறி எரிச்சலாய் பார்த்தான்.

"இது ரொம் கெட்ட பழக்கம் நீ குடிக்கக் கூடாது."

"நான் சென்ஸ்! உன்னை யாரும் இங்கே சஜஷன் கேக்கலே! என்ன நீ? என்னைப் பார்த்து நீ, வா, போன்னு பேசற? மரியாதையா சோடாவை திறந்து ஊத்துப் போறியா, இல்லைய?"

"இல்லை... நீ குடிக்கக் கூடாது. உன்னை குடிக்க விட மாட்டேன். என் கண்ணெதிலே நீ குடிச்சி அழிஞ்சிப் போறதை நான் பார்த்துட்டிருக்க முடியாது" என்றவள் ஆவேசமாய் தன்னிலை மறந்து டீப்பாய் மீதிருந்த புட்டியை எடுத்து வீசியெறிந்தாள்.

"ச்சலீர்..." வினாடி நேரத்தில் ஷீவாஸ் ரீகல் ரத்தப்படலமாய் ஓடியது.

அவ்வளவுதான்.

கோபமும் போதையும் உச்சியைத் தொட.. விசுக்கென்று எழுந்த ப்ரேம், எழுந்த வேகத்தில் தன் வலது கையை வீசி லட்சுமியின் இடது கன்னத்தை பழுக்க வைத்தான்.

கண்களை இருட்டிக் கொண்டு வந்தது லட்சுமிக்கு!

"வேலைக்கார நாயே... எத்தனை திமிர் இருந்தா, இப்படியொரு காரியம பண்ணுவே! உன்னை இப்படியே விடக் கூடாது. ச்சீப்போடி...!" அவள் தலைமுடியைக் கொத்தாகப் பற்றித் தள்ளி விட்டான்.

சரியாய் வாசல்படியில் போய் விழுந்தாள். இன்னும் சற்று தள்ளி விழுந்திருந்தாலும்.. மாடிப்படியிலிருந்து உருண்டு வர வேண்டியிருக்கும்.

பிஸினஸ் விஷயமாய் பேச ப்ரேமைத் தேடி வந்த ரகுராமனை இந்தக் காட்சி தாக்கியது.

லட்சுமியிடம் வந்த அவர் நிதானமாய் மெல்லிய குரலில் சொன்னார்.

"நான் சொல்லலே...? தெய்வம் உன்னை எப்பவோ கைவிட்டாச்சு...!"

எதையும் நம்ப முடியாமல் நடந்து முடிந்து சம்பவத்தை ஜீரணிக்கவும் முடியாமல் திகைத்து கிட்டதட்ட மயக்க நிலையில் இருந்த லட்சுமிக்கு கணவனின் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றும் வார்த்தைக்கு சுருண்டு போனது மட்டுமின்றி அவமானம் தாங்கமாட்டாமல்... கீழே தட்டுத் தடுமாறி இறங்கிப் போய் விட்டாள்.

அவள் போனதை உறுதி செய்து கொண்ட பின் ரகுராமன் ப்ரேமிடம் வந்தார்.

ஒரு கணம் மகனை உற்றுப் பார்த்தவர் அடுத்த கணம் பளாரென அறைந்தார்.

"டா... டாடி...!" எதிர்பாராத அடியில் அதிந்து போனாள் ப்ரேம்..!

"ஆயிரம்தான் இருந்தாலும்.. அவ உன் அம்..."

"டா..டி?!"

"உன் அம்மா மாதிரிடா! வயசானவங்களை இப்படி கைநீட்டி அடிக்கக் சொல்லி.. எந்த காலேஜ்ல சொல்லிக் கொடுத்தாங்க?"

"டா...டி...!"

"அவ அதிகம் படிக்காதவ... உன்மேல நிறைய பாசம் கொண்டவ, இப்ப இந்த காலத்துல இதெல்லாம் சாதாரணம்னு எடுத்துக்கத் தெரியாத அப்பிராண. நீ கெட்டுப் போகக் கூடாதுங்கறதுக்காக... உன்னை கண்டிக்கறதுக்கு அவளுக்கு மட்டுமில்ல.. யாருக்குமே உரிமையிருக்கு!" என்றவர் திரும்பிப் பாராமல் விறுவிறுவென்று இறங்கி நடந்தார்.

ஏனோ? ரகுராமனின் இதயம் கூட கொஞ்சம் அழத்தான் செய்தது.

தாய்மை உயர்வானது இல்லையா? அது வேசியாய் இருந்தாலும் சரி. கோபுரத்தில் வீற்றிருக்கும் மகாராணியாய் இருந்தாலும் சரி.. தாய் தாய் தான்.. தாய்மை மதிக்கப்பட வேண்டும். வணக்கப்பட வேண்டும். அவள் தெய்வம். தெய்வத்தை வணங்க வேண்டுமே தவிர, போட்டு நொறுக்கக் கூடாது.

ரகுராமனுக்கு லட்சுமி மேல் மலையளவு வெறுப்பு இருந்தது நிஜம். அவள் பெற்ற குழந்தைகளே அவளை உதாசீனப்படுத்த வேண்டும் அதுவே பெரிய தண்டனையாக இருக்க வேண்டும் என்று நினைத்தாரே தவிர, இப்படி கைநீட்டி பத்துமாதம் கருவில் சுமந்த அன்னையை அவமானப்படுத்த விரும்பியதில்லை.

இந்த சம்பவத்தால் லட்சுமி மீதிருந்த வெறுப்பு ஓரளவு குறைந்ததென்னவோ நிஜம்தான்!

ப்ரேம் கூட தந்தையை திகைப்பாகப் பார்த்தான்.

'இதற்கு முன் எத்தனையோ வேலையாட்களை கைநீட்டி அடித்திருக்கிறேன். அப்போதெல்லாம் கண்டிக்காத அப்பா... இப்போது... தோள்மீறி வளர்ந்த மகனை ஒரு வேலைக்கார நாய்க்காக அடிப்பதா?'

ப்ரேமின் கோபம் அத்தனையும் ஒட்டுமொத்தமாய் லட்சுமியின் மேல் திரும்பியது.

இரண்டே மாதத்தில் ஒரேயடியாய் உருக்கி விட்டிருந்தது உடம்பு. இதுநாள் வரை இல்லாத அளவிற்கு கவலையும், வேதனையும், போதாதற்கு இருமலும் சேர்ந்து அவளை வெகுவாய் பாடுபடுத்தியது.

'பெத்த மகனே கை நீட்டி அடிப்பதா?'

'செல்வமே.. நான் யாரென்று தெரிந்திருந்தால் அடித்திருப்பாயா?'

இதையெல்லாம் பார்த்துக் கொண்டே நின்றிருந்தது மட்டுமின்றி... ஏளனமாய் பேசிவிட்டப் போன கணவரை என்னவென்பது? இப்படியெல்லாம் துன்பங்களை அனுபவித்து உயிர்வாழ வேண்டும் என்பது தலையெழுத்தா? கண்ணிறைந்த கணவன். அழகழகாய் இரு குழந்தைகள். மாட மாளிகை கூப்பிட்ட குரலுக்கு கைநீட்டி நிற்கும் வேலையாட்கள். அதில் ஒரு வேலைக்காரியாய் நான்! ஆண்டவா... என்னதான் உன் நோக்கம்? நான் நினைத்தது எதுவும் நடக்காதா? சத்தியம் ஜெயிக்காதா? பூவோடும், பொட்டோடும், நான் மண்ணுக்கு போகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மங்களத்தை தந்தவர் இவர்தான் என்று உலகிற்கு நிரூபிக்காமலேயே போய்விடுவேனா?'

'நான் செத்த பிறகாவது கணவனுக்கே உரிய சடங்கை செய்வாரா, மாட்டாரா? என் பிள்ளை எனக்கு கொள்ளிப் போடுவானா மாட்டானா?'

'எப்படி கொள்ளிப் போட முடியும்? ஒரு சாதாரண சமையல்காரிக்கு எப்படிப் போடுவான்? அவர் மீதான் சத்தியத்தை நான் மீற முடியாது. என் கணவரே மனமுவந்து சொன்னால்தான் தெரியும்.. நான் அவர் சகதர்மினி என்று! கேட்டுப் பார்ப்போமா?' உடனே இதற்கு பதிலைப் பெறாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலிருந்தது.

உள்ளே சென்றாள்.

குடும்பம் மொத்தமும் டைனிங் டேபிள் அருகே வீற்றிருந்தது.

"ரொம்ப நல்ல சம்பந்தம்! நம்மை விடவும் உயர்ந்த இடம். சுகன்யா அவருக்கு ஒரே பொண்ணு! அம்மா இல்லே. நீ என்ன சொல்றே ப்ரேம்?" ரகுராமன் உற்சாகமாய் கேட்டார்.

ப்ரேமுக்கு சற்றே வெட்கமாய் இருந்தது.

"நான் என்ன டாடி சொல்லப் போகிறேன்? உங்களுக்கு பிடிச்சிருந்தா... ஓக்கேதான்!"

"அண்ணா... டபாய்க்கிறீயே.. டாடியே வேணாம்னு சொன்னாலும் நீ விடவாப் போறே? என் வருங்கால அண்ணியோட போட்டோ, பாக்கெட்டை விட்டு இறங்கவே இல்லையே! குளிக்கிற நேரம், சாப்பிட்ற நேரம் போக, பாக்கி நேரமெல்லாம்... அந்த போட்டோவையே பார்த்திட்டிருந்தது எனக்குத் தெரியாதுன்னு நெனச்சியா?" விஜி குறும்பாய் கூறி கண்சிமிட்ட...

"ஏய்.. வாயாடி!" என்றபடி ப்ரேம் அவள் வாயில் வடையை வைத்து அடைத்தான்.

"அப்புறமென்ன....? உன்னோட கதையே கந்தலாய்டுச்சி... அதான் விஜியே போட்டு உடைச்சிட்டாளே... அடுத்த வாரம் நான் நல்லார்க்கு, நான் சம்பத்துக்கு போன் பண்ணி சொல்லிடறேன். எல்லாம் சரியா அமைஞ்சா... அப்படியே நிச்சயமும் முடிச்சிட்டே வந்துடுவோம்...!"

"சரி டாடி...!"

"யப்பா... என்ன அவசர அவசரமா வருது பார் வார்த்தை!"

இந்த முறை விஜியின் காதைப் பிடித்துத் திருகினான் ப்ரேம்.

"ஊட்டிக்கு எஸ்.டி.டி. போடு ப்ரேம் சம்பத்தை லைன்ல பிடி. நாம வரப்போறதை சொல்லிடுவோம். சுகுணா ஊட்டிக்கு போறதுக்கான ஏற்பாடுகளை செஞ்சுடு...!" என்ற கட்டளையிட்டார்.

பரபரப்பான சினிமா மற்றும்
அரசியல் செய்திகளுக்கு...
இன்றைய தமிழகம்.காம்
http://www.indraiyathamizhagam.com/

"சரி... டாடி" என்று தலையாட்டியவன் அந்த நிமிடத்தி லிருந்தே சுகன்யாவை காணும் ஆவலோடு கனவு காணத் தொடங்கி விட்டான்.

போட்டோவிலேயே அசத்தலாக இருந்தாள் சுகன்யா! நல்ல வெளிர் மஞ்சள் நிறம். கூர்மையான சிறிய மூக்கு. சின்ன செப்பு உதடை பெரிதாக்கிக் காட்டும்அடர்நிற லிப்ஸ்டிக். ஆயிரம் வாட் ஒளியோடு கூடிய பார்வை. காதின் தண்டில் வரிசையாய் நாலு கம்மல்கள். ஐந்தரை அடி உயரமாம். அலையலையாய் கூந்தல் தோள் வரை புரள... அலட்சியத்தை தேக்கி வைத்த உதட்டோர சிரிப்பு. மொத்தத்தில் மும்பை மாடல் பெண் போலிருந்தாள். அதற்கேற்றபடி ஒடிசலான தேகமும், கவர்ச்சியான மிடியுமாய் அவன் மனதை கவ்விக் கொண்டாள். ஒரே பெண்! ஊட்டியில் ஏழெட்டு எஸ்டேட்டும், நாலைந்து பங்களாவும், பாங்க் லாக்கர்களில் வழியும் நகைகளும், சேவிங்ஸிஸ் குட்டிப்போட்டுக் கொண்டிருக்கும் கரன்ஸிகளும், விதவிதமான உடைகளுக்கேற்ற கார்களும், அளவுக்கு மீறிய செல்வச் செழிப்பில் வளர்ந்த சம்பத்தின் ஒரே மகள்தான் சுகன்யா.

அவசர அவசரமாய் சாப்பிட்ட ப்ரேம். தொடர்ச்சியாய் வந்த இருமல் சத்தமும், அதைத் தொடர்ந்து வந்த காலடி சத்தமும் கேட்டு பக்கவாட்டில் பார்த்தவன் அருவருப்பாய் முகத்தை கழித்தான்.

அங்கு லட்சுமி புடவைத் தலைப்பை வாயில் வைத்து மூடி இருமிக் கொண்டிருந்தாள். ப்ரேம் சட்டென்று கையை உதறி பாதிச் சாப்பாட்டில் எழுந்து கையை கழுவினான். ரகுராமன் சாப்பிட்டு முடித்திருந்தார். சுகுணாவும் கைகழுவ எழுந்து கொள்ள, விஜி நிதானமாக எந்தவித அசூயையுமின்றி சாப்பிட்டாள்.

"வர... வர.. இந்த வீடு வீடாவே தெரியலே! கார்ப்ரேஷன் ஹாஸ்பிடல் மாதிரியாகிப் போச்சு. மனுஷன் நிம்மதியா சாப்பிட முடியுதா? ச்சே...!" என்றபடி அவளை முறைத்துவிட்டு அகன்ற ப்ரேமை மனசு பதற பார்த்தாள்.

"ஐயோ, சரியாக்கூட சாப்பிடாம போறானே... எல்லாம் என்னால தான்.. இந்த பாழாப் போன இருமல் இப்படி என்

உயிரை வாங்குதே! நானும் பார் சாப்பிட்ற நேரம் பார்த்து வந்துட்டேன்...!" தன்னையே நொந்தபடி திரும்பிப் போக எத்தனித்தவளை சுகுணாவின் குரல் தடுத்தது.

"லட்சுமி... கொஞ்சம் இப்படி வா...!" என்றபடி வாசலுக்கு அழைத்து வந்தாள்.

"உடம்பு சரியில்லே... டி.பி.ன்னு கொஞ்ச நாளைக்கு சமைக் காதேன்னு.. ஒரு வாரமா நானே கஷ்டப்பட்டு சமைக்கிறேன். இதிலேர்ந்தாவது புரிய வேணாமா? பெரிய மனுஷியாச்சேன்னு பரிதாபப்பட்டு விரட்டாம வெச்சிருக்கோமே.. அதுவே பெரிய விஷயம். இதுவே வேற வீடா இருந்தா.. அப்பவே விரட்டியடிச்சு... டெட்டால் போட்டு கழுவியிருப்பாங்க. ஆனா, வயசாக , ஆக உனக்கு புத்திதான் மழுங்கிப்போகுது. எதுக்காக டைனிங் ஹாலுக்கு வந்தே? எல்லோரும் சாப்பிட்டுக்கிட்டிருப்போம்னு தெரியாதா? இப்படி சாப்பிட்ற நேரத்துல லொக்... லொக்னு இருமி... பிள்ளைங்கள சாப்பிட விடாம பண்றியே.. இதுவே நீ பெத்தபிள்ளைங்களா இருந்தா பண்ணுவியா? இது காத்துலேயே பரவிடற நோய். இப்ப சொல்றதுதான். இனி, நீ வீட்டுக்குள்ளே நுழையக்கூடாது. வேற போக்கிடம் உனக்கில்லேங்கிறதுக்கா... தோட்ட வீட்லேயே நீ இருந்துக்கலாம். அத்துமீறி திரும்ப இப்படி நடந்தியானா... நீ வெளியே போய்ட்டே இருக்கலாம்" கடுமையாய் பேசினாள் சுகுணா.

பலமாய் இதயத்தில் விழுந்தது அடி!

"மன்னிச்சிடுங்கம்மா... இனிமே உள்ளே வரமாட்டேன்...!" கரகரவென வழிந்து கண்ணீர்.

"சரி.. இப்ப எதுக்காக இங்கே வந்தே? அதான் சாப்பாடெல்லாம் கொடுத்தனுப்பிடறேனே...?!"

"ம்.. ஏன் வந்தே?"

"விஜி... விஜியைப் பார்க்க...!"

"விஜியா? இதோப்பார் லட்சுமி! அவ சின்னப் பொண்ணு அவளுக்கொன்னும் தெரியாது. ஏதோ பாசத்துல உன்கிட்டே வந்து பேசினாலும்... நீயும்அவளை தொட்டுகிட்ட பேசற

வேலைய வச்சுக்காதே! அகல் விளக்கு வெளிச்சம் தருதேங்கறதுக்காக... தலையிலா தூக்கி வச்சுக்க முடியும்? கொஞ்சம் புரிஞ்சு நடந்துக்க லட்சுமி!"

"ம்....!" தலையாட்டிய லட்சுமிக்கு குரல் அடைத்தது. மெல்ல திரும்பி நடந்து சென்றவளை பால்கனியிலிருந்து மனம் கனக்க, கண்ணீர் மறைக்க பார்த்தார் ரகுராமன்.

மாடி ஜன்னலிலிருந்து ஒருவித குரூரப் புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தான் ப்ரேம்!

13

புகைந்து கொண்டிருந்த சிகரெட் முழுதுமாய் எரிந்து விரலை தொட.. சட்டென்று கீழே போட்டு கையை உதறிக் கொண்டான் ரகுராமன்.

அப்போதுதான் அறைக்குள் நுழைந்த சுகுணா பதறிப் போய் அவரருகில் ஓடி வந்தாள்.

"என்ன டார்லிங்.. சுட்டுடிச்சா? சிகரெட்ட சுடற அளவுக்கு கவனமில்லாம அப்படியென்ன யோசனை? பாருங்க.. லேசா கொப்புளிச்சுப் போயிடுச்சு!" பதறியவள் கப்போர்டைத் திறந்து ஏதோ ஒரு மருந்தை எடுத்து விரலில் தடவினாள்.

"பச்.. என்ன இது... லேசா சுட்டுட்டதுக்கே இப்படி ஆர்ப்பாட்டம் பண்றே?" லேசான சலிப்புடன் துணியில் விரலில் பூசியிருந்த மருத்தை துடைத்துக் கொண்டார்.

"உங்களுக்கு வலிக்குதோ, இல்லையோ எனக்கு வலிக்குது. ப்ளீஸ் மருந்துபோட்டுக்குங்க..." கெஞ்சலாய் கேட்டாள்.

"இல்லம்மா.. எனக்கு வலிக்கலே... விட்ரு.."

"ம்.. வர வர நீங்களும் சின்னக் குழந்தை மாதிரிய பிடிவாதம் பிடிக்கிறீங்க! சரி சம்பத்திக்டே பேசினீங்களா? ரெண்டு முறை ட்ரை பண்ணியும் லைன் கிடைக்கலேன்னு சொன்னீங்களே..." அவர் மார்பு முடியை விரல்களால் அலைந்தவாறு கேட்டாள்.

"ம்... பேசியாச்சு! எனக்கு ரொம்ப திருப்தி சுகுணா! சிலபேரை பார்த்த முதல் பார்வையிலேயே பிடிச்சிடும். இவரையும் எனக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு, பேச்சிலேயே...

அவர் ஒரு ஜென்டில்மேன்னு மனசுல பட்டுது. என்னோட கணிப்பு என்னைக்குமே தப்பானதே இல்லே சுகுணா!"

"கேக்கவே சந்தோஷமா இருக்குங்க! நம்ம கவுரவம், அந்தஸ்துக்கு ஏத்த மாதிரி மைத்ரேயிக்கு நல்ல இடம் அமைஞ் சது ப்ரேமுக்கு அதே போல எதிலும் குறையில்லாத ஒரு இடம் அமையறது... நிஜமாகவே அது நீங்க செஞ்ச புண்ணியம்தான். ஆனா..."

"என்ன ஆனா?"

"இதையெல்லாம் பார்த்து பூரிக்க அக்கா இல்லையேன்னு நினைக்கறப்பா மனசுக்கு வேதனையா இருக்குங்க."

"அக்காவா? நீ யாரைச் சொல்றே?"

"ம்க்கும்! என்கூட யாரும் பிறந்தாங்களா என்ன? அக்கான்னா வேற யாரைச் சொல்வேன்? பிரேமை சுமந்து பெத்தவங்களைத்தான்..."

சற்று நேரம் அமைதியாகிப் போனார்.

சுகுணாவிற்கு சங்கடமாகி விட்டது. ஏன்தான் நினைவு படுத்தினோமோ என்று! எப்போதுமே அவர் முதல் மனைவிப் பற்றி பேசும் போதெல்லாம் இப்படித்தான் இறுகிப் போய் மௌனமாகி விடுவார். அவளின் பிரிவு அவரை இன்னமும் இந்தளவு வேதனைப்படுத்துகிறதென்றால்... இவர் எந்தளவு அவளை நேசித்திருக்க வேண்டும்? பாவம்... இப்படி அல்பாயுசுல போய் சேர்ந்துட்டாங்களே... சுகுணா பரிதாப் பட்டாள்.

தன் கணவரின் கையை மெல்லப் பற்றினாள்.

"ஸாரி... ஞாபகப்படுத்திட்டேனா?"

"இட்ஸ் ஓக்கே...!" என்றாலும் அவர் முகம் இன்னும் இயல்புக்கு வரவில்லை.

சுகுணா எழுந்தாள். 'ஒன் மினிட்' என்று கூறிவிட்டு அறை மூலையில் இருந்த டிரெஸ்ஸிங் டேபிள் அருகே போனாள்.

உடுத்தியிருந்த புடவையை உருவி எறிந்துவிட்டு ரோல் நிற நைட்டியை தலை வழியே மாட்டிக் கொண்டாள்.

இந்த வயதிலும் கடைந்தெடுத்த தங்கச் சிலை போல் மின்னினாள் சுகுணா!

எப்போதும் அவளைப் பார்த்த மாத்திரத்தில் ஆவலாய் இழுத்து தன் மார்பு மீது போட்டுக் கொள்பவர் பார்த்ததும் பார்க்காததுப் போல் சிந்தனைவயப்பட்டிருந்தார்.

அதைக் கண்டதும் என்னவோப் போலாகி விட்டது சுகுணாவுக்கு.

"என்ன... ரொம்ப சிந்திக்கிறீங்க போலிருக்கு... கதை கிதை எழுதப் போறீங்களா?" கொஞ்சலாய் அவர் மார்பில் சாய்ந்துக் கொண்டு அவர் தலைமுடியை கோதி விட்டாள்.

"எல்லாம் பிஸினஸ் பத்திதான்!" அப்பட்டமாய் புளுகியபடி அவள் உதடை நிமிண்டினார்.

"திஸ்..இஸ்..பேட்!நான்தான்சொல்லியிருக்கேனே...பெட்ரூம் வரைக்கும் பிஸினஸ் வரக்கூடாதுன்னு. இங்கே... என்னைத் தவிர வேற எந்த நினைவும் வரவே கூடாது!" என்றவள் அவர் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு போனாள். ரகுராமனின் கைகள் அவளின் இடுப்பை வளைத்து பிடித்தன.

நேரம் நழுவிக் கொண்டிருக்க...

எங்கிருந்தோ அந்த சப்தம்.... தேய்ந்து தேய்ந்து அந்த அறையின் ஜன்னல் வழியே வந்து இவர் காதில் ஒலிக்க...

தடக்கென நிமிர்ந்தார்.

லொக்... லொக்.. என்று தொடர்ச்சியாய் வந்தது இருமல் சப்தம்.

ரகுராமன் தன்னிச்சையாய் சுகுணாவிடமிருந்து விலகி... ஜன்னலை வெறித்துப் பார்த்தார்.

'ல...ட்...சு...மி...' உதடுகள் மெல்ல அப்பெயரை முணு முணுத்தன ஒலியின்றி.

கண்வனின் பிடிக்குள் கொஞ்சம் கொஞ்மாய் தன்னை மறந்துக் கொண்டிருந்த சுகுணா ஏமாற்றமாய் உணர்ந்தாள்.

ரகுராமனுக்கு அதற்கு மேல் சுகுணாவுடன் சந்தோஷமாயிருக்க முடியவில்லை. ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தவர், "ஸாரி... சுகி.. தலை வலிக்குது" என்றார்.

"இட்ஸ் ஒக்கே டார்லிங்" என்று படுத்து கொண்டு போர்வை எடுத்து போர்த்திக் கொண்டாள்.

அவள் கோபமெல்லாம் லட்சுமியின் மீது பாய்ந்தது.

'எல்லாவிதத்திலும் முட்டுக்கட்டையாய் இடையில் நுழையும் அவளை முதலில் ஒழித்துக் கட்டினால்தான் நிம்மதி!' கறுவிக் கொண்டாள்.

எல்லோர் முகத்திலும் சந்தோஷம் தாண்டவமாடியது.

'வெட்கமென்றால்.. யார் அது?' என்று எதிர் கேள்வி கேட்கும் மைத்ரேயி முகம் முழுக்க நாணத்தால் சிவந்திருந்தது. உடம்பில் சதை கூடி பளபளவென்று மின்னினாள்.

ஆளாளுக்கு அவளை கிண்டல் செய்து கொண்டிருந்தனர்.

"அக்கா... எனக்க ஒரே ஒரு ஆசை!" விஜி பவ்யமாய் சொன்னாள்.

"என்ன ஆசை?"

பத்தாவது மாசம் நீ ஜீன்ஸ் போட்டுக்கிட்டு ரோட்ல நடந்துப் போகணும்!"

அவ்வளவுதான்.. அத்தனை பேரும் விழுந்து விழுந்து சிரித்தனர்.

வேறொன்றுமில்லை. மைத்ரேயி உண்டாகியிருந்தாள். மதன், இங்கே அவளை கையோடு அழைத்து வந்து குட்டை உடைத்துவிட்டான். அனைவரும் ஏகப்பட்ட சந்தோஷம்.

ரகுராமன் மகளை அணைத்து உச்சியில் முத்தமிட்டார். சுகுணா அவளைப் பற்றியக் கரத்தை விடவில்லை. மென்மையாய் பாசமுடன் தடவிக் கொடுத்தாள்.

"ஆனா, அங்கிள், எங்கப்பாவுக்குத்தான் இதிலே கொஞ்சம் வருத்தம்!" மதன் பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு சொல்லவும்...

பதறிவிட்டார் ரகுராமன்.

"என்னப்பா.. ஏன்?"

"இன்னும் ஒரு முடிக்கூட நரைக்கலியே.... அதுக்குள்ளே என்னை தாத்தாவாக்கப் பாக்கறியேன்னு..."

மறுபடி அங்கு ஆரவாரமாய் சிரிப்பு சத்தம் எழுந்தது.

"நான்கூட எவ்ளவோ சொன்னேன் இந்த மைத்துகிட்டே கேக்வே மாட்டேனுட்டா..."

"என்ன சொன்னீங்க?" சுகுணா ஆர்வமாய் கேட்க...

"உங்க மம்மிக்கூட பார்க்க உனக்கு அக்கா மாதிரி உனக்கு இன்னொரு தங்கையோ, தம்பியே பெத்துத் தற அளவுக்கு யங்கா இருக்கும் போது... பாட்டியாக்காதே.. என்பக்கத்துலே வராதேன்னேன்... சொன்னாக் கேட்டாத்தானே?"

"கடவுளே...!" சுகுணா வெட்கத்தில் முகம் சிவந்து அங்கிருந்து ஓடிப் போனாள்.

ரகுராமன் கூட அவனின் அந்தரங்க ஜோக்கிற்கு வெட்கப் பட்டு முகம் திருப்பி சிரிக்க.

மைத்ரேயி மதனின் தொடையை நறுக்கென்று கிள்ளினான்.

"சே... எவ்வளவு மோசமா பேசறே நீ!" மெல்ல கிசுகிசுத்தாள்.

"எல்லாம் அப்பா ஆகப்போற சந்தோஷம்தான்..."

"அதுக்காக இப்படியா?"

"வேற எப்படியாம்?" அவள் இடுப்பில் கையை போட்டான்.

"ம்." அவள் முறைக்க... மதன் சிரித்தபடி நகர்ந்து கொண்டான்.

அப்போதுதான்... ரகுராமன் பார்த்தார்.

போர்டிகோ அருகில் ஒரு காரின் பின்னாடி மறைந்து மெல்ல எட்டி எட்டி... இவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி.

அவருக்குப் புரிந்தது.

டிரைவர் புண்ணியக்கோடி பேச்சுவாக்கில் அவளிடம் மைத்ரேயி உண்டாகியிருப்பதை கூறியிருப்பான்... அதனால் மகளைக்கான சுகுணா கிழித்த கோட்டை தாண்டி திருட்டுத் தனமாய் வந்து பார்க்கிறான்.

ரகுராமன் சிறிது நேரம் கண்களை மூடி யோசித்து பெருமூச்சு விட்டார்.

'இதோ மைத்ரேயி தாயாகப் பேசுகிறாள் என்றதும் என் மனம் எப்படி துள்ளியது? பெருமையில் என் உடம்பு எப்படி சிலிர்த்தது? சுகுணா எத்தனை சந்தோஷப்பட்டாள்? விஜி எப்படி துள்ளி குதித்தாள்? இவர்கள் அத்தனை பேருக்குமம் மைத்ரேயி நெருக்கமானவள்... அதனால்தான் இத்தனை ஆரவாரமும், ஆர்ப்பரிப்பும் அதே அளவு ஏன் அதைவிட சந்தோஷப்படக்கூடிய ஆத்மா தாய்தான்! எல்லோரையும் விட நெருக்கமானவள் சுமந்து பெத்தவள்தானே?'

தான் தாயாவதே வானத்தை தொட்ட சந்தோஷத்தை தரும் பெண்களுக்கு. அந்த தாயின் வயிற்றில் பிறந்து பெண்ணுக்கு ஒரு சிசு உருவாகிறதென்றால்... அந்த தாயின் சந்தோஷத்திற்கு ஈடு இணை ஏது?

தன் மகளை கர்வத்துடன் அணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிவாள் அல்லவா அன்னை!

அதே உணர்வுதானே லட்சுமிக்கும் இருக்கும்? தொட முடியாத தூரத்தில், தொட்டு ரசிக்கக்கூடாத இயலாமையில், மறைந்து மறைந்து பெற்ற மகளைப் பார்த்து தனிமையில் ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் மகா துர்பாக்கியவதியான லட்சுமியின் நிலை, ரகுராமனின் கல் மனதையும் கொஞ்சம் கரைய வைத்தது.

என்ன நினைத்தாரோ... ஏது நினைத்தாரோ, தொட்டுத்தான் பார்க்க முடியாது. கிட்டே இருந்தாவது பார்க்கட்டும்என்று மகளருகே வந்தார்.

"மைத்ரேயி"

"என்ன டாடி?"

"இதுவரைக்கும்நீஎக்ஸர்சைஸ்பண்ணினதேயில்லேதானே?"

"தூங்கறதுக்கே அவளுக்கு பொழுது போதலியே அங்கிள்!"

"அப்ப... மாப்பிள்ளை.. இனி உங்கப் பொறுப்பு! இப்படிப் பட்ட நேரத்துல லேசா எக்ஸர்சைஸ் பண்றது நல்லதுன்னு சொல்வாங்க! நம்ம மைத்ரேயிக்கிட்டே தலைகீழா நின்னாலும்

அதெல்லாம் செய்ய வைக்க முடியாது! இருந்தாலும் அட்லீஸ்ட் கார்டன்யலாவது வாக் பண்ணலாமே! எங்கே, இப்பார்ந்தே ஆரம்பியுங்க, பார்க்கலாம். நம்ம தோட்டத்தை ஒரு ரவுண்ட் கூட்டிட்டு போய் வாங்க...!"

"டாடி... நாளைலேர்ந்து... " மைத்ரேயி இழுக்க...

"நோ.. நோ.. இப்பவே இந்த நிமிஷமிருந்தே..."

"கிளம்பு..." மதன் அவள் கையைப் பற்றி அழைத்துச் சென்றான்.

மகளை அவளுக்கேத் தெரியாமல் வெகு அருகில் பார்த்து விட்ட சந்தோஷத்தில் விம்மில் வெடிக்க, அதை அடக்க முயற்சித்து வாயில் முந்தானையை வைத்து அழுத்தியும் விம்மலோடு, இருமலும் வர,

அந்த சத்தம் கேட்டு திரும்பிய மைத்ரேயி முகம் சுளித்தாள்.

ஏற்கனவே தலை சுற்றலும், வாந்தியும் ஆரம்பித்திருந்தது. இப்போது இவள் இருமலில், அருவருப்பு ஏற்பட்ட அடி வயிற்றிலிருந்து பிறீட்டு வந்த வாந்தியை... ஓடிவந்து இரு கைகளில் ஏந்திக் கொண்டாள் லட்சுமி.. தன்னை மறந்து.

இந்த நிகழ்ச்சியில் மைத்ரேயி மட்டுமல்ல... மதனும் கூட ஒரு கணம் திகைத்துப் போயினர்.

14

பங்களாவில் சுபகார்யங்கள் தாம் தூமென்று நடந்தன. சாப்பாட்டிலிருந்து தூக்கியெறியப்பட்ட கறிவேப்பிலையாய் லட்சுமி தோட்ட வீட்டிலேயே முடக்கப்பட்டாள்.

புதிதாய் ஒரு சமையற்காரனை சேர்த்து விட்டிருந்தார்கள். அதனால் அந்த மாளிகையின் நிழலில் கூட நிற்க முடியாத தூரத்திற்குத் தள்ளப்பட்டாள்.

ப்ரேமுக்கு, ஊட்டியின் பெரிய பிஸினஸ் மேக்னட் சம்பத் குமாரின் மகள் சுகன்யாவுக்கும் ஊட்டியிலே நிச்சயதார்த்தம் ஆனது. இன்னும் ஓரிரு மாதங்களில் திருமணம். லட்சுமிக்கு நிலைக் கொள்ளவில்லை. என் மருமகள் எப்படியிருப்பா?

பெரிய பணக்கார வீட்டுப் பெண்ணாமே! திருமணத்திற்கு என்னை அழைத்துச் செல்வார்களா? மைத்ரேயி கல்யாணத்தைப் பார்த்ததுப் போலாவது ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று என் செல்லப் புத்திரனின் திருமணத்தைப் பார்ப்பேனா? அது வரைக்கும் உயிருடனாவது இருப்பேனா?

உண்மைதான்! லட்சுமியின் நோய் மிகவும் முற்றிவிட்டிருந்தது. ரத்தம், ரத்தமாய் வாந்தி எடுக்கிறாள். கவலைகளை விடவும் நோய் முந்திக் கொண்டு, அவளை சல்லடையாக்கிக் கொண்டிருந்தது.

கிட்டே இருந்து சமைத்து, அவர்கள் சாப்பிடும் அழகைப் பார்த்தே... திருப்திப்பட்டுக் கொண்டிருந்தவளை இந்த நோய் ஒரேயடியாய் அவளை எட்ட நிற்க வைத்துவிட்டது. போகவரும் பாதையும், போர்டிகோவும் தோட்ட வீட்டின் மறுபுறம் இருந்ததால், பார்வை மங்கி விட்டதாலும், லட்சுமியால் யாரையும் பார்த்து ஆறுதல் அடையக்கூட முடியவில்லை. நொந்து நொந்து கண்ணீர் விட்டபடியே இருந்தவள் கண்கள் சட்டென பிரகாசித்தன.

பொழுது போகாமல் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க வந்த ரகுராமனைப் பார்த்துவிட்டாள் லட்சுமி. இப்போதுதான் புதிதாய் அவரைப் பார்ப்பது போன்ற உணர்வில் உடல் சிலிர்த்து அவரருகே ஓடினாள்.

ஆனால், நிஜமாகவே அவரும் லட்சுமியை காணவே, தோட்டப் பக்கம் வந்தார். ஏனோ, முன்னைப போல் அவள் மீது எந்தவித வெறுப்பும் இப்போது எழுவதில்லை. அவளைக் காணும்போதெல்லாம்.. மனம் கனத்துப் போகிறது. பார்த்து பல நாட்களாகி விட்டதாலும், நோயால் அவதிப்படுகிறாளே என்றும் பழைய கசப்புகளை மிஞ்சி, அந்தக் கால தாம்பத்ய நாட்கள் நினைவில் எட்டிப் பார்த்து சூடிழுத்ததாலும், வந்திருந்தார். என்னதான் இருந்தாலும் மனைவியல்லவா?

இன்னும் மெலிந்து, கறுத்து, நரைத்து, மூச்சிரைக்க சற்றே கூன் வளைந்து வாயில் முந்தானை காற்றை வெளிவிடாமல் இருக்க அழுத்தி... அவரையேப் பார்த்த கண்களிலிருந்து வெளிப்பட்ட

நீர் முத்துக்களை பார்க்க பார்க்க வேதனை வெடித்தது. அதைத் தாங்க முடியாத ஆதங்கத்தில் திரும்பி நடக்க...

"என்னங்க..." என்றது லட்சுமியின் பலவீனமான குரல்.

நின்றார்.

"நா.. நான் இதுவரைக்கும் உங்ககிட்டே எனக்குன்னு எதையும் கேட்டதில்லே... இப்ப கேக்கிறேன்.. தருவீங்களா?"

"....."

"நடந்தது அத்தனையும் நான் போன பிறவியில செஞ்ச பாவத்தால ஏற்பட்ட கர்ம வினையாவே நான் நான் நினைச்சுக்கறேன். இன்னும் ரொம்ப நாளைக்கு நான் இருக்க மாட்டேன்..."

"....."

"ஆயிரம்தான் நீங்க என்னை வெறுத்தாலும், ஒதுக்கினாலும் அக்னி சாட்சியா என்னை மனைவியா ஏத்துகிட்டது இல்லன்னு ஆய்டாது. என் ரெண்டு குழந்தைகளையும் இந்த வயிறு சுமந்தது இல்லன்னு ஆய்டாது. ஆனா... ஆனா, புருஷன் இருக்க... பிள்ளைங்க இருக்க... நான் நாதியத்த பொணமா போகக் கூடாதுங்க. ஒரு மனைவிக்குரிய மரியாதையோட புருஷனா நின்னு சடங்குகளை நடத்தி என்னை காட்டுக்கு அனுப்புவீங்களா?"

"....."

"இந்த ஒரு உரிமைய மட்டும் எனக்கு தயவு பண்ணிக் கொடுங்க...." ஈனஸ்வரக் குரலில் அழுதவளை தேற்ற கை துடித்தாலும், மனம் கட்டுப் படுத்தியது.

"நீ தப்பு செஞ்சவதான்... நான் அதையெல்லாம் மறந்து மன்னிச்சிடறேன். வேற எதையாவது கேள். தரேன். இதை மட்டும் என்னால செய்ய முடியாது. என் குழந்தைகளுக்கு கடைசி வரைக்கும் நீதான் தாய்னு தெரியக்கூடாது."

"எனக்கு இந்த சாகற காலத்துல வேற என்னங்க வேணும்? இதை மட்டும்...!"

"இங்கே நின்னு என்ன பண்ணிட்டிருக்கீங்க? சம்பந்தி லைன்ல இருக்கார். வந்து பேசுங்க...! என்றபடி அவர்களை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தாள் சுகுணா!

ரகுராமன் அங்கிருந்து நகர்ந்தார்.

ஏமாற்றமும், விரக்தியுமாய் போகிறவர்களையேப் பார்த்துக் கொண்டிருந்தாள் லட்சுமி!

"வி..ஜி! நீயாம்மா...? நீயா என்னைத்தேடி வந்தே?" ஆச்சர்யம் தாளாமல் தோட்டி வீட்டில் நின்ற விஜியை அன்பு சுரக்கப் பார்த்தாள் லட்சுமி!

"எப்படியம்மா இருக்கே?"

"நீ எப்படியிருக்கே லட்சுமிம்மா? ஏன் இப்படியாய்ட்டே?"

ஒரு மௌனச் சிரிப்பை வெளியிட்டாள்.

"நீ ஏம்மா இங்கே வந்தே? யாராச்சும் பார்த்துடப் போறாங்க.. போய்டு விஜிம்மா!'

"இல்லே லட்சுமிம்மா! அங்கே யாருமில்லே. எல்லோரும் வெளியே போயிருக்காங்க! அதான் உன்னைப் பார்க்க ஓடிவ வந்தேன். அடுத்த மாசம் அண்ணனுக்கு கல்யாணமில்லையா? பொண்ணு வீட்டுக்காரங்க மெட்ராஸ் வந்துட்டாங்க. அவங்களை பார்க்கறதுக்காக எல்லாரும் போயிருக்காங்க...!"

"இங்க பார்த்தியா... உனக்காக நான் எடுத்திட்டு வந்திருக்கேன்னு?"

"என்ன கண்ணு?"

"அதை அப்புறம் சொல்றேன். நீ சாப்பட்டியா லட்சுமிம்மா?"

"சாப்பிட்டேன்ம்மா?"

"ரசம் சாதம்.. அப்பளம்!"

"அவ்வளவுதானா?"

ஒரு பிச்சைகாரி நிலையில் உள்ள எனக்கு இதையாவது தருகிறார்களே... அதுவே எதேஷ்ட்டம்! நினைத்துக் கொண்டவள் சொல்லவில்லை. சிரித்தாள்.

"அது போதுமே கண்ணு!"

"இதோ பார்... உனக்காக நான் விருந்து சாப்பாடே கொண்டு வந்திருக்கேன்." மறைத்து வைத்திருந்த டிபன் காரியரை எடுத்து அவள் முன்வைத்தாள்.

"எதுக்கும்மா இதெல்லாம் ?"

"எல்லாம் உனக்கும் எனக்கும்! இன்னிக்கு ஏதோ சடங்காம் விதவிதமா சமைச்சாங்க! அதையெல்லாம் தனியே சாப்பிட பிடிக்கலே..."

"....."

"உன்கூட சேர்ந்து சாப்பிடணும்னு ஆசை! அன்னைக்கு ஒருநாள் தலைவலின்னு சாதம் பிசைஞ்சி ஊட்டி விட்டியே... அதுப்போல சாப்பிடனும்னு ஆரச!"

பதறிவிட்டாள் லட்சுமி.

"ஐயோ நானா? உனக்கு ஊட்டி விடுவதா? வேணாம் விஜி! இங்கே நீ வந்ததே தப்பு! இங்கே வந்து சாப்பிட நினைச்சது அதைவிட தப்பு!" என் கையால சாப்பிட நினைச்சே பார்! அது மாபெரும் தப்பு!"

"ஒரு தப்புமில்லே! உன் உடம்புக்கென்ன லட்சுமிம்மா!"

"ஓ... ஒண்ணுமில்லே... விஜி!"

'தெரிந்தால் குழந்தை பயந்து விடுவாள். எனக்கு மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதை அறிந்தால்... அலறி விடுவாள்.. தெரியக்கூடாது.'

"ஒண்ணுமில்லேதானே? அதுக்கேன் இப்படி உன்னை ஒதுக்கி வச்சிட்டாங்க! எங்க மம்மில்லாம் ரொம்ப மோசம். இதெல்லாம் எனக்குப் பிடிக்கலத் தெரியுமா?"

"வி...ஜி..." நெகிழ்ந்து போனாள் லட்சுமி.

"சரி... இன்னைக்கு நானே உனக்கு பரிமாறப் போறேன்" என்றபடி காரியரை பிரித்து, இலையில் தனக்கும், அவளுக்குமாய் பரிமாறினாள்.

நாலைந்து வகை பொரியல், கூட்டு, இரண்டு வகை இனிப்பு அது இததென்னு இலை முழுக்க பதார்த்தங்கள். இவற்றில் ஒன்றைக்கூட கண்ணில் காட்டாமல் வெறும் சோறும் ரசமும் கொடுத்து மூலையில் உட்கார்த்தி வைக்கப்பட்ட தன் நிலையை நினைத்து வேதனையாய் சிரித்துக் கொண்டாள்.

'என் வீடு. என் கணவன், என் குழந்தைகள், என் சாப்பாடு... ஆனால் எதுவுமே இப்போது என்னுடையதில்லை.'

"என்ன லட்சுமிம்மா... அப்படியே திகைச்சுப் போய் உட்கார்ந்துட்டே? கொஞ்சமிரு..." என்றவள் லட்சுமியின்

இலையின் இருந்த சாதத்தை பிசைஞ்சு அவள் கையில் கொடுத்தாள்.

அந்த அன்பு திக்குமுக்காட வைக்க சாப்பாட்டை விழுங்க முடியாமல் தொண்டையை அடைத்தது.

விஜி சாப்பிடாமல் அமர்ந்திருந்தாள்.

"நீ சாப்பிடலியாம்மா?"

"போ. நீ ரொம்ப மோசம் லட்சுமிம்மா! நான் பிசைஞ்சு கொடுத்தேனே... அதுபோல நீ எனக்கு பிசைஞ்சு தரமாட்டியா? விஜி, விழிகள் மின்ன, கேட்டாள்.

"நா... நானா?"

"ஏன்... ஏன் இழுக்கறீங்க?"

"வே... வேணாம் விஜி!"

"வேணும் லட்சுமிம்மா!" அவளைப் போலவே ராகமாய் இழுத்து சொல்லிவிட்டு கையை அவள் முன் நீட்டினாள்.

செய்வதறியாது திகைத்துப் போனாள் லட்சுமி.

"சொல்றதை கேளு...."

"ம்ஹூம்... சீக்கிரம் தா! பசிக்குது..."

அவளின் வீம்பின் முன் லட்சுமி தோற்க வேண்டியிருந்தது.

கை நடுங்க பிசைந்து அவள் கையில் வைக்க அதை ஆவலாய் சாப்பிட்டாள் விஜி.

அவள் சாப்பிட்டு முடிந்ததும், லட்சுமிக்கும் இவள் பிசைந்து தர.. இவளும் சாப்பிட்டு முடித்தாள் மன நிறைவோடு.

அதன் பிறகு மெல்ல கேட்டாள்.

"விஜிம்மா... உனக்கு வரப்போற அண்ணி ரொம்ப நல்லாருப்பாளா?"

"சூப்பரா இருக்காங்க..."

"போட்டோ இருக்கா? பார்க்க ஆசையா இருக்கு!"

"போட்டோ எதுக்கு? நிச்சயதார்த்த வீடியோ கேசட் இருக்கு. போட்டுக் காட்டறேன்... வா!"

"எங்கே?" பயமாய் கேட்டாள்.

"பங்களாவுக்கு!"

"ஐயோ... வேணாம்மா...! யாராச்சும் பார்த்துட்டா...?" உள்ளூர ஆசை இருந்தது.

"யாரும் பார்க்க மாட்டாங்க! வர லேட்டாகும். நீ...வா!" என்று லட்சுமியின் கையைப் பற்றி பங்களாவிற்கு அழைத்து வந்தாள்.

வீடியோவில் தெரிந்த சுகன்யாவின் அழகு பெரும் திருப்தியைத் தந்தது. ப்ரேம் நொடிக்கொருதரம் அவளை கண்களால் விழுங்கிக் கொண்டிருந்தான். 'என் மகனுக்குத் தான் அவள் மேல் எவ்வளவு ஆசை?' பெருமிதமாய் இருந்தது. அடிக்கடி பொங்கிய கண்ணீரை துடைத்தபடி இருந்தாள் லட்சுமி. அவள் பக்கத்தில் அமர்ந்திருந்த விஜி அதில் காட்டிய பெண் வீட்டு உறவினர்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"அதோ... சபாரி சூட்ல உயரமா டாடி பக்கத்துல நிக்கறாரே. அவர் தான் அண்ணியோட அப்பா..!" என்று ஒரு நபரை சுட்டிக்காட்டி அதிர்ச்சியின் விளிம்பில் சென்று விட்டாள் லட்சுமி...!

'இவனா? இவன்தானே? இவனேதான்!' உள்ளம் கொதித்தது. அப்போது!

"வி...ஜீ... என்று கர்ண கடூரமான குரல் ஒன்று செவிப்பறையில் மோதியது.

15

கண்களில் தெரிந்த வெப்பமே ஆளைச் சுட்டுப் பொசுக்க... ப்ரேம் கோபமாய் நின்றிருந்தான். அவன் பின்னாடி சுகுணா! அவள் முகத்திலும் அனல்.

லட்சுமியை நோக்கிப் போன ப்ரேமை தடுத்த சுகுணா முன்னே வந்தாள்.

"எப்படி உள்ளே வந்தே?"

"...."

"யாரைக் கேட்டு உள்ளே வந்தே?"

"மம்மி... நான்தான் லட்சுமிம்மாவை..."

"விஜி... ஷட்அப்! நான் உன்னைக் கேக்கல... நீ உன் ரூமுக்குப் போ!"

"இல்ல.. மம்மி... நான்...!"

"ஷட்அப்!" அடிக்குரலில் அதட்டினாள் சுகுணா.

லட்சுமிக்கு தலை சுற்றியது. உடம்பெல்லாம் நடுங்கியது. மூச்சு முட்டுவது போலிருக்க... சீறிக் கொண்டு வந்தது இருமல். விடாமல் இருமியதில் வாயோரம் ரத்தம் வழிந்தது. அதைக் கண்ட சுகுணாவும், ப்ரேமும் பின்னே நகர, விஜி ஓடோடி வந்துத் தாங்கிக் கொண்டாள்.

"ஐயோ... லட்சுமிம்மா... உனக்கென்ன ஆச்சு? ரத்தமெல்லாம் வருதே? அண்ணா... டாக்டருக்கு போன் பண்ணுண்ணா.... ப்ளீஸ்...!" எந்தவித அசூயையுமின்றி லட்சுமியைத் தாங்கிக் கொண்டு பதறினாள்.

சுகுணாவுக்கு அதைப் பார்த்ததும் எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ? பாய்ந்து சென்று விஜியை இழுத்து கன்னத்தில் பளாரென்று அறைந்தாள்.

இதுவரை அடியே வாங்கியிராத அந்த மலர்க் கன்னம் கன்றி சிவந்து போனது. சுருண்டுப் போனாள் விஜி.

"போ... உன்னறைக்கு! ரத்தம் கக்கிக்கிட்டிருக்கிறவளப் போய் கட்டியணைச்சுக்கிறியே... நாளைக்கு நீயும் ரத்தம் கக்கி சாகறதுக்கா? இந்த பெரிய மனுஷிக்குத்தான் அறிவில்லே... மனசில ஈரமும் இல்லே! இருந்திருந்தா இப்படிப்பட்ட நோயோட வீட்டுக்குள்ள காலடி எடுத்து வைப்பாளா? என்ன... இன்னும் பார்த்துட்டிருக்கே... போ... வெளியே!" லட்சுமியை விரட்டினாள்.

"வாயால சொல்லாதீங்க.. கழுத்தைப் பிடிச்சி வெளியேத் தள்ளுங்க முதல்ல...!"

துடித்து போய் கண்ணீருடன் ப்ரேமைப் பார்த்து கையெடுத்து கும்பிட்ட லட்சுமி மூச்சிரைக்க பேசினாள்.

"வேணாம் ராசா! உன் வாயால என்னை அப்படிச் சொல்லாதே! நான்.. நானே போய்டறேன்" லட்சுமி தளர்வாய் நடந்து வெளியேறினாள்.

ரகுராமன் உள்ளுக்குள் பொங்கிய உணர்வலைகளைக் கட்டுப்படுத்தியபடி சுகுணாவும், ப்ரேமும் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இனியும் பொறுத்துக் கொள்ள முடியாதுங்க. விஜி சின்னப் பொண்ணு! அவளுக்கென்னத் தெரியும்? இந்த பெரிய மனுஷிக்கு அறிவு வேணாம்? இவளால என் குழந்தையை முதமுதலா கைநீட்டி அடிச்சிட்டேன். பெத்து வளர்த்திருந்தா... அந்த அருமை பெருமைத் தெரியும்.. மலட்டுக் கழுதைக்குத் தெரியுமா பந்த பாசமெல்லாம்? நெத்தி நிறைய பொட்டும், கழுத்துல மஞ்சக்கயிறும் இருக்கு. என்ன செஞ்சாளோ? ஏது செஞ்சாளோ? அதுக்கு சொந்தக்காரன் அருகில் இல்லை. நாம பாவப்பட்டு இங்கே சேர்த்தது தப்பா போச்சுங்க!"

"ஆமா டாடி! வீட்டுக்குள்ளேயே தைரியமா வர்றா? விஜியோட நெருங்கிப் பழகறா! விஜிக்கு ஏதாவதொன்னு ஆச்சின்னா... முதல்ல அவளை டாக்டர்கிட்டே அழைச்சிட்டுப் போகணும்."

"அதுமட்டுமில்லீங்க... நாளைக்கு இந்த வீட்டுக்கு மருமக வரப் போறா... அப்பவும் இப்படிலொக்... லொக்னு இருமிட்டு இருப்பா! பாவம், பரிதாபம் பார்த்தா... நாமதான் சாகணும். இனி அவ இந்த வீட்லேக்கூட... ஜமீன் தோட்ட வீட்லேக்கூட இருக்கக்கூடாது...!"

திடுக்கிடலாய் நிமிர்ந்தார் ரகுராமன்.

பதில் எதுவும் சொல்லாமல் அமர்ந்திருக்கும் கணவனின் தோளைத் தொட்டவள், "ஏங்க அதையாயிருக்கீங்க?"

"இல்லே... பாவம்... வயசான காலத்துல...!"

"புரியாம பேசாதீங்க. அவ இருக்கிற இருப்புல... ஒரு வாரம் கூட தாங்க மாட்டப் போலிருக்கும். நம்ம வீட்ல கல்யாணம் நடக்கப் போகுது. இந்த நேரத்துல அவ மண்டையப் போட்டுட்டாள்னா? அதுவும், சொந்தமா? பந்தமா?

வேலைக்காரி. அனாதை.. அவளால நம்ம வீட்ல தீட்டுப் படணுமா?"

"....."

"வேணும்னா... இப்படிப் பண்ணலாம்! தாம்பரத்துல ஒரு முதியோர் இல்லம் இருக்கு. மாசா மாசம் பணம் கட்றோம்னு அங்கே சேர்த்து விட்றலாம். என்ன.. ஒரு மாசம் மட்டும்தான் பணம் கட்டப் போறோம். அதுக்கு மேல அவ தாங்க மாட்டா! சாகறத... நிம்மதியா... அங்கே சாகட்டும். என்ன டாடி சொல்றீங்க?" ப்ரேம் சாதாரணமாய்ச் சொல்ல ரகுராமனுக்கு நெஞ்சை அடைத்தது.

"டேய் ப்ரேம்.. அவ உன்னைப் பெத்தவடா?'

"என்ன டாடி சொல்றீங்க?"

"உங்க இஷ்டம்ப்பா!" சொல்லிவிட்டு கண்களை இறுக மூடி சோபாவில் தலை சாய்த்துக் கொண்டார். மூடிய கண்களுக்குள் லட்சுமி வந்து நின்றாள்.

16

"சீக்கிரம் ஆகட்டும் புண்ணியகோடி... அவளைக் கார்லேயே கொண்டு போய் விட்டுட்டு வந்துடு!" சுகுணா அவசரப்படுத்தினாள்.

"ஆகட்டுமுங்க!" என்ற புண்ணியகோடிக்கு மனம் தாளவில்லை.

'பிழியறவரைக்கும்சக்கையாய்பிழிந்து...தூக்கிஎறிகிறார்களே பாவிகள்! பணக்கார புத்தியைக் காட்டிவிட்டார்களே...!'

புண்ணியக்கோடி லட்சுமி இருந்த அறைக்குள் போனார். மூலையில் சுவற்றில் சாய்ந்தமர்ந்திருந்தாள். பக்கத்தில் அவள் துணிகளடங்கிய மஞ்சள் பை!

அவள் நினைவெல்லாம் நேற்று கெஞ்சாதக் குறையாக கணவர் அவளிடம் வந்து பேசியதிலேயே இருந்தது.

லட்சுமிக்கு வீட்டில் கிடைத்த அவமானங்களை விட ஒரு பெரிய ஆறுதல் வீடியோவில் பார்த்த 'அவன்'தான்.

'இனியென்ன இருக்கிறது? கையும் களவுமாகப் பிடித்து தன் கணவர் எதிரில் அவனை நிறுத்தும்போது, அவன் மறுக்கப்

போகிறானா? இல்லை இவர்தான் இல்லையென்று மறுக்கப் போகிறாரா? பகவானே... இப்பவாவது கண் திறந்தாயே! இதுநாள் வரை அணிந்திருக்கும் சிவப்பு ஆடைக்கு விடிவுகாலம் பிறந்து விட்டது. என் கணவர் என்னை மனைவியாக என் குழந்தைகள் அம்மாவாக ஏற்று அகமகிழும் நாள் இதோ... வெகு விரைவில் இன்றோ... நாளையோ'

அப்போதுதான் வந்து நின்றார் ரகுராமன்.

"நீ...ங்...க...ளா? வாங்க... வாங்க!"

சில கணங்கள் மௌமாய் கரைய...

"லட்சுமி...!" என்றழைத்தார். இதுவரை அழைத்தேயிராத மென்மை அதில் இழையோடியது.

"எ... என்னங்க?"

"நான் சொல்வதை மறுக்காம கேப்பாயா?"

"காத்திருக்கேன்...!"

"ப்ரேமோட கல்யாணம் நல்லபடி நடக்கணும்னு உனக்கு ஆசையிருக்கா?"

"அமோகமா நடக்கணும்னு ஆசைப்படறேன்.. ஆனா"

"வேறெதையும் சொல்ல வேணாம். இதுபோதும் நீ இங்கே இருக்கிறதுல இப்போதைக்கு யாருக்கும் விருப்பமில்லே... இதுல என்னையும், விஜியையும் சேர்த்துக்காதே! என் பேச்சுக்கு மதிப்புக்குடுக்கிறவாள இருந்தா... நீ இங்கே இருக்காதே! ஒரு நல்ல இடத்துல சேர்த்து விட்றோம். அங்கே எந்த குறையுமில்லாம உன்னை கவனிச்சுப்பாங்க.. நீ அங்கே போய்டு! நாளைக்குத் தயாரா இரு!" எப்படியோ சொல்லி முடித்தவர்.. அதற்கு மேல் அவள் முகத்தைப் பார்க்கும் தெம்பின்றி கண்கள் சுரக்க... திரும்பி நடந்து விட்டார்.

தீயில் நின்றிருப்பதைப் போல் உணர்ந்தாள் லட்சுமி.

"கடைசியாய்...கடைசியாய்..என்னை அனாதைஇல்லத்துக்கே அனுப்பி வைக்கப் போறீங்களா? கடைசி வரைக்கும் என்னை நான் நிரூபிக்காமலேயே போகப் போகிறேனா? அந்த அவப் பெயரோட சாகப் போகிறேனா? கண்ணெதிரே குற்றவாளி

சொர்க்க போகமாய். இந்த நிரபராதி கடைசி மட்டும் முள் கிரீடத்தை சுமந்து கொண்டு நிற்கணுமா? முடியாது... அவனை.. அவர் சம்பந்தியை எல்லார் முன்பும் நிறத்தி.

'நிறுத்தி... என்ன செய்யப் போகிறாய்? இவனால்தான் என் வாழ்க்கை அழிந்தது என்று கூறுவாய். எல்லோரும் நம்புவார்கள். அதன்பின்...?

திருமணம் நடக்குமா? ப்ரேம் அந்த பெண் மீது உயிரையே வைத்திருக்கிறானே... திருமணம் நின்னுப் போனால்... உன்னை மன்னிப்பானா? மன்னிப்பை விடு.. ஒரு நல்ல காரியம் இதனால் தடைபடணுமா? அப்பன் செய்த தவறுக்கு... மகள் என்ன செய்வாள்?'

ஒரேயடியாய் மனசாட்சி அவள் வாயை அடைக்க.. எந்த வழியும் புலப்படாமல்...மிக மிக நொந்துப் போய் அமர்ந்து விட்டாள்.

'எனக்கு விதிச்சது அவ்வளவுதானா?'

"லட்சுமிம்மா...!"

"ம்...!" என்று நிமிர்ந்தாள். கண்களில் குளம்

"கிளம்பலாமா?"

"ம்..." என்றவளுக்கு தொண்டையடைத்தது.

வெளியே வந்தாள்.

சற்று தூரத்தில், சுகுணா, ப்ரேம், மதன், மைத்ரேயி, ரகுராமன் நின்றிருந்தனர். விஜி இருந்தால் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணுவாள் என்று பள்ளிக்கு அனுப்பி விட்டிருந்தனர்.

சுகுணா வாசலையே அடிக்கடி பதட்டமாய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

லட்சுமி சுகுணாவின் அருகே வந்தாள். கையெடுத்துக் கும்பிட்டாள்.

ப்ரேமை ஆசை தீரப் பார்த்து பெருமூச்சு விட்டாள். மைத்ரேயியின் கன்னத்தை தொட்டு முத்தம் கொடுக்க வேண்டும் போல் தோன்றிய ஆவலை வெகு பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ரகுராமனைப் பார்த்தும் அழுகை குமிறிக் கொண்டு வர... எதிர்பாராத நேரத்தில் குனிந்து அவர் காலைத் தொட்டு வணங்கினாள்.

"வர்றேங்கய்யா...!" என்றவள் காரில் ஏறி அமர்ந்தாள். வேலைக்காரிக்கு இந்தளவிற்கு கார்ச்சவாரிக்கு அனுமதித்த இவர்கள் நீடுழி வாழட்டும்!' மனது வாழத்தியது.

ரகுராமனுக்கு தொண்டையில் முள் சிக்கிய உணர்வு. விறுவிறுவென்று பங்களாவினுள் சென்று விட்டார்.

"சீக்கிரம் புண்ணியக்கோடி... முக்கியமான ஒருத்தர் வர்ற நேரமாச்சு... அதுக்குள்ளே நீ கிளம்பு!' சுகுணா அவசரப்படுத்த கார் புறப்பட்டது. மனம் தாளமாட்டாமல் கண்களை இறுக மூடி கதவோரம் சாய்ந்து கொண்டாள் லட்சுமி.

சரியாய்.. கார் கேட்டருகேச் செல்ல... எதிலே ஒரு சியல்லோ கார் உள்ளே நுழைய... சில கணங்கள் தடைப்பட்டு திணறி, வழிவிட்டு, புண்ணியக்கோடியின் கார் சாலையில் சீறிப்பாய...

அந்த சில கணங்கள் சம்பத்துக்கு போதுமானதாய் இருந்தது. லட்சுமியின் முகம் அப்பட்டமாய் தெரிய... திடுக்கிட்டு சுயநினைவிற்கு வருவதற்குள் லட்சுமி... வெகுதூரம் போய்விட்டிருந்தாள்.

"வாங்க... வாங்க மிஸ்டர் சம்பத்!"

"வாங்க அங்கிள்!" ப்ரேமும் வரவேற்றான்.

ஒருவாறு தன்னை இந்த சூழ்நிலைக்கு மீட்டுக்கு கொண்டு வந்த ரகுராமன், சம்பத்தின் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"என்- மருமக எப்படியிருக்கா சம்பத்.' இன்விடேஷன் பிரிண்டாகி வந்துடுச்சா?"

"....."

"என்ன சம்பத்... ஆர் யூ ஆல் ரைட்? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?"

"ந... நத்திங் ரகுராமன்!"

"நோ.. நோ.. உங்க முகமே சரியில்லே.. ஸம் திங் டிஃபரெண்ட்...!"

சில கணங்கள் தயங்கிய சம்பத்... விஷயத்தை இவர்களிடம் சொல்வதா, வேண்டாமா? என்று தவித்துப் பின் கேட்டார்.

"வாசல்ல... அம்பாசிடர் கார்ல ஒரு லேடி போய்ட்டு இருந்தாங்களே... அவங்க யாரு?"

தடக்கென நிமிர்ந்தார் ரகு?

'அவளைப் பற்றிய கேள்வி ஏன்?'

சுகுணா முந்திக் கொண்டாள்.

"இந்த வீட்டு குக்! உடம்புக்கு ரொம்ப முடியல... அதனால.. எங்க செலவிலேயே ஆர்பனேஜ்ல சேர்த்து விட அனுப்பறோம்...!" என்றாள் பெருமையாய்.

"குக்கா? அந்தம்மா பேரு லட்சுமிதானே?"

"அட.. அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'

"தெரியுமாவா? நான் யாரை இத்தனை வருஷமா, தேடிட்டிருந்தேனோ, யாருக்கிட்ட மன்னிப்பு கேக்கணும்னு அல்லும் பகலும் துடிச்சிட்டிருந்னோ... அவங்களை இத்தனை வருஷத்துக்குப் பிறகு இப்பத்தான் பார்க்கறேன்..."

"மிஸ்டர் சம்பத்! நீங்க என்ன சொல்றீங்க? லட்சுமிய உங்களுக்கு தெரியுமா? எதுக்காக அவகிட்டே மன்னிப்புக் கேக்கணும்? அவளுக்கும் உங்களுக்கும் என்ன உறவு?" படபடப்பாய்க் கேட்டார் ரகுராமன்.

"சொல்றேன்... சொல்றேன்..." என்றவர் நீண்டதொரு பெருமூச்சுடன் சொல்ல ஆரம்பித்தார்.

"அன்றொரு நாள்.. மழை நாள் இரவு..... இதுதான் நடந்தது! நான் செய்த பெரிய தவறு, வெளியே அந்தப் பெண்ணின் புருஷனும், ஊர் நாட்டாமையும் இருக்க.. நான் நடந்த உண்மைகளைக் கூறாமல் ஓடிப்போனதுதான். நான் போலீஸ் கையில சிக்கக் கூடாதுங்கறதுதான் அப்போதைய பெரிய எஸ்கேப்ப இருந்துச்சு. அதுக்கப்புறம், நான் கொன்னுட்டதா நினைச்சி ஓடி வந்தேனே... அவன், அதான் என் மச்சான், அவன் சாகலை. பொழைச்சிக்கிட்டான். எப்படியோ பிரச்சினைகள் சால்வ் ஆகி... அவனுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை குடுத்து

விரட்டி அடிச்சிட்டு..சொத்தபத்துக்களை விற்று ஊட்டியிலேயே செட்டிலாய்ட ஏற்பாடு பண்ணினேன். அதுக்கு முன்னே அந்த பெண்ணையும், அவ புருஷனையும் சந்திக்கப் போனேன். ஆனா, அங்கே பெரிய அதிர்ச்சிதான் காத்திட்டிருந்தது. அவ... அவபேர் லட்சுமிங்கறதுக்கூட எனக்கு அப்பத்தான் தெரியும். அவ வாழ்க்கையே என்னால பாழனதுன்னு தெரிஞ் சப்ப... ஒன்னு அழுதுட்டேன். ஊர் நாட்டாமையும் விஷயம் இப்படின்னு தெரிஞ்சதும் ஆடிப்போய்ட்டார். அப்பறம் நான் ஊட்டியில வந்து செட்டிலாய்ட்ட பின்பும், அந்த சம்பவம் என்னை உறுத்திக்கிட்டே இருந்தது. அதுக்கப்புறம் அந்த தெய்வத்தை நான் இப்பத்தான் பாக்கறேன். நான் செஞ்ச தப்புக்கு பரிகாரமா... என் கூட பிறந்த தங்கையான நினைச்சு அவளை என் வீட்டோட வச்சு காப்பத்தப் போறேன்.. ஆமா எந்த ஆர்பனேஜ்க்கு அனுப்பியிருக்கீங்க?" சம்பத் கேட்டதும் ரகுராமன் முகம் பொத்தி அழ ஆரம்பித்தார்.

"ஐயோ... லட்சுமி... என் லட்சுமி தங்கமே... உன்னையா நான் சந்தேகப்பட்டேன்? உன் மேலயா சேத்தை வாரியிறைச்சேன்? கண்ணிருந்தும் குருடனாகிப் போன நான் பாவிம்மா... பாவி!"

அங்கிருந்த அனைவரும் இதை எதிர்பார்க்கவில்லை. சுகுணா பதறியடித்து அவரருகில் வந்தாள்.

"என்ன.. என்ன சொல்றீங்க? ஏன் இப்படி அழறீங்க?"

"என்னை மன்னிச்சிடு சுகுணா! என் மனைவி செத்துட்டதா சொன்னேனே... அது பொய்!"

"...."

"அவ உயிரோட இப்ப செத்திட்ருக்கா... என் லட்சுமி கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டிருக்கா...!"

"ல...ட்...சு...மி... உ...உங்க...!"

"ஆமா... என் மனைவிதான்!"

"அ... அப்பா!"

"ஆமாண்டா ப்ரேம்.. கைநீட்டி அடிச்சியே... அவ உன்னை சுமந்து பெத்தவடா...

"ஐயோ...!" யாரோ சாட்டையால் அடித்தது போல் இதயம் வலித்தது ப்ரேமுக்கு.

"நிஜமாவாப்பா சொல்றீங்க?" உதடுகள் துடிக்கக் கேட்டாள் மைத்ரேயி!

"ஆமாம்மா... உனக்கு ஆசை ஆசையா மைத்ரேயின்னு பேர் வச்சதே அவதாம்மா! ஆனா அப்படி பேர் சொல்லிக் கூப்பிட கூட விட்டதில்லையே... நீ...!"

"ஐயோ.. அம்மான்னு தெரியாம நான் எப்படியெல்லாம் திட்டியிருக்கேன்? எவ்வளவு துடிச்சிருப்பாங்க? அவங்கதான் என்னை பெத்தவங்கன்னனு தெரிஞ்சிருந்தா... நான் இப்படியெல்லாம் பேசியிருக்கமாட்டேனே...!" அவளும் அழ... சுகுணா அதிர்ச்சிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

"எவ்வளவு பெரிய தப்பைப் பண்ணிட்டீங்க? அவங்கக் கண்ணெதிரே அவங்களுக்கே திவசம் பண்ணினீங்களே... யாரால பொறுத்துக்க முடியும்? அவங்க பொறுத்துக்கிட்டாங்க. காரணம்... உங்க மேல உள்ள அன்பு. இந்த வீட்டு மகாராணிய ஒரு சமையல்காரியா மூலையில உக்கார வச்சிட்டீங்களே... உங்களுக்கு இதயமே இல்லையா? அவங்கள ஆர்ப்பனேஜ்க்கு அனுப்பறப்பக் கூட வாயேத் திறக்கலியே... அப்படியென்ன கவுரவம் பாழாப் போச்சு? ச்சே...!"

சம்பத் அதிர்ச்சியில் உச்சில் இருந்தார்.

"லட்சுமி... உங்க மனைவியா? மை காட்!" தலையைப் பிடித்துக் கொண்டார்.

"நோ... எங்கம்மாவ நான் சாகவிடமாட்டேன். இப்பவே போய் அவங்களை கூட்டிட்டு வர்றேன்!" ப்ரேம் வழிந்த கண்ணீரை துடைத்தெறிந்து வாசல் நோக்கிப் போக...

"அதுக்கு அவசியமே இல்லை எஜமான்...!" புண்ணியக்கோடி எதிரே வந்து நின்றார்.

"என்ன புண்ணியக்கோடி? அம்மா... என் அம்மாவை விட்டுட்டு வந்துட்டியா?"

"இ... இல்லேய்யா?"

"பின்னே?"

"அவங்க உங்களையெல்லாம் விட்டுட்டு எப்படிப் போவாங்க? பாதி வழியிலேயே திரும்பி வந்துட்டேன்!"

"நல்லதாப் போச்சு!" என்றவன் அகம் மலர காரை நோக்கி ஓடினான். அவன் பின்னே அனைவரும் ஓடி வந்தனர்.

பின் சீட்டில் லேசாய் வாய் பிளந்து உறங்கிக் கொண்டிருந்த லட்சுமியை பாசம் பொங்க பார்த்தவன் "அம்மா" என்றழைத்தான்.

"ஒரு வார்த்தை எங்கிட்ட சொல்லக்கூடாதாம்மா! இனி... எங்களை விட்டு நீ எங்கேயும் போகக் கூடாதும்மா... ஏம்மா... பேச மாட்...!" அவனின் கை அவள் தலையைத் தடவ, லொடக்கென்று அந்தப் பக்கம் சாய்ந்தது.

உடம்பெங்கும் சூடு பரவ, கை நடுங்க அம்மாவை உலுக்கினான்.

"அம்மா... அம்மா... அம்மா...!" என்றலறிய அலறல் எல்லோரையும் தூக்கி வாரிப்போட வைத்தாலும் லட்சுமியை மட்டும் அசைத்துப் பார்க்க வில்லை.

நினைத்ததை நிறைவேற்றி விட்ட அந்த களங்கமில்லா நிலவு மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டிருந்தது.

உண்மை எப்போதும் உறங்கிவிடாது அல்லவா?

(முற்றும்)